மனுபவத்தி

கவிதைக்கான காலாண்டிதழ்

இதழ் 05 ஆடி - புரட்டாதி 2010

முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ்

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும் வாசிப்புக்களுமே
நூல் பண்பாட்டையும் நூலகப் பண்பாட்டையும் உருவாக்க ஒன்றிணைவோம்

BOOK
LAB

தேர்ந்த நூல்களின்
இறக்குமதியாளர் – வெளியீட்டாளர்

புத்தகக்
கூடம்

TP - 021 222 7290, 0771285749
booklab@gmail.com

நேர்காணல்

சி.சிவசேரம்

மொழியாக்கக் கவிதைகள்

சஜீவனீ கஸ்தூரி ஆரச்சி
- எம்.ரிஷான் ஷெரீப்
ஜமீலா நிஷாத்
- ரவிக்குமார்
டபிள்யூ.பி.யேற்ஸ்,
டபிள்யூ.எச்.ஓடன்
- மு.பொன்னம்பலம்
ஹாரிஸ் காலிக்
- எம்.ஏ.நுஃமான்
மரியா யூஜெனியா
- வி.உதயகுமார்
அஜந்தா, முகமது ஆல்வி
- சோ.பத்மநாதன்
கே.சச்சிதானந்தன்,
ஜெய்னே பப்பெக்
- ந.சத்தியபாலன்
மஹேஸ் முனசிங்க
- ஃபஹிமா ஜஹான்
மஞ்சி திவானா,
பிரியா சருக்கே சயேயா
- கஞ்சாக் கறுப்புக் கள்ளன்
யோன் டண்
- வைரமுத்து சுந்தரேசன்
அஞ்சலி சண்டிமா சில்வா
- சு.வில்வரத்தினம்
வில்லியம் வேட்ஸ் வேர்த்
- தி.நிசங்கன்
ஜீன் அரசநாயகம்
- சங்கரசெல்வி
அலன் பிறவுண் ஜோன்
- சத்தியதாசன்
டபிள்யூ.எச்.ஓடன்
- இ.ரமணன்
மஹகம சேகர,
நந்தன வீரசிங்ஹ
- சுவாமிநாதன் விமல்
வெனொனா காடினர்
- சி.ஜெய்சங்கர்

கட்டுரைகள்

மகேந்திரன் திருவரங்கன்
யமுனா ராஜேந்திரன்
செ.யோகராசா
மா.துவாரகன்
ஜெயமோகன்
கருணாகரன்
ந.சத்தியபாலன்

பத்தி

திவ்வியா



மறுபாதி

கவிதைக்கான காலாண்டிதழ்

ஆடி - புரட்டாதி 2010

மறுபாதி

கவிதைக்கான காலாண்டிதழ்

ஆடி - புரட்டாதி 2010

ஆசிரியர்
சிந்தாந்தன்

இணை ஆசிரியர்
சி.ரமேஷ்
அ.கேதீஸ்வரன்

அட்டைப்படம்
புதிய நடன ஆற்றுகை

இதழ் வடிவமைப்பு
பா.அகிலன்

அச்சாக்கம்
சுரபி பதிப்பகம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு முகவரி
மறுபாதி,
அரசடி வீதி,
கோண்டாவில் வடக்கு,
யாழ்ப்பாணம்.

விலை: 80/= (இலங்கை)

தொலைபேசி: **0094 021 3008806**
மின்னஞ்சல்:
marupaathy@gmail.com
வலை:
marupaathy.blogspot.com

இவ்விதழில் பயன்படுத்தப்பட்டிருக்கும் படங்கள் யாவும் இணைய தளங்களிலிருந்து பெறப்பட்டவை. அவ்வினைய தளங்களுக்கு எமது நன்றிகள்.

வணக்கம்,

மறுபாதியின் இந்த இதழ் ஓராண்டு நிறைவிதழாகவும் மொழிபெயர்புக் கவிதைகளுக்கான சிறப்பிதழாகவும் வெளிவருகின்றது. தொடர்ச்சியாக இதழ்களைக் கொண்டுவருவதில் பெரும்பான்மையான சிறு சஞ்சிகைகள் சந்திக்கும் நெருக்கடிகளை நாமும் சந்தித்து வருகின்றோம். ஆயினும் இதழின் தொடர்ச்சியானதும் கிரமமானதுமான வருகைக்காகச் சிரத்தையோடிருக்கின்றோம்.

தமிழில் கவிதை மொழியாக்கம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அநேகமானோர் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். பிறமொழிக் கவிதைகளை வாசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இதனூடாகத் தமிழ் வாசகர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. இதன் ஒரு அங்கமாகவே எமது இந்த முயற்சியுமாகும்.

பிறமொழிக் கவிதைகள் தமிழுக்கு மொழியாக்கம் செய்யப்படுவதுபோல தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு மொழியாக்கம் செய்யப்படுவது குறைவாகவே உள்ளது. ஆங்கில மொழிப் புலமை மிக்கவர்களும் புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் அந்தந்த நாட்டு மொழிப் பரிச்சயமிக்கவர்களும் தமிழ்க் கவிதைகளைப் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்வார்களானால் தமிழ்க் கவிதைகள் பரவலான வாசகப் பரப்பை அடையும் சாத்தியங்கள் ஏற்படும். தமிழ்க் கவிதைகள் உலகளாவிய பரிமாணத்தை அடைய இது ஏதுவாக அமையும்.

மறுபாதியின் தொடர்ச்சியான வருகைக்குப் பங்களித்த கவிஞர்கள், படைப்பாளிகள், விற்பனையில் பங்களித்தவர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது மேலான நன்றிகள். தொடர்ந்தும் யாவரினதும் ஒத்துழைப்புக்களையும் வேண்டிநிற்கின்றோம்.

ஆசிரியர்

இது என்ன விசித்திரமான தேசம்
கைக் குழந்தைகள் தவிர்த்து
ஆண் வாடையேதுமில்லை
எல்லோருமே பெண்கள்
வயதானவர்கள்
நடுத்தர வயதுடையோர்
யுவதிகள்
எல்லோருமே பெண்கள்

விழிகளில் விபம்பைத்தேக்கிய நண்ப
பாழ்பட்டுச் சிதைந்து வெறுமையான
இவ் விசித்திர நகரில்
எஞ்சியுள்ள
எல்லோருமே விதவைகள்

எமக்கெனவிருந்த
கணவர்களைத் தந்தையரைச்
சகோதரரைப் புத்திரர்களை
சீருடை அணிவித்து
வீரப் பெயர்கள் சூட்டி
மரியாதை வேட்டுக்களின் மத்தியில்
புதைத்திட்டோம்
செத்துப் போனவர்களாக



அர்ப்பணா கோர்

சிங்கள மூலத்திலிருந்து தமிழில்
எம். ரிஷான் ஷெரீப்

ட்ரோஜனின் உரையாடலொன்று

சஜீவனீ கஸ்தூரி ஆரச்சியின் இரண்டு கவிதைகள்

புராதன சதுரங்கக் கட்டை

பேரரசன் பார்த்திருக்கிறான்

முன்னோர் நாளில்
தீப்பற்றி எரிந்ததாம் நகரொன்று
யாரோ பெய்மொழித்தி
நிலத்தில் ஓங்கியடித்த சிலம்பொன்றினால்

அரசனின் குற்றமொன்று
தவறொன்று
வஞ்சகமொன்று
காரணம் எதுவாயினும்
எரிந்ததாம் முழு நகரமும்

பேரரசன்
பார்த்திருக்கிறான்

அதோ...அதோ
குற்றம்
தவறு
அத்தோடு
தவறிழைத்தல்
எல்லா இடங்களிலும்

கவனமாயிருங்கள் கவனமாயிருங்கள்

யாரேனும்
இனித் தூங்கவே முடியாத கட்டத்தில்
திரும்பவும்
நிலைத்திலெக்கக் கூடும் சிலம்பொன்றினை

எதிர்ப்பின் குரல்:

நான்கு ஆபிரிக்க-அமெரிக்கக் கவிதைகளின் மொழிபெயர்ப்பும் சில குறிப்புகளும்

– மகேந்திரன் திருவரங்கன் –

விடுதலைக்கான தேடலை வெளிக்கொண்டு வருகின்ற முக்கியமான ஓர் இலக்கியப் பரப்பாகக் கவிதை அமைகிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகளிலே வெள்ளையினத்தவர் ஆபிரிக்க-அமெரிக்கர் மீது பிரயோகித்த அடக்குமுறைக்கு எதிரான குரலாகவும் பெரும்பாலான வெள்ளையின அமெரிக்கக் கவிஞர்களின் படைப்புக்கள் குறிப்பிடத் தவறிய ஆபிரிக்க – அமெரிக்கர்களின் பாரம்பரியம், அவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் எதிர்கொண்ட நிறவேறுபாட்டுப் பிரச்சினைகள், அவர்கள் அப்பிரச்சினைகளை எதிர்கொண்ட பாங்கு என்பவற்றினை வெளிக்கொணரும் தளமாகவும் ஆபிரிக்க – அமெரிக்கக் கவிதைகள் அமைகின்றன. அடையாள வேறுபாடுகள் முரண்பாடுகளுக்கு அடிப்படைகளாக அமைகின்றன. ஆபிரிக்க – அமெரிக்கர்கள் அடையாள வேறுபாடுகளை எவ்வாறு அவற்றின் சமூக அரசியற் தளத்திலே நோக்குகின்றனர் என்பதனை ஆபிரிக்க – அமெரிக்கக் கவிதைகளின் வாயிலாக நாம் அறியலாம். இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் இனவாதத் தீ தமிழர்களையும் ஏனைய சிறுபான்மையினரையும் இலங்கை என்ற தேசத்தின் விளிம்புகளை நோக்கித் தள்ளி வைத்துள்ளது. இனவாதம் மட்டு மல்லாமல் சாதி வெறி, பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள், வர்க்க முரண்கள் என்பனவும் 'தமிழ்ச் சமூகம்' எதிர்கொள்ளும் சவால்களாக உள்ளன. இந்த வகையில் இக் கட்டுரையில் ஒரு சில ஆபிரிக்கக் கவிதைகளினைத் தமிழில் மொழி பெயர்த்து 'விடுதலை' என்ற கருத்தினை நாம் வேறுபட்ட தளங்களிலிருந்து நோக்கலாம் எனக் கருதுகிறேன்.

ஆறுகளைப் பேசும் நீக்குறோ

ஆறுகளை நான் அறிவேன்:
உலகளவு புராதனமான/மனித நாளாங்களில் பாய்ந்து செல்லும்
குருதியிலும் பழமையான ஆறுகளை நான் அறிவேன்.
அவ்வாறுகள் போல் என் ஆத்மா ஆழ வளர்ந்திருக்கிறது.
வைகறைகளின் இளமையில் யூப்பிரடீஸில் நீராடினேன்.
கொங்கோவின் அருகில் ஒரு குடில் அமைத்தேன்;
கொங்கோ என்னைத் தூங்க வைத்தது.
நைலைப் பார்த்தேன்;
அதன் மேலாகப் பிரமிட்டுகளை எழுப்பினேன்.
மிசிசிப்பியின் பாடலைக் கேட்டேன்.
ஆபிரகாம்லிங்கன் நியூஒலியன்ஸ் செல்கையில்;
அதன் சேற்று நிலம் சூரிய அஸ்தமனத்தில் பொன்னாகக் கண்டேன்.

ஆறுகளை நான் அறிவேன்:
தொன்மையான அந்தி ஒளியின் ஆறுகள்
அவ்வாறுகள் போல் என் ஆன்மியும் ஆழ வளர்ந்திருக்கிறது.

பாரம்பரியமும் வரலாறும் மறுக்கப்பட்டு நாகரிகமற்றவன் என வெள்ளை மேலாதிக்கச் சிந்தனையுடன் கலாசாரக் கோட்பாட்டாளர்களால் விபரிக்கப்பட்ட ஆபிரிக்க-அமெரிக்கன் மேலுள்ள கவிதையிலே உலகின் புராதன நாகரிகங்கள் தோன்றிய ஆறுகளுக்கும் தனக்கும் உள்ள பிணைப்பினைக் கோடிட்டுக் காட்டுகிறான். பிரமிட்டுகளை நிர்மாணிப்பதில் தனக்கிருந்த பங்கினை வலியுறுத்தும் அதேவேளை வரலாறு பற்றி அறிந்தவனாகவும் அவ்வரலாற்றில் தன்னைப் பதிவு செய்பவனாகவும் ஆபிரிக்க, அமெரிக்கன் இருப்பதனை 'லாங்ஸ்டன் கியூக்லின்' இக்கவிதை காட்டுகிறது. மொத்தத்தில் இக்கவிதையில் கவிஞர், கவிதை என்ற இலக்கிய வெளியின் ஊடாக புவியியல் வெளிகளை உரிமைகோருவதை நாம் காண்கிறோம்.

நானும் அமெரிக்காவைப் பாடுகிறேன்

நானும் அமெரிக்காவைப் பாடுகிறேன்.
நான் தான் அந்த இருண்ட சகோதரன்
குசினிக்குப் போய்ச் சாப்பிடும்படி என்னை அனுப்புகிறார்கள் அவர்கள்
கம்பனியினர் வரும்போது,
நான் சிரிக்கிறேன்,
நன்றாக சாப்பிடுகிறேன்,
திடகாத்திரமாக வளர்கிறேன்.

நாளை,
நான் மேசையிலே அமர்வேன்,
கம்பனியினர் வரும்போது,
அப்போது
ஒருவரும் துணிந்திடார்
என்னிடம் கூற,
'குசினியிற் போய்ச் சாப்பிடு'

லாங்ஸ்டன் கியூக்லின்

கூடவும்,
நான் எவ்வளவு அழகானவன் எனக் காண்பார்கள்
வெட்கித் தலைகுனிவார்கள்

நானும் அமெரிக்கா தான்

மிகவும் எளிமையான மொழியில் அனைவரும் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய இக் கவிதை 'எதிர்ப்பினை'(Resistance) காலம், இடம் என்ற இரு பரிமாணங்களில் நோக்குகிறது. எதிர்காலம் பற்றி நம்பிக்கையும் திடகாத்திரமும் கொண்டுள்ள ஆபிரிக்க – அமெரிக்கனின் குரல் தன்னை அமெரிக்க தேசத்துடன் தொடர்ந்தும் அடையாளப்படுத்துவதைக் காணலாம். புரட்சி வெடிக்கும்; அதிகாரக் கட்டமைப்பு மாற்றமடையும் என ஜாடையாகக் கூறுகிறது. 'லாங்ஸ்டன் கியூக்லின்' இந்தக் கவிதை. இந்தக் கவிதையிலிருந்து வேறுபட்ட தொனியிலும் எதிர்ப்புணர்வும் மொழியில் வெறுப்புணர்வும் வன்முறையும் மேலோங்கிய கவிதையே 'நிக்கி ஜியோவானி' என்ற பெண் கவிஞரின் 'தற்போதைய உரையாடலின் உண்மைக் கருத்து: கறுப்பு எதிர் நீக்குரோ' (The True Import of present Dialogue: Black vs Negro)

நிகர்
கொல்ல முடியுமா
கொல்ல முடியுமா
நிகரினால் கொல்ல முடியுமா
நிகரினால் ஹொங்கியைக் கொல்ல முடியுமா
நிகரினால் மனிதனைக் கொல்ல முடியுமா
கொல்ல முடியுமா – நிகர்
ஹெ? நிகர் உன்னால் முடியுமா
கொல்ல
இரத்தத்தை உறிஞ்சத் தெரியுமா
நஞ்சு வைக்க முடியுமா
ஒரு யூதனைக் கொல்ல முடியுமா
கொல்ல முடியுமா ஹெ? நிகர்
உன்னாற் கொல்ல முடியுமா
68 எல்டோராடோவால்
புரட்டஸ்தாந்தினை அடித்து விழுத்த முடியுமா
(அதற்குத் தான் அவர்கள் லாயக்கு)
கொல்ல முடியுமா
வெள்ளைத் தலையில் மூத்திரம் பெய்ய முடியுமா
அதனை வெட்ட முடியுமா
கொல்ல முடியுமா
நிகரினாற் சாக முடியும்
எங்களுக்குச் சாகத் தெரியும் என நிரூபிக்கத் தேவையில்லை
எங்களாற் கொல்ல முடியும் என நிரூபிக்க வேண்டும்
அவர்கள் எம்மைக் கொலை செய்ய அனுப்பினார்கள்
ஜப்பானிலே ஆபிரிக்காவிலே
நாங்கள் ஐரோப்பாவைக் காவல் காத்தோம்
கொல்ல முடியுமா
ஒரு வெள்ளையனைக் கொல்ல முடியுமா
உன்னிலுள்ள நிகரைக்
கொல்ல முடியுமா
உன்னுடைய நிகர் மனத்தைக் கொலை செய்ய முடியுமா
உன்னுடைய நிகர் மனத்தைக் கொலை செய்து
உன்னுடைய கருங் கரங்களை விடுவிக்க முடியுமா
திருகுவதற்கு
கொல்ல முடியுமா
நேராகவும்
கொஞ்சம் கூடவும் சுட முடியுமா
அவர்களது மூளைகளைத் தெருவில் பிய்த்தெறிய முடியுமா
அவர்களைக் கொல்ல முடியுமா
அவர்களை ஆசை காட்டிப் படுக்கைக்குக் கொண்டு போய்க் கொல்ல முடியுமா
நாம் வியட்நாமிலே கொல்லுகிறோம்
அவர்களுக்காக
ஐநாவுக்காக,நேட்டோவுக்காக,சியாட்டோவுக்காக,ஐக்கியஅமெரிக்காவுக்காக

நிக்கி ஜியோவானி

எங்கும் எல்லா எழுத்துக்களுக்காகவும் கொல்கிறோம்
ஆனால் கறுப்புக்காக மட்டும் இல்லை
கறுப்புக்காக வெள்ளையைக் கொல்லப் பழகுவோமா
கொல்லப் பழகுங்கள் நிகர்களே
கறுப்பு மனிதர்களாக வாழப் பழகுங்கள்

ஜியோவானியின் இந்த நீண்ட கவிதையில் எதிர்ப்பின் குரல் வன்முறையை ஆயுதமாக்கி டக் கோருகிறது. வெள்ளையினத்தவர், புரட்டஸ்தாந்தினர், யூதர்கள் மீது கவிஞர் கொண்டுள்ள ஆத்திர உணர்வு பொதுமைப்பட்டதாக உள்ளமை இங்கு பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும். கறுப்பினத்தவர் தம்மைப் பாதுகாக்காது வெள்ளையர்களுக்காக ஆயுதம் ஏந்தும் நிலையும் கறுப்பினத்தவர் மத்தியிற் காணப்படும் 'கறுப்பினத்தவர்' என்ற தாழ்ந்த மனநிலையும் மாற வேண்டும் என்பதை இக்கவிதை வலியுறுத்துகிறது. மொழி பெயர்ப்புக் கண்ணோட்டத்தில் நோக்குகையில் இந்தக் கவிதையின் தமிழ் வடிவில் 'நிகர்' என்ற சொல் மொழி பெயர்ப்புக் குள்ளாகாது பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் 'நிகர்' என்ற பதம் கறுப்பினத்தவரைக் குறிப் பிடுவதற்கு வெள்ளையினத்தவராற் பயன்படுத்தப்பட்ட ஒரு இழிவான பதமாகும். அதே போன்று 'ஹொங்கி' என்ற பதம் கறுப்பினத்தவரால் வெள்ளையர்களைத் தரக்குறைவாகக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். இந்த இரு பதங்களையும் தமிழிலே மாற் றம் எதுவுமின்றிப் பயன்படுத்துவது மொழியின் ஊடாக எவ்வாறு இனவெறி உணர்வுகளும் அவற்றுக்கான பதில் உணர்வுகளும் வெளிவருகின்றன என்பதைக் குறிப்பிடுவதற்கு உதவும். அதே போன்று 'மூத்திரம் பெய்ய முடியுமா' என்ற தொடர் ஆங்கிலக் கவிதையிலே இடக்கரடக்க லுக்கு அப்பாற்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் (Can you piss on a blond head)என்ற தொடருக்கு கருத்தில் அண்மித்ததாக இருக்கும் என நான் எண்ணுகிறேன். ரொபேர்ட் ப்றொஸ்ற் (Robert Frost) வோல்ட் விற்மன் (Walt Whitman) ஆகிய வெள்ளை அமெரிக்கர்களின் கவிதைகளிற் காணப்படும் 'நாகரிகமான' மொழிநடைக்கு எதிரான போக்கு நிக்கி ஜியோவா னியின் இந்தக் கவிதையில் வெளிப்படை. இந்த மொழி நடையை கவிஞர் தனது எதிர்ப்பு அரசியலை வெளிக்கொணர்வதற்குப் பயன்படுத்தும் ஒரு யுக்தியாக நாம் வாசிக்க முடியும்.

ஆனாலும் நான் எழுதுகிறேன்

நீ என்னை வரலாற்றில் எழுதலாம்
உன்னுடைய கசப்பான தீரிபுபடுத்திய பொய்களைக் கொண்டு
நீ என்னை அழுக்கில் போட்டு மிதிக்கலாம்
ஆனாலும் தூசு போல, நான் எழுவேன்.

என்னுடைய நிந்தனை உன்னைக் கலக்கமடையச் செய்கிறதோ?
ஏன் நீ சோர்ந்து போய் இருக்கிறாய்?
ஏனெனில் நான் நடப்பதைப் பார்க்கையில்
எனது வரவேற்பறையில் எண்ணெய்க் கிணறுகள் இறைப்பது போலுள்ளதோ?

சந்திரன்களைச் சூரியன்களைப் போலவே
அலைகளின் நிச்சயத் தன்மையுடன்
நம்பிக்கைகள் உயரப் பாய்வது போலவே
இன்னும் நான் எழுவேன்

நான் உடைந்து போய்விடப் பார்க்க விரும்பினாயோ?
குனிந்த தலையுடனும் பதிந்த கண்களுடனும்
கண்ணீர்த் துளிகள் போன்று வீழும் தோள்களுடன்

மாயா அஞ்சலோ

ஆவி நிறைந்த அழுகைகளாற் பலவீனமுற்றிருக்க

என்னுடைய இறுமாப்பு உனக்குப் பிரச்சினையோ?
உன்னால் அதனைச் சகிக்க முடியாதோ?
ஏனெனில் நான் சிரிப்பதைப் பார்க்கையில்
என்னுடைய பின் வளவில் தங்கச் சுரங்கங்கள் இருப்பது போலுள்ளதோ?
நீ என்னை உன் சொற்களாற் சுடலாம்
உன் கண்களால் கூறிடலாம்
உன்னுடைய வெறுப்பினால் கொலை செய்யலாம்
ஆனாலும் காற்றுப் போல எழுவேன்.

என்னுடைய கவர்ச்சி உன்னைக் கலக்கமடையச் செய்கிறதோ?
நான் நடனம் ஆடுவதைப் பார்க்கையில் எனது தொடைகளின் சங்கமிப்பில்
வைரங்களை வைத்திருக்கிறேன் போலுள்ளமை
உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா?

வரலாற்றின் வெட்கக்கேடான குடில்களிலிருந்து எழுகிறேன்
வலியில் வேர்கொண்ட கடந்த காலத்திலிருந்து எழுகிறேன்
நான் அகன்ற தாவிச் செல்லும் கரும் சமுத்திரம்

அலைகளிலே பொங்கி வரும் கரடி

பயங்கரங்கள் பயங்களின் இரவுகளை விடுத்து எழுகிறேன்
அதிசயமான தெளிந்த வைகறையினுள் எழுகிறேன்
எனது மூதாதையர் தந்த பரிசுகளையும் கொண்டு
அடிமையின் கனவும் நம்பிக்கையும் நானே
எழுகிறேன்
எழுகிறேன்
எழுகிறேன்.

பூர்வீக ஆபிரிக்கச் சிற்பம்

'மாயா அஞ்சலோவின்' இந்தக் கவிதையின் பெண் பேசுநர் ஆபிரிக்க – அமெரிக்கர்கள் விடுதலை பற்றிய நம்பிக்கையுடன் வாழ்வதனைக் கூறுகிறார். பெண்மை அழகு பொதுவா கவே ஐரோப்பிய வெள்ளையினப் பெண்களுக்குச் சார்பான முறையிலே கட்டமைக்கப்பட்ட ஒரு கருத்து ஆகும். இக்கவிதையில் ஆபிரிக்க-அமெரிக்கப் பெண்ணின் உடலும் அதன் கவர்ச்சித் தன்மையும் வெள்ளையர்களைக் கலங்கச் செய்வதாகக் குறிப்பிடும் கவிஞர், கறுப் பினப் பெண் களின் உடலழகை மேலுயர்த்திக் கொண்டாடுவதன் மூலம் பெண்மை அழகு பற்றிய ஐரோப்பிய ஸமயவாதக் கருத்துக்களைக் கேள்விக்குள்ளாக்குகிறார்.

மேலுள்ள நான்கு ஆபிரிக்கக் கவிதைகளும் எதிர்ப்பு என்ற கருத்தினை வேறுபட்ட நோக்கு களிலிருந்து பார்க்கின்றன. வரலாறு, துணிவு, எதிர்காலம் பற்றிய நம்பிக்கை என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு விடுதலை வேட்கையை விளக்கும் கவிதைகளாக முதலிரு கவிதை களும் உள்ளன. மூன்றாவது கவிதை ஆபிரிக்க-அமெரிக்கர் மத்தியில் எதிர்ப்புத் தொடர் பான விழிப்புணர்வை ஏற் படுத்துவதற் ம் வன்முறையை எதிர்ப்பின் சாதனமாக மாற்ற முடி யும் என்பதை யும் காண்பிக்கிறது. நான்காவது கவிதை ஆபிரிக்க-அமெரிக்கரின் இன விடு தலையை ஆபிரிக்க-அமெரிக்கப் பெண்களின் விடுதலையுடன் இணைத்து நோக்க முற்படுகி றது. இந்த வகையில் விடுதலை பற்றிய சிந்தனையைப் பரந்துபடச் செய்வதில் இந்தக் கவிதை கள் திறவுகோல்களாக உள்ளன என்பது எனது எண்ணமாகும். ●

ஜமீலா நிஷாத் கவிதைகள்

தமிழில்-ரவிக்குமார்

சிற்பம்

உடலின் நகரத்தில் அலைந்து திரிந்து
காயம்பட்ட அந்த மனிதன்
இதயத்தின் வாசற்படியில் வீழ்ந்துகிடக்கிறான்
அவன் அறிவான்
கன்னமுச்சுட ஒரு தோட்டம்தான் என்று
ஆனால் அதன் நறுமணம்
மனதுக்கு எட்டும் தொலைவில் இல்லை
அவன் நிற்கும் அந்த இடம்
சிதைந்து கிடக்கும் அந்த இடம்
அது அகமதாபாத்
அவன் எண்ணிப் பார்க்கிறான்
எரியும் கேசத்தோடு மின்னிக்கிடந்த அந்த ரத்தம் தோய்ந்த சீலையை
கும்பிட்டு எழுந்த கரங்கள்
வெட்டி வீழ்த்தப்பட்டதை
கண்ணீர் முத்துக்களால் கோர்க்கப்பட்ட ஜெபமாலை
இப்போது இரும்புச் சங்கிலியாய் ஆகிவிட்டதை
வாய் பிளந்து நா வறள
காயம்பட்ட அந்த மனிதன் சந்திலில் வீழ்ந்து கிடக்கிறான்
அவனது உள்ளங்கையில் ஒரு விளக்கு எரிகிறது
அது ஒவ்வொரு உடலையும் ஒவ்வொரு ஆன்மாவையும்
பிரகாசிக்கச் செய்கிறது
பாருங்கள்! ஒரு பெண்ணின் ஆன்மா எழுவதை
அது வானின் கல்லறையிலிருந்து எழுகிறது.

வாலி குஜராத்தி - 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முஸ்லீம் கவிஞர். அவரது கல்லறை குஜராத் கலவரத்தின்போது மதவெறியர்களால் சிதைக்கப்பட்டது.

என் உள்ளங்கை சிவந்திருக்கிறது
மருதாணியால் அல்ல ரத்தத்தால்
என் இதயத்திலிருந்து கிளம்பும் ஒரு கதறல்
இந்தப் பூமியை எரித்துச் சாம்பலாக்குகிறது
நீ மழையாய் / நான் காற்றாய் மாறி
உன் பாதையில் விசிறினேன்
எந்த வழியென்று எனக்கென்ன தெரியும்
உனது பார்வையில் தெரியும்
என் புல்லின் பனித்துளி
ஒளிபடும்போது வானவில் ஆகிறது
இருள்விழும்போது தேனாய் மாறுகிறது
அது என் விழிகளின் மின் நிகழும் கனவா
உன் பெருமூச்சால் எழுந்த கானலா
நான் இதைச் சிந்தித்தபடி இருந்தேன்
எங்கும் செல்லவில்லை
இங்கேயும் போகவில்லை அங்கேயும் போகவில்லை
என் பாலை தேடுகிறது
எனக்கென்ன தெரியும் எங்கே அவனென்று
வா, நாம் அத்தனை புதிர்களையும் தொலைக்குவோம்
வா, நாம் புதிய உலகமொன்றை சிருஷ்டிப்போம்
நமது புதிய பாதைகளை
புதிய கனவுகளை, புதிய நேசங்களை
புதிய உணர்வுகளை, புதிய இசையைத்
தேடுவோம்
நாமெல்லோரும் ராணிகள் தேவதைகள்
எல்லாக் கதைகளும் காதல் கதைகள்

மஸ்ஹர்பொட்

ஜமீலா நிஷாத்: ஹைதராபாத்தில் வசிக்கிறார். உருது மொழியில் எழுதும் இவரது கவிதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. நாற்பது பெண் கவிஞர்களின் படைப்புக்கள் இடம் பெற்ற நூலொன்றின் தொகுப்பாசிரியர். ஆந்திர மாநில அரசின் விருது உட்படப் பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறார். இந்தக் கவிதைகளை உருதுவிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஹொஷாங் மெர்ச்சன்ட்.

நன்றி: Interior Decoration - Poems by 54 women from 10 languages, Women Unlimited, 2010.

டபிள்யூ.பி.யேற்ஸ், டபிள்யூ.எச். ஓடன் கவிதைகள்

தமிழில் - மு.பொன்னம்பலம்

1995ல் இங்கிலாந்தின் தேசிய கவிதை நாளேடு தற்செயலாக ஒன்றிணைந்த Book worm அமைப்பால் தேசத்தின் சிறந்த கவிதையைக் கண்டுபிடிக்க நடாத்தப்பட்ட தேர்வில் றுட்யார்ட் கிப்லிங்கின் (Rudyard kipling) 'IF' (இயலுமானால்) கவிதை பெருந்தொகை வாக்குகளால் வெற்றிபெற்றாலும். அது கீழ்த்தரமான ஆரவாரத்தால் அள்ளுப்படும் மக்களுக்கான (JINGOISTIC) குப்பையென பரிகசிக்கப்பட்டது. ஆயினும் சிறந்த கவிதைகளை யாத்த கவிஞர்களைக் கண்டுபிடிக்க அத்தேர்வு உதவிற்று. இவர்கள் எழுதிய பல்வகைக் கவிதைகளால் வாக்குகள் பிரிக்கப்பட்டாலும் ஈற்றில் KEATS, W.B YEATS, W.H.AUDEN ஆகிய மூவரே முதல்த் தரத்தவராய் உயர்ந்தனர். (பார்க்கவும் BBCல் வெளியிடப்பட்ட (THE NATION'S FAUOURITE POEMS) இங்கே இரண்டு காதல் கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இங்கே AUDEN னின் கவிதையில் வரும்

'அவன் செத்துப் போனான் என்ற செய்தியை வானத்தின் மீது எழுதியவாறே'

(SCRIBBLING ON THE SKY THE MESSAGE HE IS DEAD)

என்ற வரிகளையும் இரண்டாவது சூரியோதயத்தில் வரும் 'முகில்களின் மீது நெருப்பு தன் செய்தியை எழுதியாயிற்று' என்ற சேரனின் கவிதை வரிகளையும் கவனிக்கவும்.

என்னிடம் சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்

என்னிடம்
சித்திரப் பின்னல்கள் இட்டு நெய்யப்பட்டும்
தங்கமும் வெள்ளியும் ஒளிகால
நீலமும் மந்தமும் இருண்டதுமான
இரவையும் பகலையும் பாதி ஒளியையும் இட்டு
உருவாக்கப்பட்ட சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்
அவற்றை நிச்சலனத்தின் கீழ் பரப்புவேன்
ஆனால் நான்,
ஏழையாய் இருப்பதால்
என்னிடம் இருப்பதெல்லாம் கனவுகளே
எனது கனவுகளை நிச்சலனத்தின் கீழ் பரப்பியுள்ளேன்;
மெதுவாக மிதியுங்கள்,
ஏனெனில்,
என் கனவுகள் மீது மிதிக்கிறீர்கள்.

- டபிள்யூ பி.யேற்ஸ் -

- டபிள்யூ. எச். ஓடன் -

நிறுத்திவிடு அனைத்துக் கதகதப்புகளையும்
தண்டித்துவிடு தொலைபேசியை,
வீணிவழியும் எலும்புத்துண்டோடு
முரைக்கும் நாயைக் கடுத்துவிடு.
வீணைகளை நிசப்திக்க வை, மௌனித்த மேளங்களோடு
சவப்பெட்டியைக் கொணர்க. துயருறுவோர் வரட்டும்.

அவன் செத்துப் போனான் என்ற செய்தியை
வானத்தின் மீது எழுதியவாறே
தலைக்கு மேலால் புலம்பியழி வட்டமிட்டும் வானூர்திகள்.
பொதுவாய்த் திரியும் புறாக்களின் வெண்கழுத்துக்களைச் சுற்றி
கருந்துணி சுருள்களை இடுக,
பாதை ஒழுங்கைக் கவனிக்கும் பொலிசார்
கறுத்த பருத்தி உள்ளுறையைக் கைகளில் அணியட்டும்.

அவனே எனது வடக்கு, எனது தெற்கு, எனது கிழக்கும் மேற்கும்,
வேலை நாள் வாரமும் ஞாயிறு ஓய்வும்
எனது மதியம் என் நள்ளிரவு
எனது பேச்சு என்பாடல் எல்லாமாய் அவனே இருந்தான்
காதல் எக்காலமும் நீடித்திருக்குமென நான் நினைத்தேன், அது என் தவறு.

நட்சத்திரங்கள் இனித்தேவையில்லை, அனைத்தையும் அணைத்துவிடு
நிலாவை பெதிபிட்டுப்போடு, கதிரவனைச் சிதைத்துக் கலைத்துவிடு
சமுத்திரத்தைக் கொட்டிவிடு, காட்டைக் கூட்டி ஒதுக்கிவிடு
காரணம், இனி எவையும் எந்த நல்லதையும் நல்கப் போவதில்லை.

பன்னிரண்டு பாடல்கள்

பன்னிரண்டு பாடல்கள் என்ற தலைப்பில் வந்த ஒன்பதாவது (IX) பகுதி இது.

"மொழி பெயர்ப்பு நேர்மையானதாக இருக்க வேண்டும் மேலாக எதையும் எதிர்பார்க்க எமக்கு உரிமையில்லை"

சி.சிவசேகரம்

1970களில் அரசியல் இலக்கிய விழிப்புணர்வும் தென்னிந்தியக் கவிதைகளின் செல்வாக்கும் வலுப்பெற்ற சூழலில் தீவிர தமிழ் உணர்வின் பிடிப்பிலிந்து விலகி மாக்சிய சிந்தனையின் ஈர்ப்பினால் கவிதை இலக்கியத்தில் ஈடுபட்டவர் சி.சிவசேகரம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்த சிவசேகரம் இயந்திரப் பொறியியல் பற்றியும் எழுத்துச் சீர்த்திருத்தப் பிரச்சினை பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்தோடு மொழிபெயர்ப்புத்துறையிலும் தீவிரமாக இயங்கி வருகின்றார். இதுவரை இவரது நான்கு கவிதை மொழியாக்க நூல்கள் வெளிவந்துள்ளன. மாஓ சேதுங் கவிதைகள்(1976), பனித்தல் மறந்தவர்(1993), பாலை – அடோனிஸ் கவிதைகள்(1999), மறப்பதற்கு அழைப்பு(2003).

– சி.ரமேஷ்

ரமேஷ்: 1974,1975 காலப் பகுதியில் 'நதி' என்ற சிறிதேட்டுக்கூடாக மொழி பெயர்ப்பாளராக அறிமுகமானீர்கள் தொடர்ந்தும் இத்துறையில் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள் அவ்வகையில் உங்கள் ஆரம்ப கால முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்.

சிவசேகரம்: என்னுடைய முதலாவது தமிழாக்கம் HW Long fellow எழுதிய Slave's Dream 'அடிமையின் கனவு' என்ற தலைப்பில் 1955-56 வாக்கில் பாடசாலைக் கையெழுத்துச் சஞ்சிகையில் வந்தது. அது பத்து ஆண்டுகள் முன்னம் காலஞ் சென்ற நண்பர் சித்தி அமரசிங்கம் வெளியிட்ட திருகோணமலைக் கவிதைத் தொகுதியில் வெளிவந்த போது தான் அப்படி ஒன்றைச் செய்ததே நினைவுக்கு வந்தது. அது மூலத்துக்கு விசுவாசமான சந்த ஒழுங்குடைய தமிழாக்கம் என்பதைவிடக் குறிப்பிடத்தக்கதாக அதில் ஏதும் இல்லை. 1960-61 மட்டில் கவிதை எழுதுவதில் எனக்கு அக்கறை விடுபட்டுப் போயிற்று. பின்பு 1972இல் தான் மெல்ல மெல்லத் தொடங்கினேன். 'நதி' ஆசிரியர் குழுவில் என்னையும் காலஞ் சென்ற நண்பர் விஸ்வானந்த தேவனையும் விட மற்றவர்கள் ராசு, கந்தையா, தங்கவேல் எல்லாரும் மலையகத்தவர்கள். தொழிலாளர் வீட்டுப்பிள்ளைகள், தொழிலாளர்கள். எல்லாரிடமும் நல்ல வாசிப்புப் பழக்கம் இருந்தது. அவர்களுடைய பரிந்துரையின் பேரிலேதான் முதலிற் சில தமிழாக்கங்

களைச் செய்தேன். பின்பு அப்போது சீனப் பண்பாட்டுப் புரட்சியின் தாக்கம் இன்னமும் வலுவாயிருந்த சூழலில் Chinese Litelature இல் கண்ட பொருத்தமான சில கவிதைகளைத் தமிழாக்கினேன். முதல் இரண்டு இதழ்களும் றோணியோப் பிரதிகளாக வெளியாயின. அடுத்த இரண்டோ மூன்றோ கண்டியில் அச்சாயின இறுதியாக ஒரு கெடுதி வந்தது. கண்டி கலாச்சாரக் குழுவுக்கு உதவுவதாகச் சொல்லிக் கொழும்பிலிருந்து வந்த சிலர், அதற்குரிய விடயங்களைக் கொண்டு போய்த் தாங்கள் விரும்பிய விடயங்களைச் சேர்த்து நம்முடையவற்றை நீக்கி என்னுடைய தமிழாக்கங்களின் கையெழுத்துப் பிரதிகளையும் தொலைத்துவிட்டனர். அப்போதெல்லாம் ஃபோடோ கொப்பி வசதி குறைவு. போனவை போனவை தான். எனினும் என் முக்கியமான தமிழாக்கங்கள் 'பீக்கிங் றிவ்யூ'வில் வந்த மார்க்சியச் கோட்பாட்டு விளக்கக் கட்டுரைகள். முப்பது கட்டுரைகள் வரையிலானது தமிழாக்கியிருப்பேன். அவற்றைத் தட்டெழுத்து றோணியோ பிரதி எடுத்துக் கொண்டு சென்ற விஸ்வானந்ததேவன் எங்கோ அவற்றைத் தவற விட்டுவிட்டார். ஆனாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் உற்சாகத்துடன் செயற்படக் கூடியளவுக்கு கண்டி கலாச்சாரக் குழுவினருடனான உறவு அமைந்திருந்தது. 'மாஓ சேதுங்' இறக்க முன்பு என்று நினைக்கிறேன். அவருடைய முக்கியமான கவிதைகள் இரண்டை முதற் தடவையாக ஆங்கிலத்திற் காணக் கிடைத்தது.அவை எந்தச் சஞ்சிகையில் வெளிவந்தன என நினைவில்லை. அவை பரவலான வரவேற்பைப் பெற்றன. எனவே கண்டி கலாச்சாரக் குழு நண்பர்கள் மாஓ இறந்த 1976ம் ஆண்டு முடிவிற்குள் மாஓவின் ஆங்கில மொழியாக்கக் கவிதைத் தொகுப்பைத் தமிழில் எப்படியாவது கொண்டுவர வேண்டுமென விரும்பினர். அதன் பயனாக நான் எடுத்த முயற்சி கண்டி கலாச்சாரக் குழு நண்பர்களின் கடும் உழைப்பினூடு நூல் வடிவம் பெற்றது. காலஞ் சென்ற சசி கிருஷ்ணமூர்த்தியும் நண்பர் கந்தையாவும் சில திருத்தங்களைப் பரிந்துரைத்தனர். எனினும் அந்தத் தமிழாக்கத்தில் பல குறைபாடுகள் இருந்தன. ஆயினும் எஸ்.வி.ராஜதுரை 1980 அளவில் வெளியிட்ட நூலில் பல பயனுள்ள குறிப்புக்கள் இருந்தாலும், கவிதைகளாக அவரது தமிழாக்கம் குறைபாடானது என்பதே என் எண்ணம். எனவே ஒரு தமிழாக்கத் தொகுதிக்கான தேவை இன்னமும் உள்ளது. பல காரணங்களால் என் முதல் முயற்சியைச் செம்மைப்படுத்தும் பணி முடங்கிக் கிடக்கிறது. என் கவிதைகள் கணையாழி, அலை, செங்கொடி, கழனி, குமரன், தொழிலாளி போன்ற சஞ்சிகைகளில் வந்தாலும் தமிழாக்கங்கள் என்று நான் அதிகம் முயன்றதாகக் கூறமாட்டேன். 1983 வரை அலையில் தான் பெரும்பாலான என் தமிழாக்கங்கள் வெளியாயின என்று நினைக்கிறேன். எனினும் மாஓ சேதுங் கவிதைகளை வீட்டால் நான் அன்று தமிழாக்கியவற்றின் தொகை சிறிதே என்பேன்.

ரமேஷ்: பொதுவாக ஈழத்தில் நடைபெற்ற மொழிபெயர்ப்பு முயற்சிகள் பற்றி உங்கள் கருத்தென்ன?

சிவசேகரம்: ஈழத்தவரின் கவிதைத் தமிழாக்கங்கள் என்று கூறும்போது கே.கணேஷ் தான் முதலில் நினைவுக்கு வருபவர். அவர் மரபுச் சந்தத்திற்கே தமிழாக்கங்களைத் தருவார். அந்தச் சந்த வடிவங்கள் எல்லாக் கவிதைகட்கும் ஏற்றவையா என்று நான் நினைத்ததுண்டு. எனினும் மூலத்துக்கு விசுவாசமான தமிழாக்கம், ஓசை நயம் என்பன அவருடைய கவிதைகளின் முக்கியமான பண்புகள். மிகச் சிறந்த ஈழத்து ஆங்கில-தமிழ் மொழி பெயர்ப்பு என்றால் ஏ.ஜே.கனகரத்னாவிடமிருந்தே அது வந்திருக்க முடியும். எனினும் அவர் தமிழாக்கிய அளவு மிகக் குறைவு. முருகையனின் தமிழாக்கங்கள் செய்நேர்த்திமிக்கவை. என்னும் அவர் தொடர்ச்சியாகத் தமிழாக்கங்களில் ஈடுபட்டவரல்ல. பண்ணாமத்துக் கவிராயர், நுஃமான், சோ.பத்மநாதன் போன்றோர் கணிசமான அளவில் நேர்த்தியான தமிழாக்கங்களை வழங்கியோரென்பேன். யேசுராசா குறைந்த அளவிலேயே தமிழாக்கியிருந்தாலும் அவற்றில்

செய்நேர்த்தி இருந்தது. இதை ஏன் கூறுகிறேன் என்றால் மூலத்திற்கு உடன்பாடற்ற பலவற்றை அண்மைக் காலங்களிற் கண்டுள்ளேன். அதைவிடத் தம்மை முக்கியமான மொழிபெயர்ப்பாளர்கள் என்று அறிவித்துக் கொள்ளுகிற சிலரது தமிழாக்கங்களில் வலிந்து கருத்துக்களைத் திணிக்கும் ஒரு போக்கும் காணப்படுகிறது. இதற்கான காரணம் ஆங்கில அறிவுப் போதாமையா அல்லது மூலக் கவிதையை விளங்கிக் கொள்ளும் ஆற்றலின்மையா அல்லது அவசரமா என்று விளங்கவில்லை. எவ்வாறாயினும் ஈழத்துக் கவிதைத் தமிழாக்கங்கள் ஒரு சிலர் போகக் கவிஞர்களாலேயே மேற்கொள்ளப்பட்டமை அவை தமிழகத்தின் தமிழாக்கங்களை விடக் கவித்தவமாக அமைய உதவியதாகத் தோன்றுகிறது. ஈழத்துச் சமகாலம் சற்றுக் கவலை தருகிறது.

ரமேஷ்: *முக்கியமான மொழிபெயர்ப்புக்கள் என்று அறிவித்துக் கொள்ளுகிற சிலரது மொழி பெயர்ப்புக்களில் வலிந்து கருத்துக்களைத் திணிக்கும் தன்மை உள்ளதாகக் கூறுகிறீர்கள் இதனை Adaptation என்னும் தன்மைக்குள் அடக்கலாமா?*

சிவசேகரம்: மொழிபெயர்ப்பாளர் எவரும் ஒன்றை மொழிபெயர்ப்பதானால் அதை மொழிபெயர்ப்பதாகத் தெரிவிக்க வேண்டும். ஒன்றைத் தமிழிற் தழுவுவதானால் அவ்வாறு தெரிவிக்கவேண்டும். ஒன்றை வாசித்த அருட்டுணர்வில் எழுதினால் அதை மொழி பெயர்ப்பாகக் கொள்ள இயலாது. நான் கூறியது மொழிபெயர்ப்பின் பகுதிகள் மூலத்திற்கு விசுவாசமாக இல்லாமை பற்றியது.

ரமேஷ்: *1970களுக்கு முன்னர் ஈழத்தில் கவிதை மொழி பெயர்ப்பு முயற்சிகளைத் தேன்மொழி, நோக்கு, கவிஞன் ஆகிய சஞ்சிகைகள் மேற்கொண்டன. அவ்வகையில் அச் சஞ்சிகைகளின் முக்கியத்துவம் என்ன?*

சிவசேகரம்: நீங்கள் குறிப்பிட்ட சஞ்சிகைகள், தமிழாக்கத்தைத் தமது இலக்கிய முயற்சியின் ஒரு பகுதியாகக் கொண்டவை. தமிழாக்கத்தின் நோக்கம் உலகக் கவிதைப் பரப்பின் ஒரு பகுதியை நம்மவர்கட்குப் பழக்கப்படுத்துவது என்ற வகையில் அவை ஆற்றிய பணி மிக வரவேற்கத்தக்கது. எனினும் தமிழாக்கப்பட்ட நாவல்களையோ சிறுகதைகளையோ தேடி வாசிக்கும் அளவுக்கு நம்மிடையே தமிழாக்கக் கவிதைகளைத் தேடி வாசிக்கும் ஆர்வம் இருந்ததாகக் கூற இயலுமா? நீங்கள் குறிப்பிட்ட சஞ்சிகைகள் கவிதைக்கான சஞ்சிகைகளாக முக்கியத்துவம் பெற்றவை. தமிழாக்கத்தில் அக்கறையைத் தூண்ட அவை எத்தகைய பங்களித்தன என்று கூற அவற்றின் காலத்தில் எழுதி வந்த கவிஞர்கள் என்னிலுங் கூடிய தகுதியுடையவர்களென்று நினைக்கிறேன்.

ரமேஷ்: *நீங்கள் மொழி பெயர்த்த கவிதைத் தொகுப்புக்களில் பாலை, மறப்பதற்கு அழைப்பு ஆகியவை வாசகர் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தை மற்றையவை ஏற்படுத்தவில்லையே?*

சிவசேகரம்: நான் நான்கே கவிதைத் தமிழாக்கத் தொகுப்புக்களையே வெளிக் கொண்டு வந்துள்ளேன். மாஓ சேதுங் கவிதைகளின் விநியோகக் குறைபாடும் வெளியீட்டு நிகழ்வுகள் போதாமையும் அவற்றைப் பரவலாக வாசகர் நடுவே கொண்டு செல்ல உதவவில்லை. அதைப் பற்றிய ஒரே ஒரு சிறு அறிமுகக் குறிப்புத் தவிர வேறெதுவும் வெளியானதாகவும்

நினைவில்லை. கண்டி கலை இலக்கியக் குழு நண்பர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டவை பலரைச் சென்றடைய வாய்ப்பிருக்கவில்லை. 'பணிதல் மறந்தவர்' நான் இங்கிலாந்திலிருந்த போது தமிழகத்தில் சவுத் ஏசியன் புக்ஸ் அச்சிட்டு வெளியிட்டது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நூல்களின் அச்சிடலும் விநியோகமும் சில இடர்பாடுகட்குட்பட்டிருந்தன என்பதையும் குறிப்பிட வேண்டும். எனினும் அது தமிழகத்தில் சற்றுக் கவனிப்பைப் பெற்றது என்றே நினைக்கிறேன். 'பாலை'யும் 'மறப்பதற்கு அழைப்பு'ம் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தால் அவை இலங்கையில் வெளியானமையும் அவை வெளியான சற்றே சாதகமான சூழலும் அதற்கு உதவியிருக்கலாம்.

ரமேஷ்: *ஆயினும் 'பாலை' மிகவும் முக்கியமான பனைட்பெனக் கவிஞர் கருணாகரன் போன்றோர் கூறுகின்றனர். ஆனாலும் இலக்கிய விமர்சகர்களோ அல்லது பத்திரிகைகளோ ஏன் அந்நூலுக்குரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை?*

சிவசேகரம்: இது உண்மையில் என்னிடம் கேட்க வேண்டிய கேள்வியல்ல. கருணாகரன் என்னிடம் அந்த நூலைச் சிலாகித்து ஆறேழு ஆண்டுகள் முன் கூறியிருந்தார். நூல் வெளியீட்டின்போது சாதகமான கருத்துக்கள் சொல்லப்பட்டன. இவற்றை விட்டால் குறிப்பிடத்தக்க விதமான பின்னூட்டம் எதுவுமே கிடைக்கவில்லை. பலஸ்தீனம் பற்றித் தமிழ்த் தேசிய உணர்வுடையோரிடையே அக்கறை விடுபட்டுப் போனது ஒரு காரணமாக இருக்கலாம். அடோனிஸின் கருத்துக்களுக்கும் மேலாகக் கவிதைக்கான புதிய வடிவங்களையும் மொழி நடையையும் கருதியே அடோனிஸைத் தெரிந்தேன். டர்வீஷ் பிறர் மூலமும் தமிழருக்கு அறிமுகமானவர் எனவே அவருடைய கவிதைகளைத் தமிழில் தொகுத்து வழங்க முற்படவில்லை. நுஃமானின் அண்மைய டர்வீஷ் கவிதைகளின் தொகுப்பு டர்வீஷ் கவிதைகள் பற்றிய நல்ல தொரு அறிமுகம் என்பேன்.

ரமேஷ்: *நீங்கள் மொழிபெயர்த்த 'பணிதல் மறந்தவர்' தொகுப்பிலிருந்து 'மிரேஸ் வாவ் ஹெலுப்' எழுதிய தொப்போலியன் என்னும் கவிதையை குறித்த நோக்கொன்றுக்காக 'கறுப்பு' என்னும் தொகுப்பில் மூன்றாங்கைத் தழுவலாகச் சுகன் தன் பெயரில் பதிவு செய்துள்ளார் இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

சிவசேகரம்: சுகனிடம் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்கிறீர்கள். மேலே மொழி பெயர்ப்புப் பற்றிச் சொன்னதைச் சுகன் எனது தமிழாக்கத்தைத் தான் விரும்பிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதுடன் சேர்த்து நோக்குங்கள். மூலக் கவிதை பலவாறான வாசிப்புக்களை இயலுமாக்குவதாகவே அமைந்தது. நெப்போலியனின் பேருக்குப் பதிலாக வேறு எத்தனையோ பேர்களில் ஒன்றை மூலக் கவிதையிலேயே பொருத்தியிருக்கலாம். மாணவர்கள் கூறும் பதில்களை அதற்கேற்ப மாற்றியிருக்கலாம். சுகன் தனது நோக்கத்தில் வெற்றி பெற்றிருந்தால் – அவருடைய நோக்கத்துடன் உடன்பாடின்றிக் கூட அவருடைய ஆற்றலை மெச்சுவேன். நோக்கத்தை விமர்சிப்பது இன்னொரு விடயம்.

ரமேஷ்: *இலங்கைத் தமிழரில் பலருக்குச் சிங்கள மொழியில் அறிவு இருந்தும் அவர்களால் ஏன் நல்ல சிங்கள மொழி பெயர்ப்புக் கவிதைகளைக் கொண்டுவர முடியாதுள்ளது.*

சிவசேகரம்: சிங்களத்திலிருந்து தமிழுக்கு இலக்கியத்தை மொழி பெயர்ப்பது எளிதல்ல. சில ஆண்டுகள் முன்பு மூலத்தை வாசிக்காமலேயே ஒரு சிங்கள நாவல் மிகக் குறைபாடான முறையிலேயே தமிழ்ப்படுத்தப்பட்டதைப் பற்றி எழுதினேன். ஏனெனில் தமிழாக்க மொழிநடையிலேயே அப்பட்டமான கோளாறுகள் இருந்தன. மொழி பெயர்ப்பாளர் மிகவும் கோபித்து எழுதினார் மேற்கொண்டு நான் எதையுமே சொல்ல முற்படவில்லை. சிலர் மிகப் பொறுப்பான

முறையில் சிங்களத்திலிருந்து தமிழுக்குக் கொண்டு வருகின்றனர். பலர் ஆங்கிலத்தையே நம்பியுள்ளனர். அனைத்தினும் மேலாக வாசிப்பு – குறிப்பாகச் சிங்கள ஆக்கங்களை தமிழ் வடிவில் வாசிப்பது என்ன நிலையில் உள்ளது.

ரமேஷ்: நீங்கள் 'அபராதி நானல்ல', 'சமூக விரோதி' என்னும் நாடக நூல்களையும் தமிழாக்கம் செய்துள்ளீர்கள். இவ்வகையில் கவிதையை மொழி பெயர்க்கும்போதும் நாடகத்தை மொழி பெயர்க்கும் போதும் நீங்கள் எதிர்கொள்ளும் வித்தியாசங்கள் என்ன?

சிவசேகரம்: எனது நாடகத் தமிழாக்கங்களில் 'வஸ்யாவ் ஹவெலின்' இரண்டு நாடகங்கள் அவைக்காற்றுக் கலைக் கழகத்தினரால் பன்முறை மேடையேற்றப்பட்டன. ஹரல்ட் பின்டரின் 'போகிற வழிக்கு ஒன்று' மேடையேற்றங்கள் பல கண்டது. 'அபராதி நானல்ல' அரியெல் டோர்ஃப்மன் எழுதிய 'Death and the maiden' நாடகத்தின் தமிழாக்கம். அது மிகவும் சிதைக்கப்பட்டு மேடையேற்றப்பட்டதைப் பற்றிச் சென்ற ஆண்டு ஒரு குறிப்பு எழுதியிருந்தேன். மேடையேற்றத்திற்காகக் கோரப்பட்டே 'சமூக விரோதி' என்ற ஆர்தர் மிலரின் Enemy of the people தமிழாக்கப்பட்டது. ஆனால் இது வரை மேடையேறவில்லை. எனவே நானாக விரும்பி நாடகத் தமிழாக்கம் எதையும் நான் மேற்கொள்ளவில்லை என உங்களுக்கு விளங்கும். மேற்குறிப்பிட்ட ஐந்தையும்விட ஹாவெலின் மூன்றாவது நாடகமொன்றையும் முழுமை கருதித் தமிழாக்கினேன். அம்மூன்றும் நூலாக்கத்திற்காக தட்டெழுதப்பட்டு மூன்று நான்காண்டுகளாகக் கிடற்பிற் போடப்பட்டுள்ளன. நாடகங்களை நான் மொழிபெயர்த்தேன் என்பதைவிடத் தமிழில் தழுவினேன் என்பது கூடப் பொருந்தும். ஒரு கவிதையோ கதையோ போலன்றிப் பார்வையாளர்களை உடனடியாகவே சென்றடையும் தேவை நாடகத்திற்குண்டு. அயற்பேர்கள் அந்நியமான சூழல்கள் என்பன நமது பார்வையாளர்களுக்கும் நாடகத்திற்குமிடையே மதில்களாக எழலாம். மொழி பெயர்ப்புக்கான ஐரோப்பியச் சூழல் வேறு. நமது சூழலைக் கருதி நிகழ்வுகள் கூடச் சற்று மாற்றியமைக்கப்படுகின்றன. ஆயினும் மூலக் கதைக்கும் அது கூறும் செய்திக்கும் விசுவாசமாகவே ஒவ்வொரு தழுவலும் அமைந்தது என்றே நினைக்கிறேன்.



ரமேஷ்: போராட்ட சூழலில் வெளிவந்த மையால் நூமோவின் பலஸ்தீனக் கவிதைகள் பெரிதும் பேசப்பட்டன. ஆனால் உங்களின் 'பாலை', 'மறப்பதற்கு அழைப்பு' ஆகியவையும் இச்சூழலிலேயே வெளிவந்தன ஆயினும் பலஸ்தீனக் கவிதைகள் பேசப்பட்ட அளவுக்கு இத்தொகுப்புக்கள் பேசப்படவில்லையே ஏன்?

சிவசேகரம்: 'பலஸ்தீனக் கவிதைகள்' வந்த போதிருந்த போராட்டச் சூழல் வேறு 'பாலை'யும் 'மறப்பதற்கு அழைப்பு'ம் வந்த போதிருந்த போராட்டச் சூழல் வேறு அன்று பிற ஒடுக்கப்பட்ட மக்களுடன் தம்மை இனங்காணும் ஒரு போக்குக் குறிப்பிடத்தக்களவில் இருந்தது. ஒவ்வொரு பலஸ்தீனக் கவிதையையும் ஈழத் தமிழரின் நிலையுடன் பொருத்திப் பார்க்கும் அக்கறை இருந்தது. இருபது முப்பது ஆண்டுகள் பிந்தி இருந்த சூழல் என்ன? நம்மை ஆண்ட பரம்பரை ஆளப்போகும் பரம்பரை என்று கருதி உலகை ஆளுகிற பரம்பரை

களுடன் உறவு தேடுகிற பார்வை ஒரு புறமும் விடுதலைப் போராட்டத்தையே நிராகரித்து ஒதுங்குகிற ஒரு போக்கு இன்னொரு புறமுமாக இருந்த ஒரு சூழலை முன்னையதுடன் ஒப்பிடலாமா? இதே நூல்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் யாராலாயினும் தமிழாக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பின் கொஞ்சங் கூடிய கவனிப்பை பெற்றிருக்கலாம். வரவேற்பைப் பெற்றிருக்குமோ என்று என்னாற் கூறவியலாது. அதைவிட முக்கியமாகக் கடைசி முப்பது ஆண்டுகளில் கவிதை வாசிப்பு மிகவும் நலிந்து போயுள்ளது. தமிழ் மக்களின் சமூக விடுதலைக்குப் பயன்படக் கூடிய படைப்புகள் என் மொழிபெயர்ப்பு ஆற்றலுக்கு உட்பட்டுத் தமிழின் செம்மையாக வரக் கூடுமானால் அதைத் தமிழில் வழங்க என்னாலானதைச் செய்கிறேன். அம்முயற்சிகள் பயன்படலாம் பயன்படாதும் போகலாம்.

ரமேஷ்: கவிதை வாசிப்பு கடந்த 30 ஆண்டுகளில் நலிவடைந்து வந்துள்ளதாகக் கூறுகிறீர்கள் இதற்கு நீங்கள் அடிப்படையாக முன்வைக்கும் ஆதாரங்கள் என்ன?

சிவசேகரம்: முக்கியமாகக் கவிதை நூல்களின் விற்பனை மிகவும் குறைவாக உள்ளமை. மற்றது இலக்கிய உரையாடல்களில் சமகாலக் கவிதைகள் பற்றிப் பேசப்படும் அளவு. அத்துடன் வளரும் கவிஞர்கள் பலரும் முக்கியமான கவிஞர்கள் பற்றி அறியாமலிருக்கும் நிலை. இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பிருந்த சூழலுடன் இன்றைய சூழல் பற்றிய என் தனிப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்படையிலேயே நான் இதைக் கூறுகிறேன். நான் சொன்னது தவறாகுமென்றால் அது மிக மகிழ்ச்சிக்குரியதே.

ரமேஷ்: தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் வந்தளவிற்கு அவை பற்றிய மதிப்பீடுகள் வரவில்லை என்ன காரணம் என நினைக்கின்றீர்கள்?

சிவசேகரம்: தமிழில் வரும் மூல நூல்களுக்கான மதிப்பீடுகளே போதியளவில் வருவதில்லை. தமிழாக்கங்களை நான் விமர்சித்து எழுதிய காலம் ஒன்று இருந்தது. நான் மொழிபெயர்ப்பு எதைப் பற்றியும் கருத்துக் கூறிப் பல காலம். தமிழகத்தின் 'கனதியான சஞ்சிகை' ஒன்றில் பத்தாண்டுகள் முன்பு வந்த சில பிரெஞ்சு–தமிழ், ஸ்பானிய–தமிழ் மொழிபெயர்ப்புக்கள் பற்றி எனது விமர்சனக் குறிப்புக்கள் அடங்கிய மடல்கள் 'அஞ்சலிற் காணாமற் போயிருக்கின்றன' நமது படைப்பாளிகள் விமர்சனங்களைத் தைரியமாக எதிர்கொள்ளப் பழகும் வரை மதிப்பீடுகள் வெறும் புகழுரைகளாகவே அமையும் அல்லது வராமலே போகும்.

ரமேஷ்: புலம் பெயர்ந்து தமிழர்கள் உலகெங்கிலும் வாழ்கின்றார்கள் அவர்களுக்கு தாம் வாழும் நாடுகளின் மொழிப் பரிட்சயமிருந்தும் அவர்கள் அம்மொழிகளிலுள்ள இலக்கியங்களை மொழிபெயர்ப்பதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையே?

சிவசேகரம்: சிங்கள–தமிழ் மொழி பெயர்ப்புப் பற்றிக் கேட்டிருந்தீர்களே அதற்கான விடையை இதற்கும் பொருந்திப் பார்க்கலாம்.

ரமேஷ்: ஒரு மொழி பெயர்ப்பு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?

சிவசேகரம்: ஒரு மொழி பெயர்ப்பு நேர்மையானதாக இருக்க வேண்டும். அதற்கு மேலாக எதையும் எதிர்பார்க்க எமக்கு உரிமையில்லை.

ரமேஷ்: முருகையனுடைய பெரும்பான்மையான மொழிபெயர்ப்புக்கள் தன்னியம் சார்ந்தது எனக் குறை கூறப்படுவதுண்டு. இக்குறை கூறுதலில் உண்மையுள்ளதாகக் கருதுகிறீர்களா?

சிவசேகரம்: முருகையனுடைய தமிழாக்க முயற்சிகள் மூன்று கட்டங்களில் நிகழுகின்றன. முதலில் நன்கறியப்பட்ட ஆங்கிலக் கவிஞர்கள் சிலரது கவிதைகளை அவர் தமிழாக்கினார். அக்காலத்தில் மொழியும் இலக்கியமும் பற்றிய முருகையனுடைய பார்வை மரபு சார்ந்ததாகவே இருந்தது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக நவீனக் கவிஞர்கள் பக்கம் அவரது கவனம் திரும்புகிறது. இறுதியாகக் கவிஞர் நுஃமானின் வேண்டுதலுக்கிணங்கி அவர் தமிழாக்கிய ஏழு பலஸ்தீனக் கவிதைகள் வருகின்றன. சமூக நீதி பற்றிய முருகையனின் பார்வை மாக்சியத்தை உள்வாங்கிய பின்பான அவரது கவிதைகளும் தமிழாக்கத் தெரிவுகளும் அவரது தொடக்கக் காலத்தவையிலும் இருந்து வேறுபடுவதை நாம் அறிவோம். இதிலே குறை கூற என்ன உள்ளது என்று விளங்க வில்லை. முருகையனின் தெரிவுகளையும் கருத்துக்களையும் அவற்றுக்குரிய காலத்தின் அடிப்படையில் மதிப்பிட இயலுமே ஒழிய கால வேறுபாடற்ற ஒப்பீடுகள் வலிந்து குற்றங் காணுவோரை விட வேறு எவருக்கும் பயன் தரா.

ரமேஷ்: கவிதை வாசிப்புச் சூழலை ஏற்படுத்துவதற்கும் மொழிபெயர்ப்பு முயற்சிகளின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் என்ன செய்யலாம்?

சிவசேகரம்: பாடசாலைகட்கு ஒரு முக்கிய பங்குண்டு. ஆனால் பாடசாலைகள் இன்று சிறார்களின் சிந்தனை விருத்திக்கு அதிகம் உதவுவதாக நான் நம்பவில்லை. பல்கலைக் கழகங்களின் நிலையும் வருந்தத்தக்கதே. மாணவர்களின் இலக்கிய அக்கறையும் வாசிப்புப் பழக்கமும் ஆசிரியர்களாலும் பெற்றோராலும் ஊக்குவிக்கப்பட வேண்டியவை. எனவே பாரிய முன்னேற்றம் வேண்டுமாயின் அது சமூக மட்டத்தில் நிகழ வேண்டும். நாம் செய்யக் கூடியன சில உள்ளன. கவிதைகள் வெளிவரும் இதழ்களில் தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளை வாசிக்கச் சிறு இலக்கிய வட்டங்களை உண்டாக்கி ஒவ்வொரு கவிதையினதும் வேறுபட்ட வாசிப்புக்களை பரிமாறுவதும் தயக்கமின்றி திறனாய்வுக்குட்படுத்துவதும் ஒன்று. கவிதை எழுதலுக்கும் வாசிப்புக்கும் திறனாய்வுக்குமான பயிற்சிப் பட்டறைகளை நடத்தல். நமது ஞாயிறு நாளேடுகளில் வரும் இலக்கியப் பக்கங்களை நிரப்புகிறவர்களிடம் புதிய பயனுள்ள விடயங்கட்கு அந்தப் பக்கங்களைப் பயன்படுத்துமாறு வற்புறுத்திப் பார்க்கலாம். தமிழாக்கங்களுக்கு இடம் ஒதுக்குமாறு வற்புறுத்தலாம். அனைத்தினும் முக்கியமானது வாசிப்புப் பழக்கம் அதை மீட்டெடுக்காமல் நாம் எதை எழுதியும் என்ன பயன்?

ரமேஷ்: இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள் கலைக்கும் இலக்கியத்திற்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை தமிழ்ப் பத்திரிகைகள் கொடுப்பதில்லையே ஏன்?

சிவசேகரம்: ஆங்கிலப் பத்திரிகைகளில் தமிழ் இலக்கியத்திற்கு ஒதுக்கப்பட்ட சொற்ப இடம் எவ்வளவு நல்ல முறையில் பயன்படுகிறது என்று கவனித்தாலே நமது பத்திரிகையாளர்களிடையே உள்ள இலக்கிய அக்கறையின் தன்மை விளங்கும். இவ்விடத்துப் பத்திரிகைகளையும் பத்திரிகையாளர்களையும் பற்றி விமர்சிப்பதற்கும் மேலாக வாசகர்களாகிய நாம் என்ன செய்கிறோம் என்ற கேள்வி எழுகிறது. தமிழ்ச் சமூகம் தனது இருப்பையும் முனைப்பையும் பற்றிப் பல கேள்விகளை எழுப்ப வேண்டிய நிலையில் உள்ளது. அக்கேள்விகளில் இலக்கியம் தொடர்பானவையும் உள்ளடங்கும் போது நமது ஊடகங்களும் அதைப் பற்றிக் கவனங் காட்ட இடமுண்டு.

ரமேஷ்: நீங்கள் உட்பட சில இலக்கியப் படைப்பாளிகள் பத்திரிகைகளில் அரசியலையே தொடர்ச்சியாக எழுதி வருகிறீர்கள் ஆனால் இந்த இடத்தில் மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபடலாமல்லவா?

சிவசேகரம்: நான் அரசியலை மட்டுந் தான் எழுதுகிறேன் என்று யார் சொன்னார்கள்? தமிழாக்கவில்லை என்று யார் சொன்னார்கள்? என் சொந்தப் பேரில் வெளிவராத எனது அரசியல் எழுத்தை அடையாளங் காணுகிறவர்களுக்கு என் சொந்தப் பேரில் வெளிவராத எனது தமிழாக்கங்களை அடையாளங் காண இயலாதுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் நான் எழுதிய கவிதைகளின் அளவைவிட நான் தமிழாக்கியவற்றின் அளவு பன்மடங்கு அதிகம்.

ரமேஷ்: தமிழிலிருந்து பிறமொழிக்கு கொண்டு செல்லும் முயற்சிகள் ஈழத்தைப் பொறுத்தவரை எப்படியுள்ளது? அவ்வாறு சென்று குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய படைப்பு எது? படைப்பாளி யார்?

சிவசேகரம்: ஜெயசங்கர் தனது Third Eye சஞ்சிகை (பின்பு இணையத்தளச் சஞ்சிகை) மூலம் கொஞ்சம் செய்து வந்துள்ளார். New Democracy மும்மாத ஏட்டில் ஓரிரு கவிதைகள் ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகின்றன. வேறு பல முயற்சிகள் நடக்கின்றன என்றே நினைக்கிறேன். இந்தியாவிலிருந்து வரும் The Little Magazine குறிப்பிடத்தக்களவில் தமிழ் சிங்களக் கவிதை, கதை மொழி பெயர்ப்புக்களை வெளியிட்டு வருகிறது. பத்மநாப ஐயருடைய தூண்டுதலில் 'Lute song and Lament' என்ற தலைப்பில் செல்வா கனகநாயகம் தொகுத்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் ஆறேழு ஆண்டுகள் முன்பு வந்தது. சற்றுப் பின்னர் கொழும்பில் 'Sri Lankan Mosaic'என்ற தலைப்பில் சிங்கள தமிழ்ச் சிறுகதைகள் தொகுக்கப்பட்டன. 'Nethra' சஞ்சிகையில் சில மொழிபெயர்ப்புக்கள் வந்தன. சிங்களத்துக்குக் கொண்டு செல்லும் முயற்சிகள் எப்போதும் போல நடந்து கொண்டுள்ளன. புதிதாக வரும் சிங்களக் கவிதை மாத ஏடு ஒன்றில் இப்போது தமிழ்க் கவிதை மூலமும் மொழி பெயர்ப்பும் வெளிவருகிறது. அதைத் தொடராகச் செய்ய எண்ணுகிறார்கள் என்று அறிகிறேன். நமது வாசிப்பும் செயற்பாடும் குறைவாக உள்ள நிலையில் மொழி பெயர்ப்பு அக்கறையும் குறைவாகவே இருக்கும்.

ரமேஷ்: புலம் பெயர் சமூகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு தமிழுக்கு வந்த தாக்கத்தை ஏற்படுத்திய நூல்கள் எவை?

சிவசேகரம்: இதற்கான விடையைக் கூறுமளவுக்கு என் வாசிப்பின் அளவு போதுமான தல்ல. என்பது பெருமளவும் சமூகப் பொருத்தப்பாடு சார்ந்தது. குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய எதையும் என்னால் நினைவுகூர இயலவில்லை. ●

சந்தா விபரம்

தனி இதழ்	– 30/=
ஆண்டுச் சந்தா	– 150/=
இரண்டாண்டுச் சந்தா (தபாற் செலவு உட்பட)	– 300/=

சந்தா செலுத்த விரும்புவோர்:–
ச.உதயணன்
கொமர்ஷல் வங்கி,
கணக்கு இல. – 8060070929
யாழ்ப்பாணம்.

ஹாரிஸ் காலிக் கவிதைகள்

எங்கள் பால்காரன் ஷேரு ஒரு பொய்யன்
பச்சைப் பொய்யன்
அவனது பொய்கள் அவனது பாலைப் போலவே வெள்ளை
பால் சுத்தமே இல்லை நீ தண்ணி கலந்திருக்கிறாய்
ஒவ்வொரு நாள் காலையிலும் என் தாய் இப்படிச் சொல்வாள்
அவளது வழக்கமான சமரசப்படும் கோபத்துடன்
தண்ணீ? அதுக்கு வாய்ப்பே இல்லை
ஷேரு அதை மறுத்துச் சொல்வான்

அவனது தொந்தி அவனது தகப்பனைதைவிடப் பெரியது
அவன் சுமந்துவரும் பெரிய பால் வாளியைவிட பாரமானது
அவன் நடக்கும்போது ஒரு விரித்த குடைபோல் அது தோன்றும்
அது பொக்கணி வானத்தையன்றி நம்மையே நோக்கி இருக்கும்

ஒரு மீவு நாளில்
எம் தெருச் சிறுவர்கள்
அவனைச் சூழ்ந்து கொண்டு கேட்பார்கள்
உன் தொந்திக்குள் என்ன இருக்கு ஷேரு? அது மிச்சம் பெரிசு
பால், அது நிறையப் பால்
பெருஞ் சிரிப்போடு அவன் சொல்வான், புதிய பசுச் சாணம் மணக்க
அவனை அவர்கள் நம்புவார்கள், ஆனால் ஐயத்துடன்
அவர்கள் சிறுவர்கள், ஆனால் முட்டாள்கள் அல்ல
சில ஆண்டுகளின் பின்னர்
சிறுவர்கள் வளர்ந்தார்கள், ஷேரு பொய்யன் என்பது
இப்போது அவர்களுக்கு நிச்சயம்
அதைவிட முக்கியம்
அவன் வேறுபட்ட உச்சரிப்புடன் பொய் சொல்கிறான் என்பது

ஆகவே ஒரு நாள் அவனது தொந்தியை அவர்கள் துளைத்தனர்
வெளியேறியதெல்லாம் இரத்தம் மட்டுமே
பாலே இல்லை
பொய்யர்கள் நரகத்தில் அழுந்துவர்

– தமிழில்
எம்.ஏ.நுஃமான்

பொய்யர்கள் நரகத்தில் அழுந்துவர்*

* கடந்த பத்தாண்டுகளில் தொடர்ந்த வன்முறைகளில் இறந்த அப்பாவிக் கராச்சியர் அனைவருக்கும்.

தெரு நாய்கள்

ஒரு வாரகால தெருநாய் ஒழிப்பு
நடவடிக்கைகளின் கீழ்
கராச்சி மாவட்ட மத்திய
நகராட்சிச் சபை
444 நாய்களைக் கொன்றது

அதே மாவட்டத்தில்
நாம், ஜனநாயகவாதிகள்
888 தெரு மனிதர்களைக் கொல்ல நேர்ந்தது
அவர்களின் வேட்டைப் பற்களுக்கு
நாம் எல்லோரும் பயந்ததே காரணம்

ஒரு உண்மையான சர்வதேசவாதியின் ஒப்புதல்

நான் ஒரு உலகப் பிரஜை
முன் எப்போதும்
இனி எப்போதும்
ஆனால் சுவாமி,
நான் எங்கு போனாலும்
கராச்சியைப் பற்றியே நினைக்கிறேன்
லாகூரைப் பற்றியே கனவு காண்கிறேன்
எனக்கு வேறொன்றுமே தெரியாது

அன்பே உனக்கான என் பிரார்த்தனை

உன் கண்களில் சூரியன் உதிக்கட்டும்
உன் காலடியில் அது மறையட்டும்
பொய்களிலிருந்து உண்மையை எடுக்க
என்றும் உன்னால் இயலட்டும்
தீர்ப்பு வழங்காதிருக்கும் தைரியம்
உனக்குக் கிடைக்கட்டும்
பூரணமற்றவளாய், நிச்சயமற்றவளாய்,
திட்டவட்டமற்றவளாய் நீ திகழ்க
அப்போதுதான் உன் எதிரிகளை நீ மறப்பாய்
அவர்களுக்கெதிராய் வன்மம் கொள்ளாய்
உன் கனவுகள் எல்லாம் பலிக்கட்டும்
மகிழ்ச்சி உன் உள்ளங்கையில் வளரட்டும்.

ஹாரிஸ் காலிக்

ஹாரிஸ் காலிக் (Harris Khalique) ஆங்கிலத்திலும் உருதுவிலும் எழுதும் இளம் தலைமுறையைச் சேர்ந்த முக்கியமான பாகிஸ்தானியக் கவிஞர்களுள் ஒருவர். இவர் 1966ல் கராச்சியில் பிறந்தார். இவரது முதல் உருதுக் கவிதைத் தொகுதி 1991ல் வெளி வந்தது. இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகள் இவரது If Wishes Were Hoses (1996), Divan (1998) ஆகிய ஆங்கிலத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

மரியா யூஜெனியா பிரேவோவின் இரண்டு கவிதைகள்

மரியா யூஜெனியா பிரேவோ

தமிழில்: வி.உதயகுமார்

முன்குறிப்பு: யமுனா ராஜேந்திரன்

பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் வாழ்ந்து வரும் மரியா யூஜெனியா பிரேவோ இலத்தீனமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலிநாட்டிலிருந்து வெளியேறி இங்கிலாந்தில் அரசியல் அகதியாகத் தஞ்சம் பெற்ற பெண்கவி. 1973ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி ஜனநாயக பூர்வமாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சிலியின் இடதுசாரி அரசின் ஜனாதிபதியான அலண்டே, அமெரிக்க சிஐஏயின் உதவியுடன் கொடுங்கோலன் பினேசேயினால் கொல்லப்பட்ட பின், சிலியின் இடதுசாரி அரசு இராணுவக் கலகத்தினால் கவிழ்க்கப்பட்ட எழுபதுகளில் இங்கிலாந்தில் அரசியல் அடைக்கலம் பெற்றவர் மரியா பிரேவோ. அன்றைய இராணுவ ஜெனரலான பினேசோ மனித உரிமைமீறல் புரிந்தவர் எனப் பின்னாளில் ஆட்சியேற்ற சிலியின் இடதுசாரித் தாராளவாத ஆட்சியாளர்களால் முடிவு செய்யப்பட்டார். எந்தவிதமான அரசியல் மரியாதையும் அங்கீகாரமும் இல்லாமல் கொடுங்கோலன் பினோசே மரணமுற்றான். இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் இறுதி யில் உலகப் பெண் கவிகள் வரிசையில், உயிர்மை பதிப்பகத்தின் சார்பாக வெளிவரவிருக் கும் நிகரகுவா பெண்கவி கிளாரிபல் அலக்ரியா, குர்திஸ் பெண்கவி சூமன் ஹார்தி போன் றோரின் கவிதைகளுடன் மரியா பிரேவோவின் தேர்தெடுக்கப்பட்ட கவிதைகளின் தொகுப் பும் இடம்பெறுகிறது. சிலியில் நடைபெற்ற இராணுவ வேட்டையின்போது நோபல் பரிசு பெற்ற கவிஞன் பாப்லோ நெருதாவின் வீடு சூறையாடப்பட்டது. அந்த நினைவுகளுடன் தனது வீழ்ந்துபட்ட நிலம் எதிர்கொண்ட சித்திரவதைகளும் இடிபாடுகளும் குறித்து எழுதப்பட்ட மரியா பிரேவோவின் கவிதைகள் இங்கு இடம்பெறுகின்றன.

கடல் யாத்திரைகள்

உனது வீட்டுக்குச் செல்கிறேன் பாப்லோ நெருடா
லா சேஸ்கோனாவுக்கு
அனா மரியா உனது பொக்கிஷங்களைக் காட்டுகிறாள்
உனது நூலகத்தினூடாகப் பயணிக்கிறேன்
காட்சிப் பொருட்களின் கடலூடாக
உனது பொன்னூல்களின் ஊடாக
மெதுவாகப் பயணிக்கிறேன்
ஒளியில் நனைந்து
அந்த அற்புதத்தால்
என் கண்கள் சுவருகின்றன



இறுதியாக உனது அரகேனாவை அடைகிறோம்
வெண்ணிறமான சிறிய ஒரு பழங்கால நூல்
அதன் தோல்டை என் கைகளை நிறைக்கிறது
தன் விலங்குத்தன வெதுவெதுப்போடு
என் கைகளை வரவேற்கிறது

பிறகு உன் குரலைக் கேட்கிறேன்
காலத்தின் அடியாழத்திலிருந்து
நான் அலோன்சோவுடன்
என்னோடு பேசக் கேட்கிறேன்

நான் நீந்துகிறேன்
கீழே அடியில் செல்கிறேன்
எனது எலும்புகளின் பூர்வ ஆழங்களுக்கு
எனது நாளங்களுடே பாய்ந்து கொண்டிருக்கும்
குருதியை உணர்கிறேன்
இருண்ட ஊசியிலைக் கானகங்களுடே

தொட்டுப் பார்க்காமலேயே
என்னுடைய ஆசியக் கன்ன எலும்புகளை உணர்கிறேன்
உன்னூடாக
உன் வீட்டினூடாக
உனது புத்தகங்களின் ஊடாக
எனது தோற்றமயக்கங்களுக்கு
உடனே வந்து சேர்கிறேன்

நானும் கூட இதுவாக இருக்கிறேன்
இந்தச் சந்திப்பு முனையாக
உனது வீட்டின் ஊடாக
உனது புத்தகங்களின் ஊடாக
உனது அரகேனாவின் ஊடாக
என்னால் பான் அலோன்சோவிடம் பேச முடிகிறது
அவரிடம் சொல்ல முடிகிறது.
இந்த நாட்டில் இன்னும் போர் நடந்து கொண்டே இருக்கிறது.

என் வாழ்வின்
மிக உறைந்த
மிகக் குறுகிய ஞாயிற்றுக்கிழமை

என் வாழ்வின் அனைத்து
ஞாயிற்றுக்கிழமைகளைப் பார்க்கிலும்
அந்த ஞாயிற்றுக்கிழமை மிக உறைந்ததாக
மிகக் குறுகியதாக இருந்தது

விசாரணை மேற்கொள்ளவோ சித்திரவதை புரியவோ
அவர்கள் வராத ஒரு நாள் அது
ஆக
அது ஒரு உண்மையான ஞாயிற்றுக்கிழமையாக
இருந்தது

போர்க் கைதிகளான நாங்கள் ஒப்புகொள்ள முடிந்தது
சுவர்களுக்கும் மறைப்புகளுக்கும் பின்னால்
சூரியன் எங்கிருப்பான் என்று ஊகித்தபடி
கொஞ்சம் தேறுதல் கொள்ளவும் முடிந்தது
அவர்கள் உண்மைக் கொடுத்ததை
சாவகாசமாய் வாந்தியெடுக்க நேரமும் கிடைத்தது
நெற்றிப்பொட்டின் துடிப்பைக் குறைத்துக்கொள்ள
முடிந்தது
சித்தப் பிரமையில் ஏற்படும் காய்ச்சலையும்
கடுத்துக்கொள்ள முடிந்தது

இருந்தும் அந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு
சவச்சடங்காகவே தொடர்ந்தது
துக்கத்தை அணிந்தபடி
குளிர் கொண்டு எங்களை மரத்துப்போகச் செய்தபடி
மீள் ஒரு வழியாக அந்த நாட்பொழுது
ஒரு திரி மரணமென
எங்கள்மீது விழப் போகும்போது
அந்தச் சீழ்க்கையைக் கேட்டேன்
தோழமை மிகுந்த அந்தப் பாடலைக்
கேட்டேன்

அது உன் குரல், பிட்டே சீகர்
உன் தொலைதூரக் குரல்
ஒளியே அனைத்துமான ஒரு தொலை
தூரத்திலிருந்து
அது வந்தது
மலர்களைக் கோரும் உன் குரல்
அமைதியைக் கோரும் உன் குரல்
அது உன் குரல், பிட்டே சீகர்
ஒன்றன் பின் ஒன்றாக
உன் பாடல்கள் அனைத்தையும்
ஒலித்தது அந்தச் சீழ்க்கை

சீட்டியடித்தவனை
நான் சந்திக்கவே இல்லை
அவன் பெயரையோ
வயதையோ
அறிந்துகொள்ளவே இல்லை
அந்த நாள்
அந்த மதியம்
நொருக்கப்பட்ட எங்கள் வாழ்வு
அந்த ஞாயிற்றுக்கிழமை
அனைத்தும் உன் மனிதக் குரலில்
முழ்கிப் போயின
முடிவில் அந்த நாள்
தன் துக்க ஆடையைத் துறந்தது

இருந்தார்போலிருந்து சிறிது சிறிதாக
மெதுவாக
நாங்கள் அனைவருமே
மீண்டும்
மனிதப் பிறவிகளானதைப் போல்
உணரத் தொடங்கினோம்.

தர்வீஷ் முதல் தர்வீஷ் வரை:
தேர்வும் அனுபவமும்

யமுனா ராஜேந்திரன்

I

தர்வீஷ்

எனது அனுபவத்தில் நானும் எனது யுவ நாட்களின் நண்பர்களான வி.உதயகுமாரும் ஆர்.பாலகிருஷ்ணனும் இணைந்து மொழிபெயர்த்துக் கொண்டு வந்த மஹ்மூத் தர்வீஷ் கவிதைகளின் பெருந் தொகுப்பு நூன் மழந்து போவதைக் காணவே அவர்கள் விரும்புவர் : 465 பக்கங்கள் : உயிர்மை பதிப்பகம் : 2009) எனது எழுத்து வாழ்வில் ஒரு முக்கியமான நிகழ்வு. மொழிபெயர்ப்பில் எனது ஈடுபாடும் பிறமொழி வாசிப்பிலான எனது அறுதித் தேர்வுகளும் எனது மொழி பெயர்ப்பு அனுபவங்களும் குறித்துப் பின் திரும்பிப் பார்த்துக்கொள்ள இது ஒரு பொருத்தமான தருணம் என நினைக்கிறேன்.

எழுபதுகளின் இறுதி என்று ஞாபகம், மனுஷ்ய புத்திரன் தான் கொண்டுவந்து கொண்டிருந்த ஒரு கவிதையிதழுக்கு தர்வீஷ் கவிதைகளின் மொழிபெயர்ப்புக் கவிதைகள் சிலவற்றைக் கேட்டு எனக்கு எழுதிய கடிதமே அவருடனான எனது நட்பின் துவக்கம். முப்பது ஆண்டுகளின் பின் அவரே தனது உயிர்மைப் பதிப்பகத்தின் மூலம் தர்வீஷ் கவிதைகளின் பெரும் தொகுப்பைக் கொணர்ந்திருப்பது எம் இருவருள்ளும் புதையுண்டிருந்த ஒரு நீண்ட கால இரகசியத் திட்டத்தின் பகுதிபோல எனக்குத் தோன்றுகிறது. தற்கொலை செய்து கொண்டு மரண முற்ற யுகப் புரட்சிகரக் கவிஞன் 'மயக் கோவ்ஸ்கி'க்குத் தமிழில் ஒரு பெருந் தொகுப்பு இல்லை என்பதனை நினைக்கிற போது, மனுஷ்யபுத்திரன் இல்லாதிருந்தால் தமிழில் தர்வீஷின் இந்தப் பெருந்தொகுப்பும் சாத்தியமாயிருக்காது எனவே நான் நினைக்கிறேன்.

எழுபதுகளில் தர்வீஷின் கவிதைகள் உள்ளிட்டு பிற பலஸ்தீனக் கவிகளான பத்வா, தக்வான் போன்றவர்களின் கவிதைகளோடு பதினாறு பக்கத்தில் நானும் எனது இரு நண்பர்களான உதயகுமாரும் பாலகிருஷ்ணனும் ஒரு குறுநூல் கொண்டு வந்தோம். சேகுவாராவின் கவிதைகள், மூன்றாம் உலகப் பெண் கவிதைகள், ஆப்பிரிக்கக் கவிதைகள் எனத் தொடர்ந்து கொண்டு வந்தோம். எண்பதுகளின் இறுதி வரையிலுமாகப் பெரும்பாலும் நாங்கள் வாழ்ந்த கோவை மாவட்டத்திற்கு வெளியில் பரவலாகச் சென்று சேராத ஐநூறு பிரதிகளே அச்சிட்டு நாங்கள் கொணர்ந்த இந்தக் குறுநூல்கள் அனைத்துக்கும் சில பொதுத் தன்மைகள் இருந்தன. இவை அனைத்துமே தேச விடுதலைப் போராட்ட உணர்வுகளை முன்வைத்த கவிதைகள். பலஸ்தீன விடுதலைப் போராட்டம் இலத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்கள் ஈழ விடுதலையின் எழுச்சி போன்றவை எமது அடி மன பிரக்ஞையாக இருந்து எம்முள் செயற்பட்டிருக்கின்றன என்பதை இப்போது எம்மால் ஸ்தூலப்படுத்திக் கொள்ள முடிகிறது.

பிற்பாடு தொண்ணூறுகள் முதல் தர்

வீஷ் கவிதைகளின் பெருந்தொகுப்பு வரையிலான எனது தேர்வுகள் என்னவாக இருந்தன என்பதைத் திரும்பிப் பார்க்கிறேன். தல்ஸ் வீமா நஸ்ரீன், சுஜாதா பட், கீஸ்வர் நஹீத் போன்ற ஆசியப் பெண் கவிகள், ஜமனா ஹத்தாத், விஸ்லாவா சிம்போர்ஸ்க்கா போன்ற ஐரோப்பியப் பெண்களின் எழுத்துக்களை நான் தேர்ந்து கொண்டிருந்திருக்கிறேன். பிற தொகுப்புகள் எனும் அளவில் சேகுவாரா, ரோக் டால்டன், ஆரியல் டோர்ப்மென் போன்றவர்களின் இலத்தீன் அமெரிக்கக் கவிதைகள், செர்கே பேகஸ் மற்றும் சோமன் ஹார்த்தி போன்றவர்களின் சமகாலக் குர்திஸ் கவிதைகள், இறுதியாகத் தர்வீஷின் மறைவையொட்டிய அவரது கவிதைகளின் பெருந்தொகுதி என எனது தேர்வுகள் அமைந்திருக்கின்றன. இதுவன்றி பாப்லோ நெருதா குறிப்பாக பாப்லோ நெருதா மரணமுற்ற அடுத்த மாதம் அவருடைய நீள் கவிதையான 'நான் தண்டனை கோருகிறேன்' சமகாலத்தில் தாமரை செம்மலர் என இரு இடதுசாரி இதழ்களிலும் வெளியானது இங்கிலாந்தில் வாழும் ஆபிரிக்கக் கவியான 'பெஞ்சமின் ஜாப்னையா', நைஜீரியக் கவியான 'பென் ஒக்ரி, நீரிவ் பட்டேல், நாமதேவ் தசல்' போன்ற மராத்திய தலித் கவிகள் என்பதாகவே எனது மொழிபெயர்ப்புப் பயணம் அமைந்திருக்கிறது.

பின் திரும்பிப் பார்க்கிறபோது அறியப்பட்ட பிரபலமான ஐரோப்பியக் கவிகள் அல்லது உலகின் பிரபலமான செவ்வியல் மையக் கவிகள் எவரும் எனது அக்கறைக்கு உரியவர்களாக இருக்கவில்லை. பாப்லோ நெருதா, விஸ்லாவா சிம்போர்ஸ்க்கா போன்ற நோபல் பரிசுபெற்ற பிரபலமான இருவரைத் தவிர எனது தேர்வுகள் அனைத்தும் விளிம்பு நிலைக் கவிஞர்களுடையதாகவும், மூன்றாம் உலகின் கவிஞர்களுடையதாகவுமே இருந்திருக்கிறது. மூன்றாம் உலக நிலப்பரப்பு சார்ந்த மக்களின் விடுதலையில் அக்கறை கொண்ட வாசகர்களுடனான ஒரு கவித்துவ உரையாடலாகவே எனது மொழியாக்கத் தேர்வுகள் அமைந்திருக்கின்றன. எழுபதுகளில் அதிகரித்து வந்த பெண் விடுதலை உணர்வு, பிரபஞ்சமளாவி தன்னை விரித்துக் கொண்டிருந்த தேசிய விடுதலை உணர்வு எனும் மிகப் பெரும் இரு விமோசன உணர்வுகளே எனது தேர்வுகளின் பின்னிருந்த அடிமனப் பிரக்ஞையாக இருந்திருக்கின்றன.

தமிழில் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருக்கும் எவருடையதுமான தேர்வின் பின்னணிகளில் இத்தகைய அடிமனப் பிரக்ஞை ஒரு சரடாக ஓடிக்கொண்டிருக்கும் எனவே நான் கருதுகிறேன். இதனையே நான் மொழிபெயர்ப்புத் தேர்வின் பின்னிருக்கும் சமூகப் பிரக்ஞை அல்லது அரசியல் பிரக்ஞை எனப் புரிந்துகொள்கிறேன்.

II

மனிதன் – மனுஷி உயிர் ஜீவிகள் எனும் அடிப்படையில் இவர்கள் எதிர்கொள்ளும் ஆதார உணர்ச்சிகள் எனப் பாலுறவையும் வன்முறையையும் நான் கருதி வந்திருக்கிறேன். இந்த இரு பண்புகளும் மனிதத்தின் உயிர்வாழ்தல் தொடர்பான சூழல்கள் தொடங்கி அவர்கள் தம்மை அகவித்துக் கொள்கின்ற உறவுகள் மற்றும் சிந்தனைத் துறைகள் என அனைத்தும் தழுவித் தொடர்கின்றன. அதனோடு காலத்திற்கும் இடத்திற்கும் அமைய மாற்றம் காண்கின்றன எனவும் நான் கருதி வந்திருக்கிறேன். இதிலிருந்து விடுபடுதலைக் குறித்து சமயங்கள் பேசுகின்றன. மதநீக்கம் பெற்ற விடுதலைக் கோட்பாடுகள் இவற்றிலிருந்து விடுபடுதல் என்பதற்கு மாற்றாக இவற்றைத் தகவமைத்துக் கொள்வது அல்லது மனிதாயப்படுத்துவது – இதனைப் பண்பாடு எனவோ நாகரீகம் எனவோ பெயரிட்டுக் கொள்ளலாம் – என்பதைத் தேர்ந்து கொள்கின்றன. இதனை நீதியான சமூகம் நோக்கிய செயற்பாடு என்றும் வைத்துக்கொள்ளலாம். தத்துவம் கலை இலக்கியம் அரசியல் போன்ற மனித இடையீடு சார்ந்த வெளிகளிலெங்கும் இது குறித்த தேடல்களே விரவியிருக்கிறது என நான் புரிந்திருக்கிறேன்.



பிக்காசோ

இது வரைத்திய அரசியல் அதிகாரம் ஆண்மைய நோக்கிலானது என்பது பெண்ணியப் பார்வை. தத்துவத்தில் லிங்கமைய வாதம் பற்றி பிரெஞ்சுப் பெண்ணிலைவாதிகள் பேசுகிறார்கள். இலக்கியப் படைப்பிலும் இந்நோக்கு செயற்படுகிறது. வன்முறை ஒரு அரசியலாகத் தத்துவ நோக்காக இலக்கிய உள்ளுறையாக இருக்க லிங்கமைய நோக்குக் காரணமாக இருக்கிறது என்பதும் பெண் நிலைவாத விமர்சனம்தான்.

என்றாலும் வன்முறையிலிருந்து விடுபடுவது என்பது சாத்தியமாகவா இருக்கிறது? மனித விமோசன அரசியலில் வன்முறையின் பாத்திரம் என்ன? சேகுவாராவும் பிற மார்க்சியரும் புரட்சிகர வன்முறை என்று பேசுவதிலுள்ள அறம் சார்ந்த நம்பிக்கைகள் பொய்யா? பாலுறவுத் தோய்வும் வன்முறையும் ஆண் பெண் உறவில் முயக்கத்தின் உச்ச நிலையாகப் பெரும்பாலுமான கலைஞர்களால் சித்திரிக்கப்படுதலிலுள்ள கூட்சுமம்தான் என்ன? அழகும் மிருகத்தனமும் இணையும் புள்ளி எவ்வாறு காலந்தோறும் கலைப்படைப்பில் இடம்பெறுகிறது? இது போன்ற கேள்விகளை நான் அறிய நேர்ந்த புரட்சியாளர்களும் கலைஞர்களும் இன்னும் இன்னுமாக பெருநெருப்பாக எனக்குள் மூட்டினார்கள்.

சேகுவேரா, அல்தூஸர், எங்கெல்ஸ் போன்ற புரட்சியாளர்கள் பாலுறவுக் களியாட்டத்தில் திளைத்தவர்களாக இருந்தார்கள். புரட்சிகர வன்முறையை ஆராதித்தவர்களாக இருந்தார்கள். தன் மனைவியை அதீதமாகக் காதலித்த அல்தூஸர் அவரது மனைவியைக் கழுத்தை நெரித்துக் கொன்றார் என்கிற பார்வைக்கு மாறாக, அவர் அதற்கான பொறுப்பேற்கும் மனநிலையில் இல்லை என்கிறது பிரெஞ்சு நீதிமன்றம். எல் ஸால்வடார் கவியான ரோக் டால்டன் கவிதைகளில் பாலியல் கொண்டாட்டம் இடம்பெறும் அளவில் இரத்தத்தின் கவிச்சையும் இடம் பெறுகிறது. அவர் எதிர்பார்த்தபடியே அவரது இயக்கத்தின் சகதோழர்களால் அவர் கொலை செய்யப்படுகிறார். சேகுவேரா பிடிக்கப்பட்டு சித்திரவதையின் பின் சுட்டுக் கொல்லப்படுகிறார். பிரெஞ்சு நாவலாசிரியன் மார்க்கிஸ் டீசேடின் படைப்புகளில் வன்முறையும் சித்திரவதையும் பாலுறவு உச்சமும் இணைந்த மனிதச் செயற்பாடு கொண்டாடப்படுகிறது. யூத மற்றும் ஜிப்ஸி மற்றும் கம்யூனிஸ்டுகளின் ஆண் பெண் உடல்களை சுடலையில் கொழுத்திய இட்லர் தின்மையான ஜெர்மனிய ஆண் பெண் உடல்களின் அம்மணத்தைக் கொண்டாடுகின்றான். பெண்களின் உடல்களில் சதா புரண்டெழுந்த பாப்லோ நெருதா, தான் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க வேண்டும் என்கிறான். என்னளவில் மகத்தான கலைஞர்கள் மற்றும் புரட்சியாளர்கள் அனைவருக்குமே பாலுறவு தரும் இன்பம், தாம் தவிர்க்கவியலாது என ஆராதிக்கிற வன்முறையிலிருந்து தப்பித்தலுக்கான அடைக்கல வெளியாகவே இருந்தீருக்கிறது.

III

கவிதை மொழியாக்கத்தின் போக்கில் வரும் விமர்சனங்களை எதிர்கொள்வது என்பது ஒரு பெருங்கலை. குறிப்பிட்ட கவிஞரின் குறிப்பிட்ட கவிதைக்கான இரு வேறு மொழிபெயர்ப்புக்கள் வாசகனுக்கு இருவேறு அனுபவங்களைத் தருவதையும், இருவேறு மொழிபெயர்ப்பாளர்களின் சொல்லாட்சிகள் அவர்களது அனுபவ மட்டத்திற்குத் தக மாறியிருப்பதனையும் அசோகமித்திரன் பதிவு செய்திருக்கிறார்.

எனது அனுபவத்தில் நான் இருவித

மான விமர்சனங்களை எதிர்கொண்டேன். முதல் விமர்சனம் மூலக் கவிதையில் இல்லாத ஒரு சொல் எனது மொழியாக்கத்தில் அதிகமாக வந்திருக்கிறது என்பது ஒரு விமர்சனமாக முன்வைக்கப்பட்டது. இரண்டாவது தனது மொழிபெயர்ப்போடு எனது மொழி பெயர்ப்பை ஒப்பிட்டு அதில் இல்லாதுபோன சில வரிகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் என்னில் இல்லாத முழுமை இரண்டாமவரது மொழிபெயர்ப்பில் இருப்பதாக அவர் கருதினார். இந்த இரு விமர்சனத்திலும் முக்கியமாகச் சுட்டிக் காட்டப்படாத ஒரு தரவு இது: 'விஸ்லாவா' அல்லது 'தர்வீஷின்' போலந்து அல்லது அரபு மூலத்தின் எந்த ஆங்கில மொழி பெயர்ப்பாளரின் கவிதைகளை ஆதாரமாக வைத்து இவர்கள் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்கள் என்பதுதான். மொழிபெயர்ப்பில் இது ஒரு மிகமுக்கியமான விடயம்.

நான் அறிந்த வரையில் உலகின் எந்த வொரு கவிஞனது கவிதைக்கும் குறைந்தபட்சம் ஐந்து அல்லது ஆறு மொழிபெயர்ப்புக்கள் ஆங்கிலத்தில் உண்டு. தர்வீஷின் சில கவிதை வரிகள் இரண்டு மூன்று கவிதைகளில் திரும்ப வருவதும் உண்டு. தர்வீஷின் ஒரே கவிதை, மொழிபெயர்ப்பாளரது தேர்வுக்கு ஒப்ப சில பத்திகள் தவிர்க்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் உண்டு. வேறு வேறு மொழிபெயர்ப்பாளர்கள் வேறு வேறு சொற்கோவைகளைப் பாவிப்பது என்பது இயல்பு. இவ்வகையில் ஆங்கிலத்தில் இல்லாத ஒரு சொல் தமிழில் எப்படி வந்தது எனக் கேட்பதிலுள்ள அனர்த்தம் பற்றி நான் கவலைப்படாது ஒதுங்கினேன்.

விமர்சனம் என்பது இருவகையிலானவை. அரசியல் மற்றும் வேறு வேறு தனிநபர்க் காரணங்களால் வரும் விமர்சனம் முதலாவது. இதில் காழ்ப்பும் பொறாமையும் ஆத்திரமூட்டலும் நிராகரிப்பும் கலந்திருக்கும். சாதாரண மனிதர்களை விடவும் எழுத்தாளர்களிடம் இது அபரிமிதமாக இருக்கிறது என நான் நிச்சயமாகச் சொல்வேன். இதனைப் புறக்கணித்து மேல் செல்வது எனது தேர்வு. சில விமர்சனங்கள் நட்புணர்வுடன் எழுதப்படும். சிலர் நேரிலும் இதனைச் சுட்டிக் காட்டுவார்கள். இத்தகைய விமர்சனங்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு அடுத்தடுத்த பதிப்புகளில் மொழிபெயர்ப்புகளில் மாற்றம் செய்வது எனது வழமை. குர்திஸ் கவிதைகளிலும் இலத்தீனமெரிக்கக் கவிதைகளிலும் அப்படியான இன்னும் பொருத்தமான சொல்லாட்சிகளை முன்னைய மொழி பெயர்ப்பினோடு ஒப்பிட்டுப் பாவித்ததும் உண்டு.

மொழிபெயர்ப்பாளன் ஒரு கவிதையை மொழிபெயர்க்கத் தேர்ந்துகொள்ளும்போது அவன் இரு வேறு எல்லைகளில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள விழைகிறான். தனது சொந்த அனுபவ மட்டத்தினுள் வரும் கவிதையினை அல்லது தான் வாழும் சமூகத்தின் உணர்வு மட்டத்திற்கு உகந்த கவிதையினை அவன் தேர்ந்து கொள்கிறான். இவ்வாறான தேர்வுகள் ஒருபோதும் ஒரு கவிஞனுக்கு நியாயம் செய்வதாக இருக்க முடியாது. இவ்வாறான தேர்வுகளில் குறிப்பிட்ட கவிஞன் வாழ நேர்ந்த நிலம், கலாச்சாரம், வரலாறு போன்ற குறிப்பான அடையாளங்களின் தன்மைகள் அகற்றப்படுகின்றன. பிறிதொரு எல்லையிலான தேர்வு இரண்டாவது. ஒரு கவிஞன் வாழ நேர்ந்த நிலம், வரலாறு, அனுபவம், அரசியல் போன்ற குறிப்பான நிலைமைகளில் வைத்து ஒரு கவிஞனைத் தேர்ந்து கொள்வது. இம்மாதிரிக் கவிதைகளே கவிஞனின் தனித்துவத்தை நிலைநாட்டவல்லது. கவிஞன் வாழ நேர்ந்த சூழல், கவிதைகள் எழுத நேர்ந்த தருணம் போன்றவற்றை இந்த அணுகுமுறை பற்றிப் பிடிக்க முனைகி



பிக்காசோ

றது. ஆரம்ப நிலையில் முதலாவது அணுகுமுறையைக் கொண்டிருந்த நான், காலப் போக்கில் இரண்டாவது அணுகுமுறையையே வரித்துக்கொண்டேன்.

எனதும் எனது நண்பர்கள் இருவரதும் மொழியாக்கத்தில் நாங்கள் கொணர்ந்த பெருந்தொகுதியான தர்வீஷின் கவிதைகளுக்கு நாங்கள் அருஞ்சொல் விளக்கப்பட்டியல் தயாரித்தோம். கவிதைகள் குறித்த அவரது நேர்காணல்களைத் தொகுத்தோம். அவரையும் அவரது கவிதைகளையும் குறிப்பிட்ட வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து விரிவான முன்னுரை ஒன்றினையும் நான் எழுதினேன். இத்தனைக்குப் பின்பும் எமது மொழி பெயர்ப்புத்தான் செம்மையானது என்றோ அறுதியானது என்றோ சொல்கிற அகந்தையை நாம் நிராகரிக்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட படைப்பை இன்னும் இன்னுமான குறிப்பிட்ட தன்மையில் வைத்துப் பார்க்கிற சாத்தியம் என்றும் உண்டு என்பதால்தான் தாஸ்தியாவ்ஸ்கியின் படைப்புக்கள் மறுபடி மறுபடி மொழியாக்கம் காண்கின்றன. தர்வீஷின் சுவரோவியம் – மியூரல் – நீள் கவிதைக்கு மட்டும் அவரது மரணத்தின் பின் நான்கு வேறு வேறு மொழியாக்கங்கள் வெளியாகி இருக்கின்றன.

IV

எனது கவிதைத் தேர்வில், எனது மொழி பெயர்ப்பு அனுபவத்தில் என்னை மிக மிகப் பாதித்த கவிஞன் எல்ஸால்வடார் நாட்டின் ரோக் டால்டன். எதிர்பார்த்தபடி மரணத்தைத் துரத்தியவனாக, மரணம் தன்னைத் துரத்த கவியாத்து தனது சொந்தத் தோழர்களால் துரோகி எனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்ட கவிஞன் அவன். பின்னாளில் அவனைக் கொன்ற அதே விடுதலை இயக்கம் முழு எல்ஸால்வடார் மக்களிடமும் அந்த மகத்தான மக்கள் கவிஞனைக் கொன்றதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. என்றாலும் அவன் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட இடம் இன்னும் அடையாளம் காணப்படாமலே இருப்பது அவனது நினைவுகளுக்கு ஒரு மாந்திரீகத் தன்மையையும் வழங்குவதாவே இருக்கிறது.

நாடுகளுக்கிடையில் அலைந்து திரிதல், கட்டற்ற காதல், பாலுறவின் சந்தோஷம், புரட்சிகர அரசியல் கடப்பாடு, இடப்பெயர்வின் சுமை அல்லது விடுபடல் என வேறு வேறு விதமான அனுபவங்களின் கலவையாக எழுந்தவை அவனது கவிதைகள். தீவிரமான தத்துவ மற்றும் அரசியல் ஈடுபாடுகள், அனுபவங்கள் மற்றும் தேடல்கள் அற்றவர்களால் அவனது கவிதைகளைத் தொடர்வது சாத்தியமில்லை. நெருதா, தர்வீஷ், சிம் போர்ஸ்க்கா, பிரெக்ட் போன்றவர்களின் பல கவிதைகள் ஜனரஞ்சக அளவில் கவிதைகளை வாசிப்பவர்களுக்கும் ஆனவை. ரோக் டால்டனின் கவிதைகள், கொண்டாட்டம் தரும் உடலுறவையும் வன்முறையின் இடையிலான அரசியல் தீவிரத்தையும் தனித்தனியே பிரித்துப்பார்க்க முடியாத அளவிலான கவிதைகள். பாலினம் சார்ந்த தடைகளைத் தகர்க்கும் காதல்க் கவிதைகள் அவருடையவை. மயக்கோவ்ஸ்க்கியின் தற்கொலைக்கும், சேகுவேராவின் படுகொலைக்குமிடையிலானது ரோக் டால்டனின் அனுபவ உலகம்.

சிறையுண்ட உடலிலிருந்தும் சுரண்டல் உலகின் வன்முறையிலிருந்தும் மீறிச் சென்று கவிதைகளுக்குள் விமோசன உணர்வை அடைய நினைப்பவர்களுக்கான கவிதைகள் ரோக்டால்டனுடையவை. வேறு வேறு மட்டங்களில் அதனது கருத்தியல் தளத்திலாயினும், ஈழத்துக் கவிகளான சிவரமணியின் தற்கொலையையும், கொல்லப்பட்ட செல்வியின் ஆளுமையையும், வேட்டையாடிக் கொல்லப்பட்ட நாவலாசிரியன் கோவிந்தனின் பதட்டத்தையும் நான் இந்த அடிப்படையிலே புரிந்துகொள்ள விழைகிறேன்.

V

கவிதை சார்ந்த எனது வாசிப்புச் செயற்பாடு மற்றும் கவிதைத் தேர்வுகள் என்பனவும் எனது தத்துவம் மட்டும் அரசியல் சார்ந்த ஈடுபாடுகளின் பகுதியாக யதேச்சையாகவே எனக்குத் தட்டுப்பட்டன.

எழுபதுகளின் மத்தியில் திருச்சியில் நடைபெற்ற அனைத்திந்திய மாணவர் பெரு மன்றத்தின் மாநாட்டுக்கு வந்திருந்த ஈரானிய மாணவர்களிடமிருந்து பெற்ற பலஸ்தீனக் கவிதைகள் எனும் குறுநூல் பலஸ்தீன் கவிதைகளின் மீதான எனது ஈடுபாட்டுக்கான காரணமாக அமைந்தன.

தென்னாபிரிக்க விடுதலை இயக்கமாக ஆபிரிக்க தேசிய காங்கிரசின் பெண்கள் பிரிவு வெளியிட்ட ஆபிரிக்கப் பெண்களின் கவிதைத் தொகுப்பு மூன்றாம் உலகப் பெண் கவிதைகள் தொகுப்புக்கான உந்துதலாக அமைந்தது. இந்தியத் தலைநகர் தில்லியிலிருந்து சாருநிவேதிதாவின் தொடர்பில் கிடைக்கப்பெற்ற கியூப அரசினது செய்தியித ழான 'கிரான்மா'வில் வெளியாகின. சேகுவேராவின் எட்டுக் கவிதைகள் இலத்தீனமெரிக்கக் கவிதைகளின் மீதான எனது ஈர்ப்புக்கான காரணமாக அமைந்தன.

இந்தியாவிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த பலஸ்தீன, தென்னாபிரிக்க, கியூப விடுதலை இயக்கத்தினரின் வெளியீடுகளைத் தேடிக் கற்கும் இடதுசாரிகளுக்கும் கடிதம் எழுதினால் இலவசமாகவே அவர்கள் அனுப்பிவைத்தார்கள். ரஸ்யா சென்று திரும்பிய எனது ஆசான் க.பழனிசாமி மயக்கோவஸ்க்கியின் தேர்ந்தெடுத்த கவிதைகளின் தொகுப்பொன்றினை அங்கிருந்து எனக்கு வாங்கி வந்தார். எழுபதுகளும் எண்பதுகளும் தேசிய விடுதலையின், பெண் நிலைவாதத்தின், தொழிலாளர், மாணவர் எழுச்சியின் காலம். 1968 மாணவர் எழுச்சியைத் தொடர்ந்து உத்வேகம் பெற்ற பிரெஞ்சுக் கோட்பாட்டினதும், விமர்சன மாக்சியத்தினது காலமும் அதுதான்.

முப்பது ஆண்டுகளின் முன்பு பலஸ்தீனக் கவிதைகளின் மீதான எனது ஈடுபாடு இப்போது தர்வீசின் முழுமையான கவிதைப் பங்களிப்புக் குறித்த பெருந்தொகுப்பாக ஆகியிருக்கிறது. சே குவேராவின் மீதான எனது ஈடுபாடு விரிந்து, ரோக் டால்டன், ஆரியல் டோர்ப்மென், குர்திஸ் கவிதைகள் என இலத்தீனமெரிக்க மற்றும் குரிதிஸ்தான் குறித்த

முழுமையான கவிதைத் தொகுதிகளாக ஆகியிருக்கிறது. ஆத்ரே லூர்டு எனும் ஆபிரிக்கப் பெண்கவியின் மீதான ஈடுபாடு விரிந்து கிஸ்வர் நஹீத், ஜோமனா ஹாத்தாத், தஸ்லீமா நஸ்ரீன் என, சுஜாதா பட், விஸ்லாவா சிம்போர்ஸ்க்கா என, எவ்ஜனியா மரியா பிரோவா, கேப்ரியல் அலக்ரியா என, கவிதையும் வாழ்வின் மீதான அதனது வேட்கையும் முரணும் தரிசனமும் குறித்த எனது தேடலும் பயணமும் தொடர்கிறது.

கவிதை மொழியாக்க நூல்கள்:-

1. நான் மடிந்துபோவதைக் காணவே அவர்கள் விரும்புவர் – மஹ்மூத் தர்வீஸ் கவிதைகள் – 2009
2. கடைசி உயிலும் கடைசி வாக்கு மூலமும் – இலத்தினமெரிக்கக் கவிதைகள் – 2007
3. மலைகளைத் தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை – சமகால குர்திஸ் கவிதைகள் – 2007
4. ஹிட்லரின் முதல் புகைப்படம் – விஸ்லாவா சிம்போர்ஸ்க்கா கவிதைகள் – 2009
5. ஒரு ரகசிய விருந்திற்கான அழைப்பு – ஜோமனா ஹத்தாத் கவிதைகள் – 2009
6. இது எனது நகரம் இல்லை – தஸ்லீமா நஸ்ரீன் கவிதைகள் – 2009 ●



மள்கிறட்

உறக்கம்

அருகில் எவருமில்லை
மானவன் பாடநூலை மூடிவிட்டான்
தெருப்போகன் பாட்டை நிறுத்திவிட்டான்
எல்லோரும் வீடு சேர்ந்துவிட்டனர்

மரண – ஊழியர்கள்
தங்கள் ஆயுதங்களை ஒருபுறம் வைத்துவிட்டனர்
சாத்தான்களின் பாதாள உலகின் படலைகளை அடைந்துவிட்டனர்
ஆட்சியாளர் தம் இரத்தம் தோய்ந்த கைகளைக் கழுவிவிட்டனர்
எங்கும் அமைதி

அவர்கள் கண்ணாடிகளுள் பார்த்து
தம்வசீகரத்துக்குக் காரணத்தை அறிகிறார்கள்
மரணம் வாயைத் திறக்குமுன்
அவர்கள் கதவுகளை ஓடுகிறார்கள்
குழைகளின் முற்றங்களில்
தொழிலாளர்கள் தம் கண்ணீரைத் துடைக்கிறார்கள்
சிறைக்கம்பிகளிடையிலுள்ள வெளிகளில்
கைதிகள் பறக்கிறார்கள்
சுவரொட்டிகளைப் போர்த்திக் கொண்டு
பிச்சைக்காரர்கள் நடைபாதைகளில் உறங்குகிறார்கள்
அருகில் எவருமில்லை
விலைமகளிர் தம் நச்சு உடைகளை விசிவிட்டு
கண்ணீரில் தோய்ந்த தம் மார்புகளைச்
சுவர்களில் தொங்கவிட்டுள்ளனர்
தத்தம் வாழ்வின் மிச்சங்களை
நிலவறையில் ஒளித்து வைத்துவிட்டு
எல்லோரும் உறங்குகின்றனர்

எதற்கும் துணிந்தவர்கள், அரசியல்வாதிகள்,
ஆள்வோர், பொதுமக்கள், அப்பாவிகள்
எல்லோரும் உறங்குகின்றனர்
எல்லோரும் இருளில் அடைக்கலம் புகுந்துள்ளனர்

நிதிஸ்

தெலுங்கு மூலம்: அஜந்தா
ஆங்கில வடிவம்: டி. கேசவராவ்
தமிழில்: சோ.பத்மநாதன்

இப்பொழுது எந்தக்கொடியும் பறப்பதில்லை
எந்த மணிக்கூடும் ஒலிப்பதில்லை
எந்தச் சட்டமும் செயற்படுவதில்லை
எல்லோரும் இருளின் மடியில்
கொல்பவன் கொல்லப்படுபவன் என்றும்
அழகி குதி என்றும்
எல்லா வேற்றுமைகளும் அழிந்துபோயின
மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே
முள்வேலிகள் இல்லை
யாரும் சாவுக்கு அஞ்சவில்லை
எல்லோரும் உறக்கத்தின் மடியில்
காலசர்ப்பம் தன்தோலை உரிக்கும்
கணமிது
காலாதீதத்தில் கற்பனைகள் உலகங்கள்
உதிக்கும் கணமிது
இன்றைய இரவில்
யார்தின்னாலும் சிந்தனை நரிகள் உலவமாட்டா
வாழ்க்கைப் புலி யாரையும் பயப்படுத்தாது
ஏனெனில் எல்லோரும் உறக்கத்தின் மடியில்
தீரங்கிகளின் சத்தம் நாளைதான் கேட்கும்
இவ்வேளை போர்ப்பரணி கேட்கப் போவதில்லை
இருளில் மற்போரிட மனிதனால் முடியாது

துப்பாக்கிரவைப் பற்றிய அச்சம்
காலையில்த் தான்
கொலையாளிகள்அனுப்பிய கடிதம்
காலையில்த் தான் வந்து சேருகிறது
தன்னைக் கைவிட்ட மக்களைப்பற்றி
எந்தத் தாயும் கலவரப்படுவதில்லை
நண்பனுடைய துரோகம்கூட
இவ்வேளை தெரியவராது

நம்பிக்கைகள், ஏமாற்றங்கள், பெருமூச்சுக்கள்
வெறுப்பு, பொறாமை, ஆக்கிரமிப்பு
ஏதும் காயப்படுத்தாது
ஒற்றை இருதயத்தின் துடிப்புத்தவிர
எங்கும் ஒரே அமைதி.



கார்ட்டைட் கோல்

கடைசி நாளுக்காகக் காத்திருந்தேன்

உருது மூலம்: முகம்மது ஆல்வி
ஆங்கில வடிவம்: கோபிசந் நாரங், டேவிட் போல் டக்ளஸ்
தமிழில்: சோ.பத்மநாதன்

மக்களே,
சூரியனில் இறைவன் அருளிருக்கிறான்
ஆதியில் உங்களுக்காக விண்ணைப் படைத்தேன்
சூரியன், சந்திரன், நட்சத்திரங்களால்
விண்ணுக்கு விளக்கேற்றினேன்
மக்களே,
உங்களுக்காக மண்ணைப் படைத்தேன்
அதன்மார்பின் குறுக்கே ஆறுகளால் கோடிட்டேன்
அதன் மடியில் சமுத்திரங்களை வைத்தேன்
மலைகளை நட்டேன், மரங்களை வளர்த்தேன்
மரங்களில் மலர்களையும் பழங்களையும் வைத்தேன்
மக்களே,
நீங்கள் வேலை செய்யும் பகலை உண்டாக்கினேன்
நீங்கள் இளைப்பாற இரவை உண்டாக்கினேன்
மக்களே,
இவற்றையெல்லாம் உங்களுக்காகவே ஆக்கினேன்
ஆனால் மறந்துவிடாதீர்கள்
ஒரு நாள் இவை யாவற்றையும் திரும்ப எடுத்துக் கொள்வேன்
இறைவன் சொன்னது உண்மைதான்
அந்த நாள்–
இறைவன் எல்லாவற்றையும் திரும்ப எடுத்துக் கொள்ளும்
நாள்
எப்போது?
அந்தக் கடைசி நாளுக்காகத் தான் காத்திருக்கிறேன்
ஏனென்றால் இவையெல்லாம் பழசாய்ப்போச்சு
அறியாமையாய் போச்சு

தாயிடமிருந்து மகளுக்கு...

எனதருமை மகளே
வெட்கப்படாமல் சொல்
நானே உனது தாய் என்றும்
இந்த நகரமே உனது தந்தை என்றும்

கற்பிலையர்ந்து மனைவியிடம் போய்ச் சொல்
நானே அவர்களின் ஆண் மக்களுக்குக்
காதலைக் கற்றுத் தருகிறேன்
ஆயிரம் பெண்களுக்கிடாய் என்னையே
அவர்களிடம் சமர்ப்பித்தேன்
அங்ஙனம்தான் நானொரு துறவியானேன்
ஆண் என்பவன் என் மகளே
முடிவற்ற ஆசையின் மேநரு
அந்த ஆழியினை நீ கடந்தேக வேண்டும்
நான் எவ்வாறு என் உடலைக்
கடந்தேனோ அது போல

தலையை நிமிர்த்து
எனதான இடத்தினை நீ நிரப்பு
உன்னதமானவனாய் உயர்வு பெறு
நானை அதிசயம் தரும்பும் காதலனுபவம் உனக்குக் கிட்டலாம்
அப்போது நான் காணமுடியாது போன சூரியனை
நீ காண்பாய்
யேசுநாதன் முன்னே நின்று நான் கண்ணீர் விடவில்லை
என்முன்னே வந்து கண்ணீர் விடும் உபதேசமும்
வேண்டாம்

ஒவ்வோர் இரவும் நான் எரிந்து கரியும் இரும்பு
ஒவ்வோர் காலையும் சுடர்விடும் பொன்
காமத்தை நான் வென்றேன் பேராசைச் சுயநலத்தை நீ
தாண்ட வேண்டும்
நாமே தான் நினைந்து தருபவும் பூமி
என்றும் கொடுக்கும் இயற்கை.

புராதன எகிப்தியச் சிற்பம்

மலையாள, ஆங்கில மூலம்:
கே. சச்சிதானந்தன்
தமிழில்:
ந. சத்தியபாலன்

கண்ணீர் ஏரியில் அலைகளெழுகின்றன
போர் மூண்டு வராதெனப் பகன்ற
மோதல் தவிர்ப்புப் பிரதிய எல்லைகளில்
கண்ணீர் ஏரியில் அலைகளெழுகின்றன

சிங்களத்தால் அழுகிறேன் நான்
எலும்புக் கூடுகளாய் நடமாடும்
மானிடர் மீது பிரயோகிக்கும்
அந்தச் சுமை மிகுந்த
ஆயுதங்களின் கனம் தாங்க இயலாது
ஊனிலுடைந்து மாண்டு போவர்
ஏரியின் கரைகளில்
உடல் சிதறுண்டு விழுவர்
கண்ணீர் ஏரியின் நீர் வற்றிப் போகும்
கண்ணீர் ஏரியில் உதிரமே ஊறும்

எவரது மரணத்துக்காக ஒப்பாரி வைத்திடவென்று
அறியவில்லை நாம்
எவ்வளவுதான் அழுதிடவென்றும்
சொல்லித் தருபவர் யார்
ஏரி முழுவதுமே செந்நிறம்
இப்பொழுது
கண்ணீர் ஏரி சலனமற்றுக் கிடக்கிறது.

கண்ணீர் ஏரி

சிங்கள மூலம்: மஹேஷ் முனசிங்ஹ
தமிழில்: ஃபஹீமாஜஹான்

சீனச் சித்தம்

சிங்கள மூலம்: மஹேஷ் முனசிங்ஹ

தமிழில்: ஃபஹீமாஜஹான்

எம்மிருவரினது
இரு புருவங்களுக்கிடையிலும்
அதிகாலை தோறும் தவறாமல்
உனது விரலொற்றால் வைத்திடும்
செஞ்சிவப்புப் பொட்டொன்று

அம்மா தான் முதலாவது
நான்தான் ரெண்டாவது
அம்மா முதலில் வைத்துக் கொண்டு
மென்னீர் கைகள்
எனது நெற்றியை நோக்கி நீள்கையில்
எழுகின்ற சிறு சலிப்பை
இன்னும் நினைவிலுள்ளது

சத்தமாகச் செல்லம் கொஞ்சி
ஓசையெழ நகைத்து
அந்நிசியிலேயே

சிதைந்த பொட்டு

பதுங்குகுழியை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அப்பா
திரும்பி வரமாட்டாரென்பதைத் தெரிந்து கொண்டே
திலகத்தினால் பொலிவு பெற்றிருந்த
அமைதியான உனது அதே வதனம்
நீ என்னை விட்டுப் போகையிலுமிருந்தது
நான் பார்த்திருக்க
நெற்றிப் பொட்டில் சுடப்பட்டு
வழிந்தோடிய குருதியால்
அம்மாவின் வெள்ளை முகம் நனைந்தூறிச் சிவந்தது
அழுவதை மாத்திரமே
அறிந்து வைத்திருந்த நான்
உனதுடலைக் கட்டியணைத்து
விம்மியழுதேன்
விம்மியழுதேன்
விம்மியழுதேன்

.....

வெளிப்பற்ற
மரத்தடிப் பள்ளிக்கூடம்
பழகிப் போனதிப்பொழுது
பதுங்குகுழிகள் இல்லையென்பதைத் தவிர்த்து
வேறு மாற்றம் ஏதுமில்லையிங்கு
வெடியோசைகளுக்கு
அஞ்சி நடுநடுங்கியதை விடவும்
நெஞ்சு பதைபதைக்கிறது
ஏனென்றறியாமலேயே
விழிகள் ஊற்றெடுத்து வழிகின்றன
உனை எண்ணியே பார்க்கையில்

நெற்றிப் பொட்டைப் பற்றிக் கேட்காதீர்
அம்மாவுக்கு இல்லாத பொட்டை
இனியென்றும் வைத்திட மாட்டேன் நான்
அம்மா அப்பா குறித்து
கற்பித்தல் கரவும் வேண்டாம்
என்னால் மாத்திரமல்ல
எம்மெல்லோராலும் அதைத் தாங்கிட இயலாது

ஈழத்தில் – தமிழில் – கவிதை மொழிபெயர்ப்பு சில அவதானிப்புக்கள்

செ.யோகராசா

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று வற்புறுத்திய பாரதியாரின் புகழ் பரப்பிய முன்னோடிகளுள் ஒருவரான சுவாமி விபுலானந்தரே ஈழத்தில் தமிழில் மொழிபெயர்ப்புக் கவிதை முன்னோடியாகத் திகழ்கின்றார். சுவாமி விபுலானந்தர் தொடக்கம் (1916) கெக்கிறாவ ஸுலைகா வரை (2009) ஈழத்து மொழிபெயர்ப்புக் கவிதை வளர்ச்சி பற்றி உன்னிப்பாக அவதானிக்கின்ற போது சமகால சமூக, அரசியல், இலக்கிய நிலைமைகளுக்கேற்ப உருவாக்கம் பெற்றிருப்பதாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் வாழ்ந்த ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்களுள் ஒரு சாரார் மேலைத்தேய இலக்கியங்களைத் தமிழிற்கு அறிமுகப்படுத்த விழைந்தனர். விபுலானந்தரின் நான்கு மொழிபெயர்ப்பு முயற்சிகளினதும் அடிப்படை அது வாகவே தானிருந்தது. ஹோமர் எழுதிய 'ஏனேய' காவியத்தில் சில பகுதிகள் 1916ல் அவரால் மொழி பெயர்க்கப்பட்டன. (இதுவே ஈழத்தின் முதல் மொழி பெயர்ப்பு முயற்சி) மதங்கசூளாமணி (1924)யில் சேக்ஸ்பியரின் நாடகப் பகுதிகளும் வட மொழி நாடகப் பகுதிகளும் மொழிபெயர்ப்பாக இடம்பெற்றுள்ளன. 'ஆகாச வாணி' (1941) கட்டுரை 'ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப ஆரியமும் தமிழிலும் வல்ல பண்டித மணியாருக்கு ஆங்கில மொழிக் கவி நயத்தினை ஒரு சிறிது காட்டுதல் கருதி எழுந்த பாட்டிடையிட்ட உரைநடைத் தொடராகும்.' இக்கட்டுரையில் மில்டன், உவேட்சுவேத், கீத்சு, ஷெல்லி, தெனிசன், றபர்ட் பிறௌனிங் ஆகியோரின் சில கவிதைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விபுலானந்தரின் மொழிபெயர்ப்பு முயற்சிகள் தமுவல்ப் பண்பு கொண்டிருப்பதும் கடினமான தன்மை கொண்டிருப்பதும் பழந்தமிழ்ச் செய்யுட்களின் செல்வாக்குக் காணப்படுவதும் கவனத்திற்குரியன. ஆயினும் பிற்கால மொழி பெயர்ப்பு முயற்சிகள் எளிமைத் தன்மை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக் காட்டாக மில்டனின் கவிதை மொழி பெயர்ப்பு இவ்வாறு ஆரம்பிக்கின்றது.

விபுலானந்தர்

''நித்திலத்தை வாரி நிலத்தீலு குத்ததுபோற்
காலைப் பரிதி கதிர்காலும் வேளையிலே
உள்ளக் கவலையின்றி உணவுடலிற் சேர்தலினால்
நன்கு துயின்றெழுந்த நல்லோர் புகழ்அத்தன
இளங்காற் றிசையொலியும் இன்ப விலையொலியும்
வளஞ்சான்ற நீரருவி வாய்நின் றெழுமொலியும்
பள்ளி யெழுச்சிப்பண் பாடுகின்ற புள்ளொலியும்
ஆரா வுவகைதர அன்பிதயத் துள்ளூர...''

வங்காளக்கவி தாகூரின் 'பூஞ்சோலைக் காவலன்' மொழிபெயர்ப்பு முயற்சியில் அடிகளார் ஈடுபட்டமைக்கு ஆன்மீக நோக்குக் காரணமாயிற்று. இந்நோக்குடன் பின்னர் நவாலியூர் சோ.நடராசன் (கீதாஞ்சலி-1960) பரமஹம்சதாசன் (தீங்கனிச்சோலை) முதலானோரும் தாகூரின் கவிதைகளைத் தமிழிற்குத் தந்துள்ளனர். வடமொழிக் கவிஞனான காளிதாசனின் மேகதூதம் (1954) காவியமும் நடராசனால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட மொழி பெயர்ப்புச் சூழல் நாற்பதுகளின் பிற்பகுதியில் ஓரளவு மாற்றம் காண்கின்றது. ஈழத்தில் பிரக்ஞை பூர்வமாக நவீன இலக்கிய நாட்டம் முகிழ்ந்த நாற்பதுகளில் அதன் வெளிப்பாடாக இலக்கியச் சஞ்சிகைகள் வெளி வருகின்றன. இந்நிலையில் ஈழத்தின் முதல் இலக்கியச் சஞ்சிகையும் ஈழத்தில் முதல் முற்போக்குச் சஞ்சிகையுமான பாரதி (கொழும்பு 1946) நவீன கவிதை மொழி பெயர்ப்பு முயற்சியிலும் ஈடுபாடு காட்டியது. ''வங்காள மாணவர் சம்மேளனத்தின் சார்பிலே நடைபெற்ற சுதந்திர ஆர்ப்பாட்டங்களிலே பாடப்பட்ட கௌதம் சடோபாத்யாயாவினால் இயற்றப்பட்ட பாடலொன்றின் மொழிபெயர்ப்பு'' 'அதிலே ததும்பும் தேசபக்தி ஆவேசமும் அசையாத உறுதியும் அணையாத வீரமும் இலங்கை இளைஞர்களுக்கு ஆதாரமாக நிற்பதாக' என்ற குறிப்புடன் பாரதி (2)யில் இடம்பெற்றுள்ளது. அதன் ஆரம்பம் பின்வருமாறமைகிறது.

கே.கணேஸ்

'என் அருமைத் தோழனே
நான் வாழும் இடமறியாய்!
நகரின் தெருக்களிலே
நாலுமரம் சேருமிடம்
நான் உறங்கி வாழ்வதுண்டு
என் வீடு சிதைந்த கூடு
என் உயிரோ ஓய்வின்றி
ஓங்காரம் செய்து துடிக்குது!'

இப்பாடலை மொழி பெயர்த்தவர் பெயர் தரப்படாவிடினும் (பாரதி இதழின் ஆசிரியர்களுள் ஒருவரான) கே.கணேஸ் என்றே ஊகிக்க முடிகின்றது. (பாரதி இதழ்களில் பல பெயர்களில் அவர் கவிதை எழுதியுள்ளார்) ஈழத்து சிறுகதை, கவிதை வளர்ச்சி பற்றித் தெளிவான பார்வையுடன் கனவுகள் பல கண்ட பாரதியால் (நான்கு இதழ்களுடன் நின்று விட்டமையால்) அதிகமாக எதையும் சாதிக்காவிடினும், ஈழத்தில் தமிழில் பிரக்ஞை பூர்வமான விதத்தில் முதல் மொழி பெயர்ப்புக் கவிதையைத் தந்துள்ளதென்ற வரலாற்றுப் பதிவு அதற்குண்டு. அதனைவிட முக்கியமாகத் தனது எதிர்காலத்தையே மொழிபெயர்ப்பு முயற்சிகளில் ஈடு வைத்து பல கவிதை நூல்களைப் பின்னர் கே.கணேஸ் தருவதற்கான தீயினை மூட்டியதில் பாரதிக்கு முக்கிய பங்கிருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. பிற்காலத்திலே கே.கணேஸ் தந்த (கவிதை) மொழி பெயர்ப்பு நூல்களில் பின்வருவன இவ்வேளை நினைவுக்கு வருகின்றன.

ஹோசிமின் சிறைக் குறிப்புகள் (1973), பல்கேரியக் கவிதைகள் (1984), எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத்தாய் நாடே (1988), பாரதி பக்தன் பார்ப்பரா கவிதைகள்(1989), ஒரு சோவியத் கவிஞரின் புதுக் கவிதைகள் (1989), உக்ரேனிய மகாகவி தாரஸ்ஷெவ் சேன்கோ கவிதைகள் (1993).

எவ்வாறாயினும் ஈழத்தில்-தமிழில்-கவிதை மொழி பெயர்ப்பு வேரூன்ற ஆரம்பித்தது ஐம்பதுகள் தொடக்கமேயாகும். இவ்விதத்தில் இக்காலப் பகுதியில் வெளி வந்த ஈழத்தின் முதற் கவிதைச் சஞ்சிகையான தேன்மொழிக்கு (1955) முக்கிய இடமுள்ளது. தேன்மொழி, சீன, ஸ்பானிய, பிரான்சிய ஆங்கிலக் கவிதை மொழி பெயர்ப்புகளுக்கும் முக்கிய இடமளித்திருந்தது என்பதே கவனத்திற்குரிய விடயம். தேன்மொழியின் 2வது இதழில் அ.ந.கந்தசாமி மொழி பெயர்த்த சீனக் கவிதை ஒன்று நகைச்சுவை மிகுந்தது. தனக்குப் பிறந்த குழந்தையை அறியாமையையும் மடமையுள்ளவனாகவும் வளர்த்தெடுத்து அவனை மந்திரியாக்க எண்ணும் தந்தையொருவர் பற்றியதே அக்கவிதையாகும். அந்தக் கவிதையின் கீழே அக்கவிதை எந்த இலங்கை மந்திரியையும் குறிக்கவில்லை என்று அச்சிட்டிருந்தமை நகைச்சுவையின் உச்சமெனலாம்.

அதே வேளையில் பாரசீக, உருதுக் கவிதை மொழி பெயர்ப்பு முயற்சிகளும் இக்காலப் பகுதியில் இடம்பெறுகின்றன. ரூபாய்யத் (அப்துல் காதிறுலெப்பை) மஸ்னவி மலர்கள் (நுஃமான்) மௌலானாறூமியின் சிந்தனை (ஏ.இக்பால்) முதலியன இவ்விதத்தில் குறிப்பிடத் தக்க தொகுப்புகளாகின்றன.

அறுபதுகளில் வெவ்வேறு மட்டங்களில் நடைபெற்ற நான்கு கவிதை முயற்சிகள் கவனத் திற்குரியனவாகின்றன.

சிங்கள இலக்கியத்திலுள்ள சிறந்த நூல்கள் இதுகாறும் தமிழ் மொழியில் மொழி பெயர்க் கப்படவில்லை என்று வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (அணிந்துரையில்) கூறுகின்ற பின்புலத்தில் வைத்து நோக்கும்போது இக்காலப் பகுதியில் நவாலியூர் சோ.நடராசனால் மொழி பெயர்க்கப்பட்ட (15ம் நூற்றாண்டு டினரான) சிறீ இராகுலதேரர் இயற்றிய செலலிஹினி சந்தேசய (மூவை விடுதூது-1963) என்னும் நூலின் மொழி பெயர்ப்பு ஈழத்துத் தமிழிலக்கியம் முற்பட்ட வரலாறு ஆகிய இரு விதங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றதொன்று.

பல்வேறு ஆளுமை கொண்ட ஈழத்துக் கவிஞர் இ.முருகையனின் 'ஒரு வரம்' (1964) தொகுப்பும் இக்காலப் பகுதியில் வெளிவந்துள்ளது. இந்நூல் மொழி பெயர்ப்பு முறை தொடர்பான பிரச்சினைகள் சிலவற்றைக் கிளப்புகின்றது. உதாரணமாக சகிரா பவுண்டின் கவிதை பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஒரு வரம்

'சுருட்டுக் கடை வேண்டும் – எனக்கொரு
சுருட்டுக் கடை வேண்டும்
இருட்டுக்குக் காவலனே – அப்பனே
தேவா சனீசுரனே – எனக்கொரு
சுருட்டுக் கடை வேண்டும்

தட்டில் அடுக்கடுக்காய்ப் – புகையிலை
தாங்கி அமைந்திருக்கும்
பெட்டிகள் வெள்ளியிலே – கிடந்தங்கு
பேரொளி வீச வேண்டும்

சுங்கான் புகையிலையும் – சுதியான
சுதுமலை யிற்சுருட்டும்
அங்காந்து கொள்ளத் தாண்டி – அழைக்கிற
அம்பன் புகையிலையும்

கொஞ்சம் துருப்பிடித்த – தராசொன்றும்
கொண்டு தர வேண்டும்
வஞ்சப் பொது மகளிர் – சொட்டை சொல
வந்து செலல் வேண்டும்
தங்கள் குழல் திருத்தித் – தலையினைச்
சாய்த்தும் செலல் வேண்டும்
---------'

இ.முருகையன்

இங்கெழும் பிரச்சினைகளுளொன்று மொழிப் பெயர்வு சூழலுக்கமைவாக மாற்றம் பெற லாமா என்பது. கவிமணியின் 'ஆசிய ஜோதி' மொழி பெயர்ப்புக் காலம் தொடக்கம் இருந்து

வரும் பிரச்சினை இது. மொழி பெயர்ப்பு அவ்வாறமைவது பொருத்தமாகாது என்பதே சரியானதென்று கூறவேண்டும்.

மற்றொரு பிரச்சினை மொழி பெயர்ப்பில் மரபுவழி யாப்பும் அவ்வழிப்பட்ட ஓசையும் இ.இரத்தினம், இ.முருகையன், சக்தீ அ.பாலையா, சோ.பத்மநாதன், கே.கணேஷ் முதலான பலராலும் பின்பற்றப்பட்டு வந்திருப்பது. (இவர்களுள் சிலர் பழந்தமிழ் இலக்கிய மொழிப் பிரயோகங்களையும் பின்பற்றி வருவது வெளிப்படையானது.) இத்தகைய கவிஞர்களுள் ஒரு சிலரே இம்முயற்சியில் வெற்றிபெற்றுள்ளனர். இத்தகையோருள் சக்தீ அ.பாலையா முதன்மை இடம் பெறக்கூடியவர் என்று கூறத் தோன்றுகிறது. 'ஆழப் புதைந்த / தேயிலைச் செடியின் / அடியில் புதைந்த / அப்பனின் சிதை மேல்'

என்றவாறான அடிகள் சாதாரண வாசகர் மனங்களிற் கூட அதிர்வுகள் ஏற்படுத்தியிருப்பினும் தலைமுறையினர் சிலர் அவரது கவிதை மொழி பெயர்ப்பிலும் குறைகண்டு புதிதாக மொழிபெயர்க்க முற்பட்டிருப்பதை இலக்கிய ஆர்வலர் அறிந்திருப்பர். (ஆதாரம் : நந்தலாலா)

கவிதைச் சஞ்சிகைகள் என்ற விதத்தில் இக்காலப் பகுதியில் வெளிவந்த நோக்கு (1964) தேன்மொழியைவிட மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளது எனலாம். அதுமட்டுமன்றி கவிதை பற்றிய மேலைத்தேய விமர்சனக் கருத்துக்களுக்கு முக்கிய இடம்கொடுத்திருப்பதும் கவனத்திற்குரியது. ஆயினும் நோக்கு உட்பட ஈழத்தில் வெளிவந்த கவிதை இதழ்களுள் இக்காலப் பகுதியில் வெளிவந்த கவிஞன் (1969) இதழுக்கு மிக முக்கிய தொரு இடமுண்டு. சமூக நோக்குடைய ஈழத்துக் கவிதைகளோடு அத்தகைய நோக்கு மிகுந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கும் சிறப்பிடம் கொடுத்திருந்தது. கவிஞன் இத்தகைய காரணங்களினால் பொதுவாக ஈழத்திலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் புதிய தலை முறைக் கவிஞர்கள் காத்திரமான கவிதைகளை எழுதுவதற்கான அடித்தளமிட்டிருப்பது இன்று பின்நோக்கிப் பார்க்கும்போது புலப்படுகின்றது.

சி.சிவசேகரம்

மேலும் இக்காலப் பகுதியில் வெளிவரத் தொடங்கிய மல்லிகை (1968) மொழி பெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கியதோடு காலப் போக்கில் சிங்களக் கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் அதிகரிப்பதற்கும் வழிகோலியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எழுபதுகளில் 'கண்டி'யிலிருந்து வெளிவந்த 'நதி' (1975) மாசேதுங் கவிதை மொழிபெயர்ப்புகளூடாக, 'சிவசேகரம்' மொழிபெயர்ப்புத் துறைக்குள் பிரவேசிப்பதற்கான சிறந்த வாய்ப்பினை வழங்கியது. கே.கணேஷிற்கு அடுத்த நிலையில் அதிக மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டவர் சிவசேகரம் என்றே கூறவேண்டும் (உ+ம்: மா ஒ சேதுங் கவிதைகள் 1976, பாலை 1991, பணிதல் மறந்தவர் 1993 மறப்பதற்கு அழைப்பு 2003)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கே.கணேஷின் முற்குறிப்பிட்ட மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்புகள் இக்கால தொடக்கமே மறுபடி வெளிவர ஆரம்பித்தன.

எழுபதுகளின் பிற்பகுதி தொடக்கம் பேரினவாத ஒடுக்குமுறையும் போராட்ட உணர்வும் அதிகரித்த ஈழச்சூழலில் அதற்கமைவான கவிதைகளை ஆர்வமுடன் வெளியிட ஆரம்பித்ததில் 'அலை' (1975) தாயகம் (1984) புதிசு (1980) ஆகியவற்றிற்குக் கணிசமான பங்குள்ளது.

ஈழத்துச் சமூக அரசியல் நிலைமைகளுக்கேற்ப மொழி பெயர்வுக் கவிதை முயற்சிகள் தொடங்குவதே-இளந்தலைமுறைக் கவிஞர்கள் மத்தியில் அவை பெருமளவு செல்வாக்குச் செலுத்துவதை-எண்பதுகளிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. இவ்விதத்தில் 'காலத்தினால் செய்த உதவி' எனும்படியாக பலஸ்தீனக் கவிதைகள் (நுஃமான் 1981) என்ற தொகுப்பின் வரவு அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் ஈழத்துக் கவிஞர்களால் பலஸ்தீனக் கவிதைகள் மட்டுமன்றி ஆபிரிக்கக் கவிதை களும் மொழி பெயர்ப்புக்குள்ளாகின்றன. இவ்வகையில் பின்வரும் தொகுப்புக்கள் வெளிவந் தன. நாகரீகத்தின் நிறம் (என்.சண்முகலிங்கன்), பணிதல் மறந்தவர் (ஒடுக்குமுறைக்கு எதி ரான மூன்றாம் உலகக் கவிதைகள் – சி.சிவசேகரம்), ஆபிரிக்கக் கவிதை (சோ.பத்மநாதன்), பலஸ்தீனக் கவிதைகள் (எம்.ஏ.நுஃமான் 2ம் பதிப்பு), மறப்பதற்கு அழைப்பு (சி.சிவசேகரம்), காற்றின் மௌனம் (பண்ணாமத்துக் கவிராயர்).

இவற்றிற்கு முன்பதாகவே 'அக்னி' (1975) சஞ்சிகையின் ஒரு இதழ் முழுவதும் அமெரிக் கக் கறுப்புக் கவிதைகளுக்காக ஒதுக்கப்பட்டமை கவனத்திற்குரியது.

தொண்ணூறுகளில் 'சரிநிகர்' ஏனைய இலக்கிய முயற்சிகள் போன்று கவிதை மொழி பெயர்ப்புகளிலும் கரிசனை காட்டி வந்தது. இவ்வகையில் சரிநிகரில் எழுதியோருள் புதிய தலை முறை சார்ந்த ஒருவரான எம்.கே.எம்.ஷகீப்பின் 'நாளை இன்னொரு நாடு' தொகுப்பும் கவ னத்திற்குரியது. இதிலுள்ள அரபு மொழிக் கவிதைகள் அரபின் நேரடியான மொழிபெயர்ப்பு என்பதும் பெண் நிலைவாத நோக்குடைய கவிதைகள் சிலவற்றை இது கொண்டிருப்பதும் இத்தொகுப்பின் சிறப்பம்சங்களாகும் பெண் நிலைவாத நோக்குடைய கவிதைகளை மொழி பெயர்ப்பவர்கள் சிலருள் சி.ஜெயசங்கர் விதந்துரைக்கப்பட வேண்டியவர். பெண் சஞ்சிகையில் வெளிவந்த அவரது கவிதைகள் வாசகர் மத்தியில் செல்வாக்குற்றன.

புலம்பெயர்ந்த தமிழ்க் கவிஞர்களில் மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபடும் ஒரு சிலருள் க.கலாமோகன், R.சிவலிங்கம் (உதயணன்), வாசுதேவன் முதலானோர் முக்கியமானவர்கள். இவர்களுள் விசேடமான கவனிப்பிற்குரியவரான க.கலாமோகனின் சிறப்பு பிரெஞ்சு மொழிக் கவிதைகளை நேரடியாகப் பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்த்திருப்பதாகும்.

நிறையச் சாப்பிடுங்கள் – ஜோ கொஞ்சி / 'நிறையச் சாப்பிடுங்கள்' – கோஷங்கள் சொல் கின்றன / 'நிறைய மீன்கள் நிறைய இறைச்சி / நிறைய சோறு சாப்பிடுங்கள்'– கோஷங்கள் வற்புறுத்துகின்றன / ஆனால், நானோ / சம்சாரியாகி வேலையில்லாத / மூன்றாவது வருடத் தில் இருக்கிறேன் / எனக்கு / இந்தக் கோஷங்கள் / இப்படித்தான் பொருந்துகின்றன. / 'நிறைய புல்லைச் சாப்பிடுங்கள்'.

R.சிவலிங்கம் (உதயணன்) தந்த மொழிபெயர்ப்பு 'கலேவலா' (1994) என்ற பின்லாந்தின் தேசியக் காவியமாகும். அதுவும் நேரடியான மொழி பெயர்ப்பாகும். இ.பன்ஏன்லா சந்ததியின ரின் ஆதி முதல்வரே கலேவலா என்போர். இவர்கள் மத்தியில் நீண்ட காலமாக வாய்மொழி யாக நிலவி வந்து 1849இல் எழுத்துருவில் முழுமை பெற்றது தான் இக்காவியம். இம் மக்கள தும் தமிழ் மக்களதும் பண்பாட்டு ஒருமைப்பாடுகள் சிலவற்றை முன்னுரையில் மொழி பெயர்ப் பாளர் விளக்குவது குறிப்பிடத்தக்கதாகும். கனவு துர்ச்சகுனமாக விளங்குவது அத்தகைய வற்றுளொன்று அது பற்றியும் மொழிபெயர்ப்பின் தன்மை பற்றியும் அறிந்து கொள்வதற்கா கக் கவிதையின் பகுதி இங்கே இடம்பெறுகின்றது.

சோ.பத்மநாதன்

'அன்பே இனிய அஹ்தியே கேளாய்
போருக்கு நீயும் புறப்பட வேண்டாம்
துயிலும் பொழுது தோன்றியதோர் கனா
அமைதியாய் உறங்கும் அப்போ கண்டேன்.

உலைக்களம் போல ஒரு நெருப்பெழுந்தது
சுவாலையாய் எழுந்து சுடர்விட்டெரிந்தது
சாளரத்தின்கீழ் சரியாய் வந்தது
பின்சுவர்ப் பக்கமாய்ப் பெரிதாய்ச் சென்றது.

உடன்சுழன் றங்கிருந் துள்ளே நுழைந்தது
உக்கிரம் கொண்டது உயர் நீர்வீழ்ச்சி போல்
தரையிலே இருந்து தாவிக் கூரை
பலகணி வழியே பரவிச் சென்றது.'

எம்.ஏ.நுஃமான்

R.சிவலிங்கத்தின் மொழிபெயர்ப்புக் கவிதை செம்மையுறுவ தற்குத் 'தீமிலைத் துமிலன்' பேருதவி புரிந்துள்ளதாக அறிய முடி கின்றது.

நவீன சிங்களக்கவிதைகள் ஷம்ஸ், நீள்கரைநம்பி, இப்னு அஸுமத் முதலானோரினால் எண்பதுகள் தொடக்கம் அவ்வப் போது மொழிபெயர்க்கப்பட்டு வந்திருப்பினும் சிங்களக் கவிதைகள் தொகுப்பு வடிவம் பெறுவது தொண்ணூறுகளிலிருந்தே இவ்விதத் தில் வெவ்வேறு மட்டங்களில் இடம்பெற்ற மூன்று முயற்சிகள் கவனிக்கப்பட வேண்டியனவா கும்.

10 சிங்களக் கவிதைகளினதும் 10 தமிழ்க் கவிதைகளினதும் மொழி பெயர்ப்புகள் கொண் டது 'இணைப்போம் கரங்கள்' (1995) என்ற தொகுப்பு நாட்டு மக்களது துன்பங்கள், ஒற்றுமை, சமாதானம் முதலான விடயங்கள் பற்றி சிங்கப்பூர் செல்வராஜா தொடக்கம் சு.முரளீதரன் வரை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பிரதேசக்கவிஞர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பாகிறது.

'தென்னிலங்கைக் கவிதை' (2003) கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் சோ.பத்மநாதன் – இன முரண்பாடுகள், சமூகப் பிரச்சினைகள், குடும்ப உறவுகள், காதல், அடையாளத் தேடல் எனப் பல்வகைப்பட்ட கவிதைகள் இத்தொகுப்பிலுள்ளன. மாதிரிக்காக ரஞ்சினி ஒபயசேகரா வின் கவிதையொன்று இங்கே இடம்பெறுகிறது.

'அம்மா / நினைவிருக்கிறதா / நான் வீட்டில் வாழ்ந்த காலத்தில் / என்னை /'சின்ன மகள்'என்றே அழைப்பாய் / அது / (குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக) / நான் புறப்படுமுன் / கண்காணாத் தொலைவில் / அந்நியர்களிடை / என்னை / 'லிஸி'என்றே அழைக்கிறார்கள் / தெருவில் / இரு கைகளிலும் தலையிலும் / சுமைகளைத் தூக்கிச் செல்கையில் / என்னைப் / பணிப்பெண் என்கிறார்கள் / சின்னப் பிள்ளையின் கையைப் பிடித்து / அதை / பள்ளிக்குக் கூட்டிச் செல்கையில் / அதோ போகிறாள் பிள்ளையின் செவிலி/ என்கிறார்கள் / உணவு சமைக்கையில் / பரிமாறுகையில் / தண்ணீர் அள்ளுகையில் / விறகு கொத்துகையில் / என்னை / சமையற்காரி என்கிறார்கள் / ஆனால் / அம்மா, / அன்றாட வேலை முடித்து / என் பாயில் / உடலை நீட்டுகையில் / என் கனவுகளில் / நீ வந்து / காதோடு அழைக்கிறாய் / 'சின்னமகளே என்று'

பிறிதொரு தொகுப்பு 'நாளையும் மற்றொரு நாள்' சிங்கள இனத்துவக் கவிதைப் பாடல்க ளின் மொழிபெயர்ப்பு என்ற எம்.சீ.ரஸ்மின் (2008) தொகுப்பு. தொகுப்பு முன்னுரையில் ஆசிரி யர் கூறும் சில விடயங்கள் கவனத்திற்குரியவை.

'தமிழ் சிங்கள இன முரண்பாடு தொடர்பான உரையாடல்கள் தமிழ் இசைப் பாடல்களிலும் பார்க்க சிங்கள இசைப் பாடல்களில் அதிகம் முனைப்புப் பெற்றிருப்பதை அதனைக் கற்றுணர் ரும் யாரும் மறுக்க முடியாது... சிங்களத்தில் வெளியான பழைய தேசாபிமானப் பாடல்களில் எனக்கு உடன்பாடு குறைந்து கொண்டு வருகிறது... இன்றைய சூழ்நிலையில் இன முரண்பாடு சிக்கலான ஒரு சமூகப் பிரச்சினையாக பரிணாமம் எடுத்திருக்கின்றபோது மேலெழுந்த வரி யாக ஆகா... ஓகோ... என்று சமத்துவம் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. பாடல்கள் கொண் டமையும் பொருளின் முக்கியத்துவம் கருதியே அவை மொழி பெயர்ப்புக்காக தெரிவு செய்

யப்பட்டன.' ஆக இத்தொகுப்பிலுள்ள சிங்களப் பாடல்களைப் படிக்கும்போது அவை வித்தியாசமானதொரு கவி அனுபவத்தை வாசகர்களுக்கு அளிக்கக் கூடியனவாகவுள்ளன என்றே கூறவேண்டும்.

ஈழத்தில்-தமிழில்-கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்று சிந்திக்கின்ற போது அண்மையில் வெளி வந்த இரு வித்தியாசமான தொகுப்புகள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றுள் ஒன்று 'பிளேக்' கவிதைகள் (வைரமுத்து சுந்தரேசன்-2007). இவை வில்லியம் பிளேக் (1757-1827) என்ற ஆங்கிலக் கவிஞரது கவிதைகளின் மொழி பெயர்ப்புகள். அன்னாரது பிள்ளை உள்ளப் பாடல்கள் (Songs of Innocence) அனுபவப் பாடல்கள் (Songs of Experience) என்ற இரு தொகுதிகளில் இடம்பெற்றுள்ள சில பாடல்களின் தமிழாக்கங் கள். மனித ஆத்மாவின் இரு முரண் நிலைகள் பற்றியவை இவை. 'பிள்ளை உள்ளகப் பாடல்கள்' மானிடப் பண்பு, மானிட சமூகம், என்பவற்றை நம்பிக்கைத் தொனியில் நோக்க 'அனுபவப் பாடல் கள்' அவற்றை அவநம்பிக்கைத் தொனியுடன் அணுகுவதைக் காணலாம். ஆக இத்தொகுதிப் பாடல்களும் வித்தியாசமான அனுபவம் தருவனவே:

மற்றொரு தொகுப்பு 'உன்னை வாசிக்கும் எழுத்து' (அஷ்ராப் சிஹாப்தீன் 2007) ஜமால் ஜுமா என்ற ஈராக் கவிஞனின் நெடுங் கவிதையான இது, 'நூல் எனும் மாய சூத்திரம் எழுப்பும் மனச் சலனங்களை நுண்ணுர்வுடன் அற்புதமாகப் பதிவு செய்கிறது' என்பதனை அதன் ஆரம் பப் பகுதியை வாசிக்கின்றபோது உணர முடிகின்றது.

1

நாம் எல்லோரும் / சலிப்பு / தினமும் அதை வாசிக்கிறது

2

மயானமானது / திறந்த / ஆனால் புதிரான ஒரு புத்தகம் / என்றாவது ஒரு நாள் / உடல் அதை வாசிக்க வேண்டும்

3

மயானம் ஒரு மூடிய புத்தகம் / தனது வாசகர்கள்
எல்லோருக்காகவும் / ஒருமுறை திறக்கிறது

4

யன்னல் கூட புத்தகங்களே / ஒவ்வொரு பக்கத்தினதும் / அதே காட்சியை / அது வெளிப்படுத்துகிறது.

5

பூக்கள் / அறியப்படாத புத்தகங்கள் / அதன் வாசனை / அதன் ரகசியங்களை வெளிப்படுத்துகிறது

6

காதலின் திறந்த புத்தகம் / ஒரு ஆண் பக்கமும் / ஒரு பெண் பக்கமுமாய்க் / கட்டிலில் கிடக்கிறது.

அ.யேசுராசா

கவிதை மொழிக் கையாளுகையை நுட்பமாகப் புரிந்து கொண்டு மொழி பெயர்ப்பு முயற்சியில் எழுபதுகளின் இறுதி தொடக்கம் ஈடுபட்டு வந்துள்ள அ.யேசுராசாவின் 'பனிமழை' (2002) தொகுதியும் இக் காலப் பகுதியிலே வெளிவருகின்றது.

இது வரை இக்கட்டுரையில் ஈழத்தில்-தமிழில் கவிதை மொழி பெயர்ப்பு முயற்சியிலீடுபட்டிருக்கின்ற பெண் கவிஞர்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. நிர்மலா, கெக்கிராவ ஸுலைஹா, வினோதினி, மதுபாஷினி, (அண்மையில்) பஹீமா ஜகான் முதலான மிகச் சிலரே இவ்வேளை நினைவிற்கு வருகின்றனர். இவர்களுள் அதிக மொழி பெயர்ப்புச் செய்த

வரும் நூல் வடிவிலே தந்தவருமான ஒரே ஒருவர் கெக்கிராவ ஸுலைஹா மட்டுமே (பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும் 2009) கன்னடப் பெண் கவியான மகாதேவியக்காவின் கவிதை யொன்றின் தலைப்பே அவரது நூலின் தலைப்பு. ஏ.கே.ராமானுஷத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பு வழியாகத் தமிழிற்கு ஸுலைஹாவூடாக இப்போது கிடைத்துள்ள அருமையான தொரு கவிதை அது. இவ்வாறே இந்தியா, பலஸ்தீனம், சிங்களம்(ஈழத்து), ஆங்கிலம் முதலாக கவிஞர்களின் 69 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 95 ஆண்டுகள் கொண்ட ஈழத்து தமிழ் மொழி பெயர்ப்புக் கவிதை வரலாற்றை ஆழமாக நோக்கும்போது பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தியதாக கவிதை தொடர்பான மூன்று முயற்சிகள் பற்றி இறுதியாகக் குறிப்பிடலாமென்று கருதுகின்றேன்.

இவற்றுளொன்று சக்தீ அ.பாலையாவின் மொழிபெயர்ப்புக் கவிதையான 'தேயிலைத் தோட்டத்திலே' (1969) மலையகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களின் நூற்றாண்டுக்கு மேற்பட்ட துயரங்களின் வரலாற்றை சி.வி.வேலுப்பிள்ளை ஆங்கிலத்தினூடாக உலகிற்குத் தெரியப்படுத்துவதனைத் தமிழினூடாக ஈழத்து வாசகருக்குக் குறிப்பாக மலையக வாசகர்களுக்குத் தெரியப்படுத்தியவரான சக்தீ அ. பாலையா அவ்வழி அவர் வாசகர்கள் படைப்பாளர் மத்தியில் சி.வி ஆளுமை பற்றி அறியப்படவும் படைப்பிற்கான உந்துதல் ஏற்படவும் வழிவகுத் துள்ளார் என்பதில் தவறில்லை.

மற்றொன்று நுஃமானின் 'பலஸ்தீனக் கவிதைகள்' (1981) தொகுப்பு. முற்குறிப்பிட்டவாறு இக்கவிதைகள் எண்பதுகளில் ஈழத்தில் அரசியல் கவிதை எழுதிய புதிய தலைமுறைக் கவிஞர் கள் மத்தியில் ஏற்படுத்திய பாதிப்பு மிக ஆழமானது. இத் தொடர்பில், இதன் 2ம் பதிப்பின் (2000) முன்னுரையில் மொழிபெயர்ப்பாளர் பின்வருமாறு குறிப்பிடுவது கவனிக்கப்பட வேண்டியது.

'கவிதையை-இலக்கியத்தை சமூக அரசியல் இயக்கங்களிலிருந்து வேறு பிரித்து அதைத் தன் உள்ளுணர்வின் குரலாகப் பூஜிக்கும் சில தமிழ் நாட்டுப் படைப்பாளிகளுக்கு, விமர்சகர்களுக்கு அல்லது வாசகர்களுக்கு இந்தக் கவிதையின் குரல் ஒரு நெருடலாக, கவிதைக்குப் புறம்பான வெற்றுக் கோஷமாகக் கூடத் தோன்றக்கூடும். இதற்கு மறுதலையில் ஈழத்துப் படைப்பாளிகள் வாசகர்களைப் பொறுத்தவரை இது அவர்களின் உணர்வின் குரலாக அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது. கடந்த இருபது ஆண்டுகளுள் பலஸ்தீனக் கவிதை சமகால ஈழத்துப் படைப்பாளிகள் வாசகர்களைப் பொறுத்தவரை ஈழத்து தமிழ்க் கவிதை மரபுக்குள் உள்வாங்கப்பட்டதன் பின்னணி இது தான். உலகின் எந்த ஒரு மூலையிலும் எல்லாவிதமான அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடும் மக்களின் குரலாகவும் பலஸ்தீனக் கவிதைகளின் குரல் ஒலிக்கின்றது என்பதில் தவறில்லை.'

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளையொத்த பல கவிதைகளை ஈழத்தின் புதிய தலைமுறைக் கவிஞர்களாலும் போராளிக் கவிஞர்களாலும் எழுதப்பட்டிருப்பது கண்கூடு. (விரிவஞ்சி எடுத்துக்காட்டுகள் இடம்பெறவில்லை).

பிறிதொரு முயற்சி ரஷ்யக் கவிதையொன்று பற்றி ஏ.ஜே. கனகரட்னா எழுதிய கட்டுரை பற்றியது. (செங்காவலர் தலைவர் யேசுநாதர்) அதன் முக்கியத்துவம் பற்றி ஏ.ஜே.யின் கூற்றினூடாக விளங்கிக் கொள்ளலாம். ரஷ்யப் புரட்சியைப் பராக்தியின் வெளிப்பாடாக பாரதி கண்டார். இது இயக்கவியல் பொருள் முதல் வாதத்திற்கு ஒத்துவராதாயிருக்கலாம். ஆனால் ரஷ்யக் கவிஞன் ஒருவனும் இதை ஒத்த பார்வையில் ரஷ்யக் புரட்சியை நோக்கினான் என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம். அக்கவிஞனையும் அலெக்சாண்டர் புளொக் - அக்கவிதையையும் (முன்னிருவர்) அறிமுகப்படுத்துவதே இச்சிறு குறிப்பின் நோக்கம். எமது முன்னோடி விமர்சகர்கள் சிலர் தொடர்பாக சிந்திக்கத் தூண்டும் கடுகு சிறிதாயினும் காரம் பெரிதென்னும்

கட்டுரையை இளந் தலைமுறைப் படைப்பாளர்களும் விமர்சகர்களும் வாசிப்பதவசியமே.

இறுதியாக எனது பின்வரும் குறிப்புகள் மனங் கொள்ளப்பட வேண்டியவையாகின்றன.

1) இக்கட்டுரை மொழி பெயர்ப்புக் கவிதை முயற்சி பற்றி உள்ளடக்க ரீதியிலேயே அணுகியுள்ளது.
2) மொழி பெயர்ப்பின் அழகுகள் நுட்பங்கள் பேதங்கள் (உ-ம்: சிவசேகரம், நுஃமான் ஆகிய இருவரும் மொழிபெயர்த்த ஒத்த கவிதைகளுக் இடையிலான வேறுபாடுகள்; சிவசேகரம், எஸ்.வி.இராஜதுரை, செ.யோகநாதன் மொழி பெயர்த்த மா.சோதுங் கவிதைகளுங்கிடையிலான வேறுபாடுகள்) பற்றி இங்கு நோக்கப்படவில்லை.
3) தரப்பட்ட நூல்களின் விபரங்கள், கவிதைச் சஞ்சிகைகளின் விபரங்கள், கவிஞர்களின் விபரங்கள் நிச்சயமாகப் பூரணமடைய வேண்டியன என்பதில் சந் தேகமேயில்லை
4) நாடக மொழி பெயர்ப்புக்கள் கவனிக்கப்படவில்லை.
5) மொழி பெயர்ப்புக் கவிதைகளால் ஈழத்து வாசகர்கள், படைப்பாளர்கள் பெற்ற பயன்கள் பற்றியும் போதியளவு இங்கு கவனிக்கப்படவில்லை.

வி.கு: ஈழத்தில்-தமிழில் மொழி பெயர்ப்புக் கவிதை முயற்சியில் ஈடுபட்ட மேலே குறிப்பிடப் படாத கவிஞர்கள் சிலரது பெயர்கள் பின்வருமாறு:

சசி (சண்முகம் சிவலிங்கம்), சிவகுமாரன், கே.எஸ்.சுதிரவேற்பிள்ளை, சி.இராமச்சந்திரன் (கண்டி), யோகன் (செ.யோகநாதன்), சில்லையூர் செல்வராசன், இராசரத்தினம் வ.அ.வேலாயுதபிள்ளை, செ.மகாலிங்கம், திமிலை, சாரதா (வித்துவான் சரவணமுத்து) கனகரத்தினம், த.காவலூர் இராஜதுரை, சசீதரன் (மட்டக்களப்பு), ந.சத்தியபாலன், மஸாஹிர ஏ.சி.திரு.பீலிக்ஸ், காரை சுந்தரம்பிள்ளை, மு.பொன்னம்பலம், வ.ஜ.ச.ஜெயபாலன், கு.வில்வரத்தினம், ஹஸன், கந்தையா ஸ்ரீகணேசன், இராஜ தர்மராசா , வி.ஜெ.கென்னடி, திசையுக்ரசிங்கன், சௌஜன்ய ஷாகர், ரவி ரத்தினவேல்.

●

விலை:- 65/=

மழை மரம்

ஆசிரியர்
ரவிக்குமார்

வெளியீடு
க்ரியா
H-18, Flat No 3,
South Avenue,
Thiruvanmiyur, Chennai 600 041.

மஞ்சி திவானா (பஞ்சாபி)

தமிழில் - கஞ்சாக் கறுப்புக் கள்ளன்

கணவன்

கணவன் பசியுடன் கூடிய ஓநாய்
மற்ற ஓநாய்களிடமிருந்து 'காப்பாற்ற'
வந்தவன்
ஆனால்
உன்னைத் தன் தாடைக்குள்
எடுத்துக் கொள்வான், கூறுவான்
எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறாய்!
உன்னை ஒன்றும் தின்றுவிடமாட்டேன்
கணவன் பசியுடன் கூடிய ஓநாய்
மற்ற ஓநாய்களிடமிருந்து 'காப்பாற்ற'
வந்தவன்
ஆனால்
உன்னைக் கூறுகளாக பிய்த்தெறிவான்
தனது யந்திரத்துக்குள்
உனது ஒவ்வொரு கூறுகளையும்
புகுத்திக் கொள்வான் பின் கேட்பான்
உனது அடையாளம் தான் என்ன?
'ரெட்ரைடிங்ஹூட்' போல்
ஓநாயிடமிருந்து தப்பி ஓடிவிட நீ,
நினைப்பாய்
அவன் இப்போது உன்னைத் தாவிப் பிடிப்பான்
நீயும் நம்பிக்கை தொலைந்து
உனது தொலைந்த அடையாளத்தைக்
காண முயல்வாய்
கணவன் பசியுடன் கூடிய ஓநாய்

மரியம் என்பவள் கற்களால் எறிந்து கொல்லப்படும்போது அளித்த வாக்கு மூலம்

ஆங்கில மூலம்: பிரியா சருக்கே சயேயா

தமிழில்: கஞ்சாக் கறுப்புக் கள்ளன்

ஆம் இது உண்மை, இவை எல்லாமே உண்மையே
எனது உடலில் ஒரு கெட்ட தேவதை உள்ளது
ஆம் இது உண்மை, இவை எல்லாமே உண்மையே

அந்த வறண்ட மலைகளில்
எனது கணவன் கல்லெட்டுபவன்
அது உண்மை
அவன் கற்களை தோண்டுவன்
அவன் அவற்றை அரைத்துப் பொடியாக்குவான்
அந்தப் பொடிகளிலிருந்து வர்ணங்களை ஆக்குவான்
உண்மை சொர்க்கங்களும் வானங்களும் அவனால்
வரையப்பட்டன
உண்மை இரகசியமாகத்தான்
அவன் சித்திரங்கள் வரைவான்
இது உண்மை
ஆம் அவன் என்னிலிருந்து
விலகினான் அது உண்மை
அவன் போர்க்களத்தில் இறந்திருக்கலாம்
அவன் உடல்,
பலவீனங்களாகச் சிதைந்திருக்கலாம்
ஆம், நான் துக்கம் காத்தேன்
காத்தேன்
அது உண்மை உண்மை தான்
எனது துயரத்தில் நொறுங்கிப் போனேன்
பின் அவற்றை மறந்து போனேன்
இது கூட உண்மை தான்
ஒரு மரமாகளின் கடமையை
மறந்து போனேன்
எனக்கு வயதோ பதினேழு தான்
ஆம், என் கையை ஒருவன் முத்தமிட்டான்
நான் அவனை என்னுள் இழுத்துக் கொண்டேன்
எனது உள் அங்கங்கள் கனிந்தன

சந்தோசத்துடன் பிறந்து கொண்டேன்
இது உண்மை தான்
ஒரு கற்புவ்வம் கனிந்தது
இனைந்து கொடுக்கது
சந்தோஷத்துடன் பிறந்து கொண்டேன்
ஆம் இது உண்மை தான்
அவனது தழுவல் முகத்தில் கண்களில்
மலரை வருடுதல் போலாகியது
நான் தூய நீராக
மாறினேன்
உண்மை
எனது அணைப்பிலிருந்து
யுத்தம் அவனை உறுஞ்சியது
இது கூட உண்மையே
ஆனால் இதற்கு முன்பே
நாம் அடையாளம் காணப்பட்டோம்
நான் பிறப்பேன்
அவன் இருட்டினுள் கரைந்தான்
ஆம் நான் கேள்வியுறினேன்
அவனும் விரமணம் அடைந்ததாக
நான் கருங்கல் குன்றாக நின்றேன்
மீண்டுமொருமுறை நிற்பேன்
சாகும் வரை கல்லால் எறியப்படுவதற்காக
நான் நிற்பேன்
கற்கள் என் கண்களில் பற்களில்
மூளையில்
ஆம், ஆம் ஊனமிட்டு அலறும்
மிருகமாக
உங்களால் ஆக்கப்பட்டுள்ளேன்
இது உண்மையாக்கப்படும்
எனது ஒரே உண்மையை
நீங்கள் இப்போ
ஆக்குவீர்கள்.

யோன் டன் கவிதைகள்

தமிழில்:- வைரமுத்து சுந்தரேசன்

பிரியாவிடைப் பிரசங்கம்
துயர் துடைத்தல்



விஸ்வேம் பிரேக்

தர்மவான்கள் சாந்தியுடன் உயிர் பிரியும் போது
சலனமின்றி விசனமின்றிப் பிரிவர்
துயருற்ற அவர் தோழர் சிலர்,
"இவ்வாறு இவர் மூச்சு ஒய்கிறது"
என இயம்புவர்
மற்றும் சிலர்,
"இல்லை" என எதிர்த்துரைப்பர்

மௌனமாய் நாமும் பிரிவு கொள்வோம்
நம் காதலைப் பறைசாற்ற
நம் விழிகள் நீர் சொரிய வேண்டாம்
நாசிகளிற் பெருமூச்சுப் புயல் வேண்டாம்
இவையெல்லாம் எம் உணர்வுகளைப் பாழ்படுத்தும்,
உணர்வோம்.

பூமி அசைவின் விளைவு அளர்த்தமும் நீதியும்
அதன் இயக்கமும் இயல்பும் மனிதர் அறிவர்
ஆயினுமென்,
பூகோளப் பரப்புகள் நீதியில் உறையினும்
நீதியின் உதைப்போ உச்சம் பெறினும்
அதில் வஞ்சம் இல்லை.

வெற்றுணர்வு சூழ் அற்ப காதலர் வரித்த காதல்
பிரிவு தாங்காது
மாறாய் காதலின் மூல சாரத்தையே
முற்றாய் விழுங்கி விடும்.

நாம் கொண்ட காதல் புனிதமானது
உள்ளத்தின் உறுதித் தளைப்பட்டது
ஆதலால்
விழிகளின் உதடுகளின் கரங்களின்
பிரிவை எண்ணிக் கலங்காதிருப்போமாக
யான் சென்றாக வேண்டும் ஆயினும்
எம் ஆத்மாக்கள் ஒருமித்த நிலையில்
மெய்நுள் பிரிவு ஏது!
உருக்கி வார்த்த தங்கத் தகடு
காற்றென மெலிதாகி நீட்சியுறுவது போல்
எம் இருப்பு விசாலிப்பது காண்.

எமது ஆத்மாக்கள் பிரிந்த நிலையிலும்
அவை சுவராயத்தின்
உறுதிக்க இரு தண்டங்கள் போல்வனவே
மையத்தில் நிலைகொண்ட தனிமையாய்
உன் ஆத்மா
மையத் தண்டைச் சுற்றி நகரும் மறு தண்டமாய்
என் ஆத்மா
மையத் தண்டின் உறுதியில்
மறுதண்டு வரையும் வட்டம்
முழுமை பெறுதல் போல்,
காதலியே உனது உறுதியில்
என் பயணம் முழுமை பெறும்
ஆரம்பம் எங்கோ அங்கே முடிவு பெறும்.

தெள்

நோக்குவாய்
இத்தெள்ளை
என் சுவரை ஏந்த மறுத்தமை
எத்துணை அரிய என்பதை உணருவாய்.

முன்னர் என் உதிரம் உறிஞ்சி
பின்னர் உன் உதிரம் பருகியதே
ஆதலால் இச் ஜந்தில் கலந்தது
எம் இருவர் உதிரமும் தான்
இக்கலப்பிற் பாவம் இல்லை
பழிசேர் அவசரம் இல்லை
கன்னிமைக்கும் பாதகம் இல்லை
எம் மிணைப்பில்
சிறு சீவன் தான் துய்த்த களிப்பும்
உலகையின் பெருமிதமும் நீ உணர்வாய்
யாமாய் இணையும் வகை தனையும் மேவி
சிறு சீவன் எமைப் பிணைத்த
மகிமை தான் என்னே!

இத் தனியொரு சீவனில் உறையும்
முவுயிரை வாழவிடு
திருமண பந்தத்தை ஒரு படி மேவி
நாம் வாழ்வதும் இங்கு
எம் திருமணப் படுக்கையும்
திருமணக் கோவிலும் இதுவே!
உனை ஈன்றவர் பகைப்பினும்,
நீ எனை விலக்கினும்,
பிணைந்தோம் நாம்
இவ்வுயிர்க் கூட்டின் சுவர்களுக்குள்!
இச் ஜந்தினைக் கொல்லின்,
எனைக் கொல்லுவை
நினை நீயே கொல்லுவை
முவுயிர் கொன்ற முப்பாவத்தைப் புரிவை.

சுதிலாரி சீவனின் குருதியால்
உன் கைவிரல் நகங்கள் கறைப்பட்டனவே
உன் கொடுமையை என்னென்பேன்
பருகிய ஒரு துளி குருதி அன்றேல்
சிறுதென்னு புரிந்த பாவம்தான் யாதோ?
சிற்றுயிரின் இறப்பிலே
உன் வழியில் அன்றேல் என் வழியில்
பழி ஏதுமில்லை எனப் பகிர்கிறாய்
உண்மை ஒன்றே போதும்
உன் அச்சங்கள் பொய்யானவை
எனப் புகல்வதற்கு

இத்தெள்ளின் சாவு
உன் உயிரையும் கவரும் ஆதலால்,
கேப்போய்,
என்னுடன் உறங்கும் போது
நீ காட்டும் பிரிவில் ஏது பயன்!

ஓவியம் வரைந்த கவிதை

ஆன் ரணசிங்கவின் 'சதி' கவிதை பற்றிய குறிப்புகள்

– பா.துவாரகன்

ஆன் ரணசிங்க

'ஆங்கிலத்தில் எழுதும் இலங்கைக் கவிஞர்களில் உலகப் புகழ் பெற்றவர். கவிஞர், பத்திரிகையாளர், சிறுகதை எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர். 1925 ஐப்பசி 02இல் ஜேர்மனியின் எசன் (Essen) நகரில் பிறந்தார். யூத இனத்தவரான இவர் ஹிட்லரின் படுகொலையில் இருந்து தப்பி 1939இல் இலண்டன் நகருக்கு வருகிறார். பெற்றோர் நாஜிகளின் வதை முகாமிற் கொல்லப்படுகின்றனர். ஆன் இலண்டனில் தாதியாகக் கடமையாற்றும்போது இலங்கையரான மருத்துவப் பேராசிரியர் ரணசிங்கவைத் திருமணஞ்செய்து 1956இல் இலங்கைப் பிரஜையாகிறார். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பான 'And the sun That sucks the Earth to Dry' 1971 இலும் 'Plead Mercy' 1975 இலும் வெளியாகின.

'Aginst Eternity and Darkness' 1985 இல் இரு பதிப்புக்கள் வெளிவந்தவுடன் 1988 இலும் 1996 இலும் மீள அச்சிடப்பட்டன. 'You ask me why I write poems' 1994 இல் வெளியாகியது. யூதர்களுக்கு எதிரான நாஜிகளின் படுகொலைகளின் துயரையும், 1983இல் தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்த படுகொலைகள் பற்றியும் இவரது கவிதைகள் கருக்கொண்டன. 17 நாடுகளில் பிரசுரமாகியுள்ள இவரது படைப்புகள் 9 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதுவரை 12 நூல்களை எழுதியுள்ளார்.

தனது 85வது வயதில் கொழும்பில் 'றொஸ்பீட் பிளேசில்' வசித்து வரும் ஆன் ரணசிங்கவின் சதி (Sati - widow burning) என்ற கவிதையும் கட்டுரையும் யூன் 01, 2005 இல் 'ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன. உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட இக்கவிதையும், கவிதை பற்றிய குறிப்பும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பின்னணித் தகவல்களோடு இக்கட்டுரையின், கவிதையின் சாரத்தை மொழி பெயர்த்திருக்கிறேன். 'Sati' கவிதையைக் கேட்டவுடன் மொழி பெயர்த்துத் தந்த எழுத்தாளர் நா.சத்திபாலன் அவர்களை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

உடன்கட்டை

மொகலாய பாணியில் அமைந்த ஒரு ஓவியம்
மேற்ற விளிம்பின் ஆகாய நீலம்
அவர்கள் அவளை ஆபரண அலங்காரங்களுடன்
முழுக வைத்த குளத்தினைக் குறிப்பதாம்
இடப்பக்க மேற்புறத்தில் வெண்ணிறப் புக்களால்
செய்யப்பட்ட அலங்காரத்தோடு
அவளது பல்லக்கு இப்போது வெறுமையாகி....
பிராமணர்கள், உறவினர்கள் ஆர்வம் மிக்க நண்பர்கள்
செம்மஞ்சள், பச்சை முதலான வர்ணங்களில் – புடைசூழ
காது செவிடுபடும்படியாய்க் கைதட்டி உயர்த்தியபடி
அவளை வாழ்த்திய வண்ணம் நெருங்குகிறார்கள்
இன்னும் சிலர் கைகளில் தீவர்த்திகளும், நெய்க்குடங்களும் கொண்டு
இருவிசைகளில் இடுகாடு நோக்கி நகர்கிறார்கள்
கறுப்புத்தாடி பிராமணர்கள் வாள்களை ஓங்கியபடி
கவசங்களுடன்
புனித அக்கினியை ஏந்திய புரோகித பிராமணர்
சைகை செய்கிறார்
சிதையில் தீ மூட்டப்படுகிறது
நெய்க்குடங்கள் விறகின் மேல் கவிழ்க்கப்படுகின்றன
அக்கினிக் கொழுந்துகள் பல வர்ணத்தில் ஓங்கிப்பரவி
ஒரு முதியவளின் உடலை கபளீகரம் செய்கின்றன
மாபெரு மேனியில் மொகலாய பெண்களுக்கேயான
வளைந்து நெளிந்த வழிகளும் கருங்கூந்தலும் கொண்ட

சதிமாதாக் கல்

இளம் மனைவி எரியும் சிதை நோக்கி
இழுத்து வரப்படுகிறாள்
அவளை உயரத் தூக்கி
எரியும் பிணத்தின் மேல் வீசுகிறார்கள்
அவள் எழுப்பிய பயங்கர ஓலம்
அவர்களின் மந்திர உச்சாடனத்திலும்
பலத்த சத்தத்திலும்
மூழ்கி மறைகிறது
மூர்க்கமாய் மூண்டெரிகிறது தீ
அவளது மென்தோல் கருகிச் சுருங்குகிறது
தலையில் இருந்து சுவாலை கிளம்பி எழுகிறது
தீயிலிருந்து தப்பி ஓடப் போராடும் அவளை
வாளோங்கிய பிராமணர்கள் அச்சுறுத்தித் தடுக்கிறார்கள்
அவள் எரிந்து எரிந்து
முற்றாக இறந்து போகிறாள்

அந்தப் படத்தின் கீழ் எழுதப்பட்ட வாசகம்
அந்தப் புனிதமான விதவையை
புகழ்ந்துரைப்பதாய் அமைகிறது
ஓலம் நகர்ந்து செல்கையில்
அர்த்தமிழக்கிறது
அவள் அந்தப் பயங்கர நிலைக்கு உட்படுத்தப்படுமுன்
பல்லக்கை விட்டு இறக்கப்படும் காட்சி
அவளது பார்வை
பயத்துடன் அந்தச் சிதையை வெறித்து நோக்குகிறது
இறக்கப்பட்டவளிடமிருந்து கழற்றிவும்,காதுகளிலுமிருந்த ஆபரணங்கள்
பிடுங்கி எடுக்கப்படுகின்றன
அவளைத் தள்ளியும் இழுத்தும் எரியும் சிதையை முன்றுமுறை
சுற்றிவரச் செய்கிறார்கள்
இது அவளை ஆருதி ஆக்குவதற்க முன்
மிக நீண்ட நேரத்தின் பின்
சிதை எரிந்த சாம்பலும் மீந்திருந்த எலும்புகளும் எடுக்கப்பட்டு
பித்தளைப் பாத்திரங்களில் இடப்படுகின்றன
சில வீசப்படுகின்றன
கங்கை என்னும் எல்லாந் தருபவளும் தூய்மை அளிப்பவளுமாகிய
நதியின் உள்ளே....
சில தெரிவு செய்யப்பட்ட எலும்புகள் மென்மையான மாவாக
அரைக்கப்படுகின்றன
நெய்யும் புதிய அரிசியும் கொண்ட பொங்கலுடன்
சேர்த்து சமைக்கப்படுகின்றன
வைவக ரீதியாக பன்னிரண்டு பிராமணர்கள்
அதனை உண்கின்றனர்.

சதி- ஆன் ரணசிங்க ஆங்கிலத்தில் எழுதிய கவிதை. விதவைகள் தாங்களாக அல்லது வற்புறுத்தப்பட்டுக் கணவனது சிதையிலே தீயிற் கருகும் சம்பவங்களை மொகலாயர் காலத்திய ஓவியங்களிற் காணலாம். இந்தியாவிலிருந்து வெளிவரும் பருவ இதழ் ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட இவ் ஓவியம் ஆனை அதிர்ச்சியுறச் செய்தது.

சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற சம்பிரதாயம் இந்திய சமூகத்தில் குப்தர் காலத்தில் ஏறத்தாழ கி.பி.400 ஆம் ஆண்டளவில் நிலவியதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

தனக்கு நிச்சயிக்கப்பட்ட கணவன் போர்க்களத்தில் உயிர் துறந்ததை அறிந்த திலகவதியார் தீப்புகுந்து உயிர் துறக்க விரும்பினார். எனினும் தம்பி நாவுக்கரசனுக்காக உயிர் வாழ்ந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

சித்தோர் சாம்ராஜ்ஜியத்தின் மீது அலாவுதீன் படையெடுக்கிறான். சித்தோர் அரசனாக இருந்த மகாராணா லக்ஷ்மண்சிங் போர் முனையிலே உயிர் துறந்த செய்தி கேட்டு சித்தோரின் கற்பரசிகளாய் இருந்த 7000 இராஜ ஸ்தீரிகள் குகையிற் குழுமித் தீமூட்டி அக்கினி வெள்ளத்திற் புகுந்ததாகச் "சியாமளன் மீதினில் காதல் கொண்ட மீராவின் சரித்திரத்தில்" ஒரு செய்தி வருகிறது.

சதி: விதவைகள் உயிரோடு எரிதல் அல்லது எரிக்கப்படுதல் என்ற கொடூரமான சம்பிரதாயம் நிலவுவதற்கு இந்திய ஆண் சமூகத்தின் வன்மமும் பெண்களைச் சந்தேகித்தலும் காரணமெனச் சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது பெண்கள் உணவிலே விஷங் கொடுத்து கணவனைக் கொன்றுவிட்டுப் பிறிதொரு ஆடவனை மணஞ்செய்யாதிருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வழக்கு என்ற கருத்து நிலவுகிறது. அதேவேளை விதவைகள் அனுபவிக்கும் சித்திரவதைகள், தண்டனைகள் நரகத்துக்கு இணையானதாய் இருப்பதே விதவைகள் தாங்களாகவே தீயிலே எரிந்து மரணமடைய விரும்புவதற்கான காரணம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். விதவைகள் வாழ்வின் துயரைத் தீபாமேத்தாவின் 'தண்ணீர்' (Water) திரைப்படம் ஓரளவு வெளிப்படுத்தி நிற்கிறது. கணவன் இறக்கின்றபோது அவனது சிதையிலே எரிகின்றவர்கள் கற்புநெறி தவறாதவர்கள் என்றும் அவர்கள் மோட்சத்தை அடைவார்கள்

என்றும் இந்திய உயர் சமூகம் கற்பித்து வந்தது.

சொத்துக்களை அபகரிப்பதற்காகப் பிள்ளைகளே தங்கள் விதவையான தாயை வற்புறுத்திக் கணவனது சிதையிலே உயிரோடு எரிக்கும் சடங்கு இந்தியாவில் அண்மைக் காலங்களிலும் நடைபெற்றுள்ளது.

2002இல் இந்தியாவின் மத்தியப் பிரதே சத்தில் 'தமோலி' என்ற இடத்தில் 65வயது டைய குட்டுபாய் என்ற விதவை சிதையிலே எரிந்தாள். குட்டுபாய் தன்னைத்தானே எரித்துக் கொள்வதைக் காண்பதற்காக 1000இற்கும் அதிகமானவர்கள் திரண்டிருந்தனர். குட்டுபாய் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க முற்பட்ட காவற்றுறையினர் இருவர் கற்களால் தாக்கப்பட்டு விரட்டப்பட்டனர். தாயினது சொத்துக்களை அபகரிப்பதற்காகத் தாயை 'சதி'க்குத் தூண்டியதாக மூத்த மகன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இளைய மகன் அருகே நின்று பார்த்திருக்க மூத்த மகன் சிதைக்குத் தீமூட்டியதாகப் பிள்ளைகள் இருவர் மீதும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

1970இல் முற்கூட்டியே தெரிந்திருந்தும் விதவை ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவத்தை ராஜஸ்தான் மாநில அரசு தடுத்து நிறுத்தாமையைக் கண்டித்து இராஜஸ்தான் சட்ட சபையில் கேள்வியெழுப்பப்பட்டது. முற்கூட்டியே பிரசாரப்படுத்தப்பட்ட இக்கொடுந் துயரைக் காண 70000 பேர் திரண்டிருந்தனர். மாநில அரசு மௌனமாய் இருந்தது.

விதவைகள் தீயில் – மகாசதியில் எரிந்து தெய்வங்களாவதை நினைவுபடுத்தும் "நடுகற்களும் நினைவுச் சின்னங்களும்" தென்னிந்தியா, கர்நாடக, ராஜஸ்தான், மைசூர் முதான இடங்களில் இருக்கின்றன.

மொகலாயப் படையெடுப்பின்போது தங்கள் கணவர்கள் போர்க்களத்தில் கொல்லப்பட்டதை அறிந்த ராஜஸ்தான் பெண்கள் தீயிலே தங்களைத் தாங்கள் அழித்துக் கொண்டதாகச் சரித்திரம் கூறுகிறது.

1794 இல் நடந்த ஒரு சம்பவம் ஆன் ரணசிங்க கூறுகிறார்

1794இல் இந்தியாவின் தஞ்சோர் மாவட்டத்தில் கணவன் இறந்தபோது அவனது சிதையிலே எரியுண்ட பெண்ணைச் சுற்றி எனது கவிதை சுருக்கொள்கிறது.

இறந்துபோன அந்தப் பிராமணன் கிராமத்தின் முக்கியமான ஒரு மனிதனாக இருந்தான். கணவனது சிதையிலே எரிந்து பலியாக அவள் எண்ணியிருந்தபோது அவளுக்கு வயது முப்பது.

இந்தக் கவிதை 'Abbe Dubois' எழுதிய 'Hindu Manners, Customs and Ceremonies' என்ற நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

அவள் தனது கணவனது சிதையிலே தீப்பாய்ந்து புனிதையாகப் போகிறாள் என்ற செய்தி கிராமம் முழுவதும் பரவியது. அந்தத் 'துன்பியல் நிகழ்வைக்' காணக் கிராமமே திரண்டு வந்தது.

விலையுயர்ந்த ஆபரணங்களாலும் சரிகைகளால் நெய்யப்பட்ட பட்டுப்புடைவையாலும் புது மணப்பெண்ணைப் போல அவளை அலங்கரித்தனர். கணவனது உடலம் வைக்கப்பட்டிருந்த பாடையின் பின்னே அவள் நடந்து சென்றாள். சனத்திரள் இரு மருங்கும் காவலாக அணிவகுத்து நடந்து அவளை உத்தமியாகத் தெய்வநிலையை அடையப் போகின்றவளாக,

வீரப் பெண்ணாக, கற்பரசியாகப் புகழ்ந்து ஆர்ப்பரித்தது.

அவளருகே நடந்துவரும் பெண்கள் அவளை வாழ்த்தி அவளுக்குக் கிடைக்கப் போகின்ற அதிஷ்டத்திற்காகப் பாராட்டுகின்றனர். அவ்வேளை 'மணப்பெண்' (விதவை) வெற்றிலை களைப் பகிர்ந்தளிக்கத் தொடங்கினாள். ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. அவளிடம் இருந்து நினைவுப் பொருளைப் (Relics) பெறுவதற்காகச் சனக்கூட்டம் அவளை நெருங்கிவர நெரிசல் ஏற்படுகிறது.

ஊர்வலம் நீண்ட தூரத்தைக் கடந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் அவள் அமைதியாகி, உணர்வற்றவளாகக் கணவனது உடலின் பின்னே சென்று கொண்டிருந்தாள்.



தூரத்திலே சிதையைக் கண்டதும் அவள் தன்னம்பிக்கையை இழக்கிறாள். தடுமாறினாள். பாதங்களை எடுத்து ஓர் அடி வைக்கச் சிரமப்பட்டாள். அச்சத்தால் பீடிக்கப்பட்டு நிலை குலைந்து போகிறாள்.

பிராமணர்கள் தங்கள் சடங்குகளை ஆரம்பித்தனர். உறவினர்கள் அவளுக்குத் தன்னம்பிக்கையூட்ட முயன்றனர். அவளது ஆன்மாவை எழுச்சியடையச் செய்யப் பலவாறும் முயன்றனர். எதுவுமே பயன்தரவில்லை.

அவ்வேளை அவளை இழுத்துச் சென்று அருகிலுள்ள குளத்திலே குளிப்பாட்டினர். கணவனது உடல் வைக்கப்பட்டிருந்த சிதைக்கு ஈர உடையுடன் இழுத்துச் செல்லப் படுகிறாள். சிதை அவளது கண்களுக்குப் பயங்கரமானதாய்த் தோற்றமளிக்கிறது.

பிராமணர்கள் சிதையைச் சுற்றிவரக் காவலுக்கு நின்றனர். ஒரு கையிற் தீப்பந்தமும் மறு கையில் நெய் நிறைந்த தாளியும் இருந்தன. உறவினர்களும் நண்பர்களும் கையில் வாள்களுடனும் துப்பாக்கிகளுடனும் ஈட்டிகளுடனும் காவலுக்கு நின்றனர். அடுத்து நிகழப்போகும் மரணத்திற்குச் சாட்சியாக இரு வரிசைகளில் அவர்கள் காவலுக்கு நின்றனர்.

சதிமாதாக் கல்

ஆயுதங்களுடன் காவலுக்கு நிற்பது விதவை தப்பியோடாதிருப்பதற்காக மட்டுமல்ல. கூட்டத்திலே எவரேனும் விதவையில் இரக்கப்பட்டு அவளைச் சதியிலிருந்து காப்பாற்ற முயலக் கூடாது என்பதற்காகவும் கூட.

சடங்கிற்குத் தலைமை வகித்த புரோகிதர் சைகை காண்பிக்க அவள் சிதைக்கு அருகே கொண்டு செல்லப்படுகிறாள். ஆபரணங்கள் யாவும் கழற்றப்படுகின்றன.

சம்பிரதாயப்படி சிதையைச் சுற்றி அவள் மூன்று முறை வலம்வர வேண்டியிருந்தது. முதல் முறை கால்கள் பின்ன ஒருவாறு வலம் வந்தாள். அடுத்த இரு தடவையும் சிதையைச் சுற்றி உறவினர்களால் இழுத்து வரப்பட்டாள். மூன்றாவது முறை சுற்றி வந்ததும் அவளைத் தூக்கிக் கணவனது உடல் வைக்கப்பட்ட சிதைக்கு மேலே வைத்தார்கள். பிராமணர்களது கையிலிருந்த தாளிகள் வெறுமையாகின. சனத்திரள் ஆர்ப்பரித்தது. தீப்பந்தங்கள் சிதையில் வீழ்ந்தன. சில கணங்களில் தீ கொழுந்து விட்டெரிந்தது.

தீ நாக்குகள் அணையும்வரை காத்திருந்தனர். இருவரதும் என்புகளைச் சாம்பலிலிருந்து வேறாக்கினர்.

என்புகளின் ஒரு பகுதியைக் கங்கையிற் கரைப்பதற்காகக் காசிக்கு எடுத்துச் சென்றனர். 'புனிதையாக்கப்பட்ட' விதவையின் மீதமுள்ள என்புகளைப் பொடியாக்கி நீரிலே கரைத்து அதிலே அன்னத்தைச் சமைத்து 12 பிராமணர்கள் களிப்புடன் அருந்தினர் – தாங்கள் தூய்மை அடைவதற்காக.

இந்நிகழ்வைக் கவிதையாக்கியிருந்தார் ஆன் ரணசிங்க.

ராஜஸ்தானிலுள்ள சுவர் ஓவியங்கள் விதவைகள் உயிரோடு எரிவதைக் காட்சிப்படுத்துகின்றன. இவ் ஓவியங்களைப் பார்த்ததைத் தொடர்ந்து 'சதி' பற்றி ஆராயத் தொடங்குகிறார் ஆன் ரணசிங்க. அபே டுபயரின் நூலில் விவரிக்கப்படும் சம்பவம் சதி (Sathi) என்ற கவிதையாகிறது. இக் கவிதையும் குறிப்பும் 2005 இல் வெளிவந்த **A Long Hot Day** என்ற ஆன் ரணசிங்கவினுடைய நூலில் பிரசுரமாகியுள்ளது. இந்நூலின் 2ஆவது பதிப்பு 2009 இல் வெளிவந்தது.

ஆங்கிலத்தில் எழுதிய இக்கவிதையை இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபல்ய பெண்ணிய இதழான 'FEMINA'வுக்கு ஆன் அனுப்புகிறார்.

இக்கவிதையைப் பிரசுரிக்க முடியாது என்று திருப்பி அனுப்பியதுடன் ஒரு குறிப்பும் ஆனுக்கு அனுப்பியிருந்தது 'FEMINA'.

"இப்படியான விடயங்களைப் பிரசுரிக்க முடியாது. ஜேர்மனிய ஆசிரியர்களிடம் நாஜிகளின் வதை முகாமில் நிகழ்ந்த மில்லியன் கணக்கான யூதர்களின் படுகொலையைப் பற்றிக் கற்பிக்குமாறு கேட்டால், ஜேர்மனியப் பிள்ளைகளுக்கு இந்தப் பயங்கரம் பொருத்தமற்றது என்று கூறி மறுத்துவிடுவார்கள்" என்றிருந்தது 'FEMINA'வின் குறிப்பு.

விதவைகள் சிதையிலே எரிந்த நிலையில் தீச்சுவாலையுடன் ஓடிக் காடுகளிலே பேய்களாக உலாவருவதாகவும் கதைகள் உண்டு. இவ்வாறு சிதையிலிருந்து தப்பியோடுவதைத் தடுப்பதற்காக ஆழமான கிடங்கு வெட்டப்பட்டு அதற்குள் சிதை அமைக்கப்பட்டு விதவைகளைக் கிடங்கினுள் இறக்கிவிட்டுத் தீ மூட்டுவதாகவும் தீயின் சுவாலை உடலைப் பற்றி எரியத் தப்பியோட முடியாமல் கிடங்கின் சுவர்களிலே மோதித் தீயின் வெள்ளத்தில் விதவைகள் அழிந்து போவதாகவும் சதி பற்றிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ●

மஹ்மூத் தர்வீஷ் கவிதைகள்

தமிழாக்கம்
எம். ஏ. நுஃமான்

வெளியீடு :– அடையாளம்,
1205/1 கருப்பூர் சாலை,
புத்தாநத்தம்,
621310, திருச்சி மாவட்டம்,
இந்தியா.

விலை– 80/=
(இந்திய ரூபா)

அஞ்சலி சண்டிமா சில்வா

சர்வதேச கவிஞர்க்கான சிறப்பு விருது பெற்ற கவிதை

அஞ்சலி சண்டிமா சில்வா, சர்வதேச கவிஞர்க்கான சிறப்பு விருதை அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச கவிஞர்கள் சங்கத்திடமிருந்து பெற்றுள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ரோண்டோ நகரில் நிகழ்ந்த கவிதைக்கான ஊக்குவிப்பு விழாவில் கலந்து கொள்ள இவர் அழைக்கப்பட்டிருந்தார். தனித்தியங்கும் கவியாற்றலுக்கான சிறப்புப் பெறு பேறை அடைந்துள்ள அஞ்சலி, இலங்கையில் ஆங்கிலத்தில் எழுதும் சிறந்த கவிஞர்கள் சிலருள் ஒருவர் ஆவார். சிறந்த கவிஞர்க்கான வெள்ளிக் கிண்ண விருதைப் பெற்றுள்ள இவர். சர்வதேச கவிஞர்கள் சங்க (I.S.P) இயக்குநர் குழு, ஆலோ சனைக் குழு இரண்டினதும் சிபார்சில் இச்சங்கத்தின் ஆயுட் கால உறுப்பினர் ஆகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பி.ஏ.(சிறப்பு) பட்டத்தைப் பெற்றும், எழுத்துப் புலமை, தொடர்பாடல் துறைகளில் பின் பட்டப் படிப்பிற்கான டிப்ளோமாவை முடித்தும் உள்ளவ ரான அஞ்சலி அப்பல்கலைக்கழகத்திலேயே ஆங்கிலப் போதனாசிரியராகப் பணிபுரிகிறார். R.S.K இவரது விருது பெற்ற கவிதையான NATURE WEEPS இயற்கையின் புலம்பல் மொழியாக் கம் செய்யப்பட்டு இங்கு வெளியிடப்படுகிறது.

என்னைப் பெயர்த்து ஏனொரு பூச்சாடியிலே இட்டாய்?
என்னிலிருந்தென் வாழ்வைப் பலவந்தமாய் ஏன் பறித்தாய்?
எனது நேசத்திற்குரிய தாயவளின் தொப்பூழ்க் கொடியிலிருந்து
அந்நியமாக்கி சொல்லொணாத் துயரத்திலேனை கொண்டு விட்டாய்?

நானிங்கு தண்ணீரைத் தான் பெறுகிறேன்
மென்பனித் தூவலை இழந்தேனே
உணர்விழந்து விறைத்த முகங்களையே காண்கிறேன்
உயிர்ப்புடைய புன்னகைகளையல்ல
மனிதர்களின் வார்த்தைவலம்பல்களையன்றி
தேனீக்களின் சுருதியம் கேட்பதில்லை
சுற்றிலும் மனித ஆரவாரப்புகளல்லாமல்
பறவைகள் இன்னிசைப்பது கேட்கிலேனே
எங்கும் மரத் தளபாடங்களே அல்லால்
சூரியன், மேகங்கள், மலைகளே
ஈவதொன்றும் எனக்கில்லையே.

நான் கேட்கிறேன்... என் தாய் எனை அழைப்பதை
நான் கேட்கிறேன் எனது தாயின் புலம்பலை
இவ்வுலகை நீத்து நான் பிரிகின்ற வேளை வந்துவிட்டது
ஆனால்.... நாளை?

தமிழில் :
சு.வில்வரத்தினம்

இயற்கையின் புலம்பல்

○ இக்கவிதை 'தூண்டி' இதழுக்காக கவிஞர் சு.வில்வரத்தினத்தால் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதனைத் தந்துதவிய தி.செல்வமனோகரனுக்கு நன்றிகள்.

தொலைவில் ஒரு வீடு

– திவ்வியாவின் பக்கங்கள் –

இலக்கியம் பேசுமொழி சார்ந்தது. இதனால் ஏனைய கட்புல ஆற்றுகைப் படைப்புகளுக்கு இல்லாத வரையறை இலக் கியத்திற்குண்டு. இலக்கியம் தனது மொழி வழங்கும் பிரதேசங்களால் வரையறை செய் யப்படுகிறது. இந்த மொழி நிலை வரையறை காரணமாக இலக்கியம் சார்ந்து ஒரு மொழி நிலை இடம்மாற்றப் பாரம்பரியம் உருவாகி யது. ஆனால் இலக்கியத்தினை ஒரு மொழி யிலிருந்து இன்னொரு மொழிக்குப் 'பெயர்க்க' முடியுமா என்பதும், உண்மை யில் மொழிபெயர்ப்பெனவொன்று உண்டு தானா என்பதும் இது தொடர்பில் ஏற்படுகின்ற வொரு அடிப்படையான கேள்வியாகும்.

ஒரு 'மொழிபெயர்ப்பாளர்' உள்ளிட்ட எந்தவொரு வாசகரும் ஒரு படைப்பைத் தமது புலக்காட்சி (perception) அனுபவங் களுக்கூடாகவே பெற்றுக்கொள்கிறார். புலக் காட்சி அனுபவங்கள் என்பது ஆளுக்காள் வேறுபடும் அறிகை (cognative) அனுபவ வேறுபாட்டு நிலவரமாகும். ஆகவே தான் ஒருவர் வாசிப்பதை இன்னொருவர் வாசிப்ப தில்லை எனவும் ஒருவர் ஒன்றைப் புரிந்து கொள்வதுபோல் இன்னொருவர் அதனைப் புரிந்துகொள்வதில்லை எனவும் விவாதிக்கப் படுகிறது. இந்த நிலவரம் காரணமாகவே ஒரு படைப்பென்பது வாசிப்பவர்களின் எண்ணிக் கையாற் பெருகிச்செல்கிறதெனக் கூறப்படுகி றது. புரிந்துகொள்ளுதலிலும் – வாசக நிலை யிலுமுள்ள அறிகை வேறுபாடுகள் என்பது ஒரு யதார்த்தமாக உள்ளபோது, 'மொழி பெயர்ப்' பென்பது எவ்விதம் அதனுடைய முழுமையான அர்த்தத்தில் சாத்தியமாகக் கூடும் என்பது பிரதானமான கேள்வியாக இருக்கிறது. ஏனெனில் 'மொழி பெயர்ப்பாளர் கள்' உள்ளிட்ட வாசகர்கள் அனைவரும் தாம் வாசித்த (புரிந்துகொண்ட) முறையா லேயே ஒரு படைப்பினைத் திறக்க முற்படு கிறார்கள். இந்தத் திறப்பே, மொழி பெயர்த்த லுக்கான வாயிலுமாகும்.

இவ்வாறு விவாதிக்க முற்படும்போது மொழிபெயர்ப்பென்பதை ஒரு வியாக்கியான நிலை (state of interpritation) எனக் கூற வேண்டியேற்படுகிறது. அதாவது ஒரு படைப்பு மீது வாசக மனம் நிகழ்த்தும் ஒரு எதிர்வினைச் செயற்பாடாகவே (response) அது காணப்படுகிறது. இதனை வேறுவிதமா கக் கூறுவதானால் எல்லாப் பார்வைகளும் தமது காலவெளி அநுபவங்களால் சட்டக மிடப்பட்ட நோக்கு நிலைகள்(views) ஆகும். என்பதனால், நோக்கப்படும் பொருளொன் றாயினும் நோக்குகள் ஒன்றாயிருப்ப தில்லை. நோக்கு நிலைகள் ஒன்றாக இல் லாதபோது 'பெயர்த்தல்' என்பது எவ்விதம் சாத்தியமாகக்கூடும்? இந்த விவாதத்தின் மூடுபள்ளத்தாக்கு வழி நடக்கும்போது ஒரு படைப்பிற்கான ஒவ்வொரு பெயர்ப்பும் தனித் தனிப் படைப்புக்களாக, தனியாள் வெளிப்பா டுகளாகப் பார்க்கப்படவேண்டும். அதனாற் றான் 'ஆசிரியத்துவம்' (authorship) என்பது 'மூலத்திற்கும்'-'பெயர்ப்புகளுக்கும்' வேறா கின்றன. இதனாற்றான் காப்புரிமை (copy right) தொடர்பான சட்டங்கள் கூட 'மூலத்திற் கும்'-'பெயர்ப்புகளுக்கும்' தனித் தனியே உள்ளன.

இவ்வாறு பேசும்போது 'மூலம்' – 'பெயர்ப்பு'என்ற பிரிப்புக்கூட சற்று அபத்த மாகவேபடுகிறது. 'மூலம்' மட்டுமல்ல, 'பெயர்ப்புகள்' கூட ஒரு வகையில் மூலங்கள் தான். உபநிடதத்தில் வருவதுபோல் "அதுவும்

பூரணம், இதுவும் பூரணம்; பூரணத்திலி
ருந்து பூரணம் தோன்றிய பின் எஞ்சியதும்
பூரணம்.''

இரண்டாவது விடயம் கவிதை தனது மூல மொழியிலிருந்து, இலக்கு மொழியின் சொற் பரப்பிற்குள் இறங்கும்போது, அது இலக்கு மொழியின் சொற்பரப்பிற்குள் இயைபுபட வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இது எவ்வாறு, எவ்வளவு தூரத்திற் குச் சாத்தியமாகும். ஏனெனில் ஒவ்வொரு மொழியும் தனக்கேயான தர்க்கங்களாலும் – தனிப்பண்புகளாலும் உருவாகியுள்ளது. எனவே ஒரு தனிப்பண்பை, இன்னொரு தனிப் பண்பினுள் அப்படியே இறக்குதல் சாத்தியமில்லை. இதனாற்றான் 'பெயர்த் தல்' என்பதை ஒரு குறிப்பிடலுக்கான பெய ராக மட்டுமே எடுக்கவேண்டியிருக்கிறது என லாம்.

மூன்றாவது விடயம், கவிதை உள்ளிட்ட இலக்கிய வடிவமொன்றின் கருப்பொருள் (theme) அல்லது உள்ளடக்கத்தை (content) 'பெயர்த்தல்'ஒரு படைப்பின் 'மொழி பெயர்ப் பைப்' பொறுத்தவரை சரியான ஒன்றல்ல. அதுவொரு ஆக்கச் செயற்பாடுமல்ல. படைப்புக்கள் என்பன அவற்றின் கருப் பொருளும் அது வெளிப்பட்டு நிற்கும் சொல் லுடலின் உருவநிலையும் சேர்ந்து பிணைந்த தொரு வெளிப்பாட்டு நிலையாகும் (expres-sion). அதனாற்றான் 'கலை' என்பது ஒரு வெளிப்பாடெனக் கூறுகின்றனர். என்பத னால் 'பெயர்த்தல்' என்பது சொற்களின் 'பொருளை' (meaning) இடம்மாற்றும் ஒரு செயற்பாடல்ல. பதிலாக ஒரு படைப்பின் அனு பவத்தைக் கையேற்றுக், கைமாற்றும் ஒரு படைப்பாக்கச் செயற்பாடாகும். படைப் பொன்றை நாம் திறக்கையில், அப்படைப்பு மறுவளமாக நம்மைத் திறக்கிறது. இந்தத் திறத்தல் காரணமாக ஏற்படும் ஒரு கவித்துவ மனமூட்டத்தில் நின்றே 'பெயர்த்தல்' எனும் செயற்பாடு சாத்தியமாகிறது. அது சொல் லுக்குப் பொருள் சொல்லும் ஒரு மோலோட்ட மான உரையாசிரியர் பாரம்பரியமல்ல.

இவ்வாறு பார்க்கும்போது மொழிபெயர்ப் புச் செயற்பாட்டில் 'மொழிபெயர்ப்பாளரும்' [transilator], இலக்கு மொழியும் நிர்ணய கரமான இருபெரும் சக்திகளாகும். மேற்படி இரண்டு சக்திகளின் பண்புகளே 'மொழி பெயர்ப்பைத்' தீர்மானிக்கின்றன. இதில் பிர தானமானவர் 'மொழிபெயர்ப்புச்' செய்பவர். ஏனெனில் அவரே மொழியைக் கையாள்ப வர்.

இதேவேளை கவனிக்கப்படவேண்டிய இன்னொரு விடயம், இலக்கியமென்பது பொதுமொழிக்குள் ஊடறுத்து நகரும் இன் னொரு தனிமொழிப் பரப்பாகும். தனிமொழி யாய் இருத்தலே அதன் சிறப்பம்சமுமாகும். அதே நேரம், படைப்பாளிகளைப் பொறுத்து அது மேலும் வேறு வேறுபட்ட தனிமொழிக் கிளைகளை விருத்தி செய்திருக்கிறது என்ற வகையில் இலக்கியத்தின் சிறப்பு, மொழிப் பிராந்தியம் என்பது படைப்பாளிகளினால் கட் டப்படுவதும் – முடிவில்லாது விருத்திசெய்யப் படுவதுமான ஒரு மொழிப் பரப்பாகும். அது அதற்கேயானஅழகியற் தர்க்கங்களையுடை யது என்பதுடன் அர்த்தங்களை முடிவில் லாது உற்பத்தி செய்யக்கூடிய சொற்களின் தொக்கு நிலைகளில் நடமாடுவது; உருவக மாயும் படிமமாயும் இன்னும் சாத்தியமுடைய பலவேறு மொழிமடிப்புக்களையுடைய ஆடை களை அது தரித்துள்ளதனால் அது மொழி யின் அகராதிப் பரப்பில் வசிப்பதில்லை.

என்பதனால், 'மொழிபெயர்ப்புச்' செயற் பாடென்பது அகராதியில் நிகழ்த்தப்படும் பொருள்கோரும் ஒரு செயற்பாடல்ல. ஆனால் பலரும் அதனை அவ்வாறு தான் புரிந்து வைத்திருக்கிறார்கள். படைப்பென்பது எவ்விதம் ஒரு மனோநிலையோ (State of Mind) அப்படியே 'மொழிபெயர்ப்பும்' அவ் வாறானதொரு மனோநிலைத்தளம் சார்ந்த தென ஏற்கனவே விவாதித்திருந்தோம். அது ஒரு தூண்டல் – ஒரு படைப்பை, ஒரு படைப் பாக்க மனமுடைய, அதேநேரம் மொழி வள முடைய நபர் சந்திக்கும்போது ஏற்படும் ஒரு படைப்பாக்கத் தூண்டலின் – மன விரிவின் ஒரு வகை விளைவாக 'மொழிபெயர்ப்பு' வரு கிறது.

இவ்வாறு பார்க்கும்போது'மொழிபெயர்ப் புக்கள்' யாவும் மொழிபெயர்ப்பாளரது படைப் புக்களாகவே பார்க்கப்படவேண்டுமென இப் பத்தி கருதுகிறது. அது ஒரு வகையில் ஒரு தகவமைக்கும் (appropriation) செயற்பாடு மாகும். குறித்த ஒரு படைப்பை வாசிக்கும் போது மொழிபெயர்பாளர் தனது காலவெளி அனுபவப் பரப்பில் நின்று, தனது உடன் நிகழ் கணத்துப் பௌதீக உளவியல் நிலவரங்க ளின் மத்தியில் நின்று தனது சொந்த மொழிக்கு மேற்படி படைப்பின் அனுப வத்தை எடுத்துவரும் செயற்பாடாக அது அமைந்துள்ளது.

எனவே, 'மொழிபெயர்ப்பு' என்பது ஒரு பனுவல் நிலை ஊடாட்டக்களத்தில் (inter texual) நிகழும் ஒரு சிறப்பு வகையான ஆக் கச் செயற்பாடாக அமைந்து விடுகிறது.

இவ்வாறு விவாதிக்கும்போது, 'மொழி பெயர்ப்பு','மொழிபெயர்ப்பாளர்' என்ற சொற் கள் பிரச்சினைக்குரியதாகவும் அதற்குப் பதி லாக வேறொரு அர்த்தச் சாத்தியப்பாடு கூடிய சொல்லின் தேவையையும் உணரக்கூடிய தாகவும் இருக்கிறது. இவற்றிற்குப் பதிலாக மொழியாக்கம் – மொழியாக்குநர் (Trans creatio - Transcreator) போன்ற பதப்பிரயோ கங்கள் அதிகப் பொருத்தப்பாடுடையவனவா கத் தோன்றுகிறன. மேலைத்தேய மரபில் மேற்படி சொற்கள் இவ்விதமான இலக்கியச் செயற்பாட்டுப் பரப்பில் வழக்கத்திற்கு வந்தி ருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இதனைத் தழுவல் (adaptation) என்ற எண்ணக் கருவுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. தழுவல் என்பது குறித்த ஒரு படைப்பை ஒருமொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு எடுத்துவரும் செயற்பாடு மட்டு மல்லாமல், எடுத்து வரப்படுகின்ற பண்பாட் டுச் சூழலுக்கேற்ப மாற்றியமைத்தற் செயற் பாடுகளை பிரக்ஞைபூர்வமாக செய்யும் ஒரு செயற்பாடுமாகும். அதாவது அதன் களமும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் உள்ளூர்ப் பண் பாட்டிற்கேற்ப மாற்றப்பட்டுவிடும். ஆனால் மொழியாக்கும் செயற்பாடு என்பது அது வல்ல. பதிலாக ஒரு மொழிவயப்பட்ட படைப்பை வாசிக்கும் தருணத்தில் தூண் டப்பட்டுத் தனது சொந்தமொழிப் பரப்பிற்குத் தன் புரிதல் அனுபவப்படி எடுத்துச் செல்லும் ஒருசெயற்பாடாகும்.

இந்த வேறுபாடுகளைச் சரியாகப் புரிந்து கொள்ளும்போது தான் எம்மால் இலக்கியத் தின் குணத்தினையும் – இயல்பினையும் சரி யாகப் புரிந்துகொள்ள முடியும்.

பல கோட்பாட்டாளர்கள் மொழிபெயர்ப் பென்பதைக் கருத்துக்களை விளக்குதல், வியாக்கியானித்தல் மற்றும் மீளாக்குதல் என்பதிலும் பார்க்க வார்த்தைகளின் மறுவுரு வாக்கம் என்பர். அதேநேரம், இங்கு மொழி யென்பது இரண்டாம் நிலைப்பட எண்ணங் களைக் காவிவருதல் என்பதே பிரதானமா னது எனக் கருதுவதாக நியூமார்க் கருதுகி றார். அது பல்பரிமாணங்களுடைய, ஆழ மான பலவேறு மட்டங்களுடையதும் அது வெளிப்பட்டுநிற்கும் சூழமைவில் தங்கியிருப் பதுமான ஒரு செயற்பாடெனவும் பண்பாடு, சமூகம் மற்றும் மொழியியல் காரணிக ளோடு சம்பந்தமுடையதாகவும் மேற்படி ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அதனாற்றான் மொழியாக்கம் என்பதை உற் பத்தியும் அதே சமயத்தில் மறு உற்பத்தியும் என சுஜித் விவாதிக்கிறார்.

இந்த விவாதங்களின் பின்னணியில் நின்று அன்னா அக்மத்தோவாவினது ரஷ்ய மொழிக்கு மாற்றப்பட்ட ஒரு கவிதையையும், அதற்கான ஆங்கில மொழியாக்கங்களிலி ருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட இரண்டு மொழியாக்கங்களையும் மற்றும் பாப்லோ நெருடாவினது தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை யொன்றுக்கான இருவேறு மொழியாக்க ளின் ஒரு பகுதியையும் இப்பத்தியில் தருவத னூடாக மொழியாக்கங்களின் இயங்கு நிலை என்பது எவ்வாறு ஒரு படைப்பிற்கும் இன் னொரு படைப்பிற்குமிடையில் வேறுபடுகிறது என்பதையும் மூலமொழியில் காணப்படும் படைப்பு மொழியாக்கக் களத்தில் எவ்வாறு பல்வேறுவிதமான மொழியாக்கங்கள் மேற் கிளம்புவதற்கான ஒரு தருணமாக இருக்கி றது என்பதையும் அவதானிக்கலாம்.

மாலை

வார்த்தைகளால் வெளிப்படுத்தமுடியாத் துயரம்
அந்தத் தந்திகளின் இடைவிடா மீட்டல்களில்.
தட்டுகளில் மீன்கள்
உப்பின் வாடை கரைலழத்தது.

"நான் உனது நண்பன்" என்றான் அவன்,
சொல்லியவாறே என் ஆடையைத் தொட்டான்.
இதம் தருவதற்கு அந்த விரல்களில் எத்தனை தயக்கம்
எவ்வளவு விலகியது அவற்றின் ஸ்பரிசம் ஒரு வருடலிலிருந்து
பூனைகளையும் பறவைகளையும் தடவிக்கொடுப்பது இவ்வாறே
ஒரு மெல்லிய சரிக்கல் விரான்களையைப் பார்ப்பதும் இவ்வாறே
குதூகலமாக மென்மை தழுவிய ஒரு புன்னகை
அவனது கண்ணிமைகளின் கீழ் ஒளிந்திருந்தது.

புகைமூட்டத்தைத் துளைத்து வந்தது இசை
விம்மின வயலின்கள்;
தேவனை வாழ்த்து, நன்றி கூறு, இந்தச் சந்திப்புக்காக.
உன் காதலனுடனான இந்த முதல் சந்திப்புத் தான்.

© கீதா, எஸ்.வி.ராஜதுரை
(அக்மதோவா அக்கரைப்பூக்கள் - 2006)

Evening

In the garden strains of music,
full of inexpressible sadness.
Scent of the sea, pungent, fresh,
on an ice bed, a dish of oysters.

He said to me: 'I'm a true friend!'
and then touched my dress.
How unlike an embrace
the closeness of his caress.

Thus, you stroke birds or cats, yes,
thus you view shapely performers...
in his calm eyes only laughter,
beneath pale-gold eyelashes.

And the voices of sad viols
sang behind drifting vapour:
'Give thanks to heaven, then –
you're alone at last with your lover.'

மாலையில்

தோட்டத்தின் இசையில்
வெளிப்படுத்த முடியாத் துயரம்.
தட்டின்மேல் ஐஸ் கட்டியில்
'மட்டிச் சதை'யின் கூர்மையான கடல் மணம்.
புதுமையுடன் மணக்கிறது.

'நான் உண்மையான நண்பன்' என
அவனுக்குச் சொன்னான்;
எனது உடைகளையும் தொட்டான்
அவனது கரங்களில்
எந்த உணர்ச்சியும் இல்லை.

அது, பூனையையோ ஒரு பறவையையோ
தொடுவதனைப் போல...
செம்மையாய் அமைந்த குதிரையின் முதுகில்,
சவாரிசெய்வோனைப் பார்ப்பதனைப் போல...
மெல்லிய பொன்னிற இமையின் கீழே.
அவனது
கண்களில் மட்டும் ஒளி.

பரவும் புகையின் மேல்
வயலினின் துயரிசை, எழும்புகிறது;
கடவுளுக்கு நன்றி சொல்;
முதற் தடவையாக
உன்,
காதலுடன் நீ தனியாக

அ.யேசுராசா (பனிமழை - 2002)

ஓர் ஏமாற்றப் பாட்டு

இரவுகளில் உன் நினைவுகள் என்னைச் சுற்றுகின்றன
ஆறு தன்னுடைய நிலையான ஒப்பாரியைக்
கடலோடு சேர்ந்து இசைக்கிறது.
உதய நேரத் துறைமுகம் போல
எதுவும் இல்லாமல் ஆயிற்றே.

இது பிரிவின் வேளை
ஓ ! பிரிந்து சென்றவளே !
குளிர் மலரின் முகங்கள் அனைத்தும்
என் நெஞ்சில் சாரலாகின்றன.
ஓ ! எருக்குளியே நீ
கப்பலையும் முழ்க வைத்த பயங்கரக்
கெவியாகி விட்டாய்.
சௌ.மதார் மைதீன்

(சிலிக் குயிலுக்கு ஓர் செங்கவிதாஞ்சலி - 2002)

இம்ரான் குரோஷியா

நிராசையின் பாடல்

என்னைச் சுற்றியுள்ள இரவிலிருந்து எழுகிறது உன் நினைவு
தனது முரட்டுப் புலம்பலைக் கடலில் கலக்கிறது நதி.

விடியற் காலங்களில் கைவிடப்படும் கப்பற் தளங்கள் போல.
இது புறப்படும்வேளை. கைவிடப்பட்டவளே.

குளிர்ந்த மலரின் சிரசுகள்
என் இதயத்தின் மீது பொழிந்துகொண்டிருக்கின்றன.
சிதிலங்களின் குழியே.
சேதமான கப்பல்களின் கொடூரக் குகையே.

சுகுமாரன் (பாப்லோ நெரூதா கவிதைகள் - 2004)

தமிழில் - ந.சத்தியபாலன்

தமிழ்நாட்டு மரப்பாச்சிப் பொம்மை

ஜெய்னே பப்பெக்கின் கவிதைகள்

ஒரு பொம்மையின் தேவைகள்

01

மடியிறங்காத தட்டை நெஞ்சு அம்மாக்களில்
அலுத்தே போயிற்றுப் பொம்மைக்கு
நுளம்பு விரட்டும் திரவத்தின் நெடி கொண்ட
போலித் தேனீர்க் குவளைகளிலும் தான்.
தரப்படும் இனிப்பு பிஸ்கட்டுகளும் போலிகள்.
அவையொன்றும் சொக்லட் கலவை சேர்த்து
உற்பத்தி விபரங்கள் எழுதப்பட்ட
ஊதா வண்ண மேலுறையிட்டுத் தரப்படவில்லை.
நீர் புகாத ரப்பர் காலணியும் பொருத்தமான மேலங்கியும்
அணிந்து கொள்ளாமலேயே பொம்மை
வெளியே மழைக்குள் செல்ல விரும்புகிறது.
ஒரு முட்டாள் வாத்துப் போல இருப்பதை வெறுக்கிறது.

'பால்கம்' பௌடர் வாசனையும் பிடிக்கவில்லை.
'பேசும் கரடிகள்' புத்தகமும் வேண்டாம்
அவளுக்கு ஒரு 'அப்பிள் மார்ட்டினி' யும்
'ஹென்றியும் ஜீனும்' புத்தகமொன்று வேண்டும்
ஒரு பெரிய பாத்திரத்தில் 'ஷ்ரிம் லோமெயினும்'
'எனக்கே யென உண்மையானதொரு யோனியும் வேண்டும்'
என முச்சிரைக்க உரத்துக் கேட்கிறது அது.

02

பொம்மைகள் கூட்டங்களை நடாத்தத் தீர்மானித்தன
குழந்தைகள் 'பாலே' நடனப் பயிற்சியில் ஈடுபடும் மதியப் பொழுதில்
அவை புத்தகங்கள் பற்றியும் நாளாந்த நடப்புகள் பற்றியும்
உயர் கலைகளின் அழகியல் சித்தாந்தங்கள் பற்றியும்
கலந்துரையாடல்கள் நிகழ்த்த விரும்பின
இளஞ்சிவப்பு வண்ண ஆடையிலிருந்த பொம்மை,
விசித்திரமான கற்பனையொன்றை முன்வைத்தது.
நாமனைவரும் ஜோன்ஸ் நகருக்குப் போயிருந்தால்
எங்களில் யார் கூல்-எய்ட் பானம் அருந்தியிருப்பார்கள்?
நெரித்த புருவத்துடன் ஒன்றையொன்று பார்த்தன
யாரேனும் ஒருவரின் பதிலுக்குக் காத்திருந்தன.
'நாமனைவருமே தான்'
தடிப்பாகக் கண்மையிட்டிருந்த பொம்மை கூறிற்று
தெரிவு செய்தல் குறித்து ஏதும் அறியாதோராய் இருப்பவர்கள்
ஏற்பதிலும் மறுப்பதிலும் என்ன அர்த்தம் இருக்க முடியும்?
அனைத்துப் பொம்மைகளும் அவசரமாய்த் தலையசைத்தபடி
தமது கற்பனை சிகரட்டுகளைப் பற்ற வைத்துக் கொண்டன.

ஜெய்னே பப்பெக்

ஜெய்னே பப்பெக்

ஜெய்னே பப்பெக் (Jayne pupek) வேர்ஜீனியாவின் ஷெனன் டாலோ பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் 1962இல் பிறந்தார். தென்புறக் கிராமப் பிரதேசத்தில் உடலின் ஒரு குறைபாட்டோடு (Mascular dystrophy) வளர்ந்த அவரது வாழ்க்கையனுபவங்கள் அவரது எழுத்துக்களில் செல்வாக்குச் செலுத்தின. வேர்ஜீனியாவின் ஹரிசன் பேர்க் அருகிலமைந்த 'ஜேம்ஸ் மடிஸன்' பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டார். 'எட்' என்பவரை மணந்து கொண்டார். இவர்கள் மூன்று குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்தனர் அம்மூவரும் இப்போது வளர்ந்துவிட்டனர்.

எண்ணில்லாத பத்திரிகைகளிலும் இணைய பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முழு அளவிலான இவரது முதலாவது கவிதைத் தொகுப்பான 'Tomato girl' (தக்காளிப் பெண்) அப்பிள் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது.

உறக்கம்

ஜொஹான் சௌத்ரி

ஆங்கில மூலம்:- வில்லியம் வேட்ஸ் வேர்த்
தமிழில்:- தி. நிசங்கன்

ஒன்றன்பின் ஒன்றாக அடிக்கடி கடக்கும் செம்மறி ஆட்டுக் கூட்டங்கள்,
மழையின் சத்தம் கூடவே தேனீக்களின் இரைச்சல்கள்,
ஆறுகளின் விழ்ச்சியும் காற்றும் கடலும்
அறுவடை முடிந்த வயல்கள், வெள்ளைத் தாளாய் பரவும்
நீர் கூடவே தூய்மையான வானம்
ஒவ்வொன்றைக் குறித்தும் மாறி மாறி நினைத்தாயிற்று
நான் இன்னமும் தூக்கமில்லாமல் கிடக்கிறேன்
எனது ஒச்சாட் மரங்களில் இருந்து புறப்பட்டு வந்த
சிறிய பறவைகளின் மெல்லிசை.
முதலாவது குயில் எழுப்பும் துயரத்தின் ஒலி
இவ்வாறாக நேற்றிரவும் அதற்கு முந்திய இரண்டு
இரவுகளும் இப்படியே கிடக்கிறேன்
இருப்பினும் என்னால் எந்தத் திருட்டு வழியிலும்
உன்னை வெல்ல முடியவில்லை
இன்றைய இரவையும் வீணாக்க விடாதே
ஒரு நாளுக்கும் இன்னொரு நாளுக்கும் இடையேயான
ஆசீர்வதிக்கப்பட்ட தடையே,
புதுமையான எண்ணங்களினதும் ஆரோக்கியத்தினதும்
தாயே, உறக்கமே வா.

ஒளியை நிழல்பெயர்த்தல்



ஜெயமோகன்

இலக்கியத்தில் எது மிகக் கடினமோ அது தான் மிக எளிதாகத் தோன்றும் என்றுபடுகிறது. அதில் ஒன்று கவிதை மொழிபெயர்ப்பு. கவிதைகளை வாசித்ததுமே அதை மொழியாக்கம் செய்யவேண்டுமென்ற உற்சாகம் தோன்றிவிடுகிறது. முதற் காரணம் நல்ல கவிதை மிக மிக எளிமையானது என்பதே. நாம் அனைவரும் அறிந்த எளிமையான சொற்களைச் சேர்த்து வைத்து அது தன் வெளிப்பாட்டை நிகழ்த்தியிருக்கிறது. அச் சொற்களுக்கான இன்னொரு மொழியின் சொற்களும் நமக்குத் தெரியும். மொழி பெயர்க்க வேண்டியது தானே? வரிகளும் மிகக் குறைவு. சிறுகதை போல பக்கக் கணக்கில் இல்லையே.

அதைவிடப் பெரிய அபாயம் என்னவென்றால் கவிதையை மொழியாக்கம் செய்யச் செய்ய நாம் ஒரு பரவசத்தில் திளைக்கிறோம். அபாரமான மன எழுச்சியில் நின்று அச் சொற்களை மீளமீள வாசிக்கிறோம். அந்தக் கவிதையை நாமே எழுதியதுபோல எண்ணிக் கொள்கிறோம். அக்கவிதைச் சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா என அப்போது நமக்கு ஐயமே இருப்பதில்லை.

உண்மையில் அந்தப் பரவசம் மூலக் கவிதையை நாம் மிகக்கூர்ந்து வாசிப்பதனால், சொல் சொல்லாக உள்வாங்கிக் கொள்வதனால் உருவாவது என நாம் அறிவதில்லை. அது படைப்பின் பரவசம் அல்ல, வாசிப்பின் பரவசம்தான். முந்தையதன் ஆடிப் பிம்பம் தானே பிந்தையது. வித்தியாசம் கண்டுபிடிப்பதே கடினம். ஒரு கவிதையை நாம் மொழியாக்கம் செய்யும்போது அக்கவிதையின் ஒவ்வொரு சொல்லுக்கும் இன்னொரு மொழியிலுள்ள பல சொற்களை வைத்துப் பார்க்கிறோம். ஆகவே அக் கவிதையின் ஒவ்வொரு சொல்லுக்கும் பற்ப சாத்தியக் கூறுகளை கண்டடைகிறோம். ஆம், ஒரு கவிதையை வாசிக்கச் சிறந்த வழி அதை மொழியாக்கம் செய்வதுதான்.

ஆனால் அந்த மொழியாக்கத்தை நாம் கொஞ்ச நாள் கழித்துப் பார்த்தால் திடுக்கிடுகிறோம். பெட்டிக்குள் போட்ட போலிச் சரிகை கறுத்துக் கிடப்பது போலிருக்கிறது அது. மூலக்கவிதை அளித்த ஒளி அதிலிருந்து இல்லாமல் ஜோடிக்கப்பட்ட சொற்களுடன் ஒரு பயனற்ற மின்னணுக்கருவி போலக் கிடக்கிறது. தூக்கிக் கடாசுகிறோம். நம்மையே சலித்துக் கொள்கிறோம்.

மொழிபெயர்ப்பே ஆனாலும்கூட அதுவும் கவிதையே. கவிதைக்கணம் நிகழாமல் அது நிகழ முடியாது. அது பிரதிபலிப்பாக மறு எழுத்தாக நிகழ முடியாது. மூலக்கவிதைக்குக் கவிஞனில் நிகழும் ஒரு மன எழுச்சி காரணமாக அமைகிறது. மொழிபெயர்ப்புக் கவிதைக்கான மனவெழுச்சியை அந்த மூலக் கவிதை அளிக்கிறது. அவ்வளவே வேறுபாடு. மொழிபெயர்ப்பாளனும் கவிஞனே, இரண்டாம் கட்ட கவிஞன். தனக்குள் ஒரு கவிஞன் இல்லாதவன் ஒருபோதும் கவிதையை மொழியாக்கம் செய்யமுடியாது.

தமிழில் மிகச் சிறந்த உதாரணம் எஸ். வி.ராஜதுரை, ரவிக்குமார் போன்றவர்கள் மொழியாக்கம் செய்துள்ள கவிதைகள். அவர்கள் சிறந்த அரசியல் உரை நடை கொண்டவர்கள். மொழியை அறிந்தவர்கள். பல்வேறு வகையான மொழியாக்கங்களைச் செய்தவர்கள் ஆனால் கவிதையை அவர்கள் மொழியாக்கம் செய்யும்போது ஒரு சடலம் தான் நமக்குக் கிடைக்கிறது. அள்ளிய தற்கும் அளித்ததற்கும் நடுவே கைரேகையிலேயே நதி நீர் வற்றி மறைந்து விடுகிறது.

ஏனென்றால் கவிதை அதன் கருத்து அல்ல என்பதே. கவிதை சொல்லும் விஷய மல்ல கவிதை. 'அப்பா உன்னைய சாப்புடக் கூப்புடறாங்க' என்ற செய்தியுடன் என் செல்லமகள் வந்து நிற்கிறாள். அவளது இள மழலையும் சுருள் குழலும் மென்சிரிப்பும் வட்ட முகத்தில் விரிந்த விழிகளும் தான் கவிதை. அவள் சொல்லும் செய்தியல்ல அப்போது அவள். சுருத்துக் கண்டு கவிதையை மொழியாக்கம் செய்பவர்களுக்குப் பானம் சிக்குவதில்லை பாத்திரமே எஞ்சுகிறது.

தமிழில் பல கை அளாவிய கூழாகப் புளித்துக் கிடப்பது பாரதி கவிதை. பாரதியின் கவிதைகளின் மலையாள மொழியாக்கத்தைப் பார்த்துவிட்டு மூத்த விமர்சகரான எஸ். குப்தன்நாயர் 'இவர் எழுதியது பாட்டா கவிதையா?' என்றுகேட்டார். 'மிட்டாய் சப்புவது போல ஒரு மெல்லிய தித்திப்புக்கு அப்பால் அவற்றில் ஏதுமில்லை' என வரையறை செய்தார். பாரதியில் இருப்பது ஓர் ஆவேசம். அது கருத்தில் இல்லை, எங்கும் சிக்கும் சீர் திருத்தக் கருத்துக்கள் தான் அவை. அந்த ஆவேசம் சொற்களில் குடிகொள்ளும் விதமே அவரது கவிதையின் அழகு.

'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா'
One who has bright eyes, Come! Come! Come! என்று மொழியாக்கம் செய்து தடிமனாக புத்தகம் போட்டிருக்கிறார் கள். வா வா வா என்ற பாரதியின் சொல்லிலுள்ள அலையை விட்டு விட்டால் இதிலென்ன கவிதை இருக்கிறது? நல்ல கவிதை மொழியாக்கத்தில் முழுமையாகத் தொலைந்தும் போகாது முழுமையாக வரவும் செய்யாது என்பார்கள். ஆனால் மூலக்கவிதை ஒரு கவித்துவக் கணமாக ஆகி மொழி பெயர்ப்பாளனைக் கவிஞனாக ஆக்காவிட்டால் எந்தக் கவிதையும் சொற்குவியலாகவே இன்னொரு மொழிக்குச் சென்று சேரும்.

ஆகவேதான் நான் கவிதை மொழி பெயர்ப்பை ஒரு பணியாக இப்போது செய்வதில்லை. எப்போதாவது ஒரு கவிதை என்னைப் பெரிதும் தூண்டி எழுதச் செய்யுமென்றால் மட்டுமே மொழியாக்கம் செய்கிறேன். முன்னர் நான் ஒட்டு மொத்தமாக ஒரு தொகுப்புக்கான கவிதைகளை மொழி பெயர்த்திருக்கிறேன். அவை 'தற்கால மலையாளக் கவிதைகள்' என்ற பேரில் நூலாக வெளிவந்தது. அப்போது கிட்டத்தட்ட ஒரு வருடம் எடுத்துக்கொண்டு கவிதைகளை மொழியாக்கம் செய்தேன்.

அதன் பின்னர் நடத்திய ஊட்டி தமிழ்-மலையாளக் கவிதை அரங்குகளுக்காக தமிழ் மலையாளக் கவிதைகளை இரு மொழிகளுக்கும் மொழியாக்கம் செய்தேன். இந்த அரங்குகளில் நான் கவிதைகளைப் பல வாரங்கள் முன்னரே மொழியாக்கம்

செய்வது வழக்கம். பல கவிதைகளை எடுத்துக்கொண்டு எந்தக் கவிதை என்னைத் தூண்டுகிறதோ அதை மட்டுமே மொழியாக்கம் செய்வேன். அப்போது ஒன்றைக் கண்டு பிடித்தேன். ஒரு நல்ல கவிதை நம்மைத் தூண்டி நல்ல மொழியாக்கத்தைச் செய்ய வைத்தது என்றால் அந்த வேகம் – அது ஒரு போதை – நம்மை மேலும் மேலும் மொழியாக்கம் செய்யச் செய்கிறது. கடைசியாகச் செய்யும் கவிதைகள் தான் கவிதைகளாக அமைந்து வருகின்றன.



லைக்கல் இருதயராஜ்

ஆனாலும் கவிதை மொழியாக்கம் என்பது ஒரு குலுக்கல் தான். நாலிலே ஒன்றி ரண்டு பலித்தால் உண்டு. தமிழ் மலையாள மொழிபெயர்ப்புகளை நிகழ்த்தும்போது சந்திக்க நேரும் சிக்கல்கள் பல. முதன்மையான சிக்கல் இருமொழிகளுக்குமுள்ள கட்டமைப்பு வேறுபாடு. தமிழ், பாரதி போன்றவர்களால் பல காலம் முன்னரே நவீனப்படுத்தப் பட்ட மொழி. அதன் சொற்றொடர் அமைப்புச் சாத்தியங்கள் பற்பல. மலையாளம் அந்தச் சாத்தியங்களை அளிப்பதில்லை. ஆகவே நான்கு சொற்களால் சொல்லப்பட்ட ஒன்று மலையாளத்தில் ஆறு சொற்களைக் கோருகிறது. இது கவிதையின் இசையையும் அடர்த்தியையும் தவறவிட வழி வகுக்கிறது.

இதே சிக்கல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்யும்போது நிகழும். ஆங்கிலம் இன்னமும் கச்சிதமான மொழி. தமிழில் சொற்றொடர்களை ஆங்கில மாவுக்கு ஒடித்து இணைக்க முடியாது. நீட்டுச் சொற்றொடர்களில் ஆங்கிலக் கவிதையை அமைக்கையில் அதிலிருந்து கவிதை எழுந்து பறந்து வான் வெளிக்குச் செல்ல சொற்றொடர் மட்டும் அசைந்து கொண்டிருக்கிறது.

'The way a crow
Shook down on me
The dust of snow
From a hemlock
Has given my heart
A change of mood
And saved some part
Of a day I had rued.'

என்ற 'ராபர்ட் ஃப்ராஸ்டின்' கவிதையை மொழியாக்கம் செய்து பார்த்தால் அந்தச் சிக்கலை எவரும் உணர முடியும்.

'வெறும்லோக் மரத்தில்
அமர்ந்த காகம்
பனித்துகளை என்மீது
உதிர்த்து
மனநிலையை மாற்றி
காப்பாற்றியது
நான் ஏற்கனவே
வீணடித்திருந்த
நாளின் மிச்சத்தை'

முன்னது கவிதை. பின்னது தமிழில் அதன் பொருள். அதாவது வெறும் நிழல். முதல் வடிவம் அளிக்கும் நிறைவுக்கான முதல்காரணம் முதல் வரியில் காகம், பிறகு அதன் செயல், பிறகு பனி, அதன் பிறகு மரம், அதன்பின் மனம் கடைசியாக நாள் எனவரும் வரிசையா? தெரியவில்லை அப்படி அமைத்தால் தமிழ்ச் சொற்றொடர் முடிச் சுப் போட்டுக் கொள்கிறது.

இரண்டாவதாக ஒலி அளிக்கும் கவித்துவ அழுத்தம் ஒரு சிக்கல். மிக எளிதாகவே அது மூலத்தில் நிகழ்வதாகப்படும். தமிழில் நடுவிக்கொண்டே இருக்கும்.

'நீதன்னே மரணமும் சந்த்யே
நீதன்னே ஜனனமும் சந்த்யே
நீதன்னே நீதன்னே சந்த்யே'

என அய்யப்ப பணிக்கரின் கவிதையை

நீயே பிறவியும் அந்தி
நீயே நீயே அந்தி!

என மொழியாக்கம் செய்கையில் நீ தன்னே என்ற சொல்லில் இருக்கும் அழுத்தமும் சந்த்யே என்ற அழைப்பிலுள்ள ஆவேசமும் இழக்கப்படுகிறது.

சொற்களின் சிக்கல் எப்போதுமே கவிதை மொழியாக்கத்தைத் துரத்துகிறது. ஒரு மொழி அளிக்கும் சொல்லிலுள்ள ஒலியும் சேர்ந்தே அந்தக் கவிதையை அமைக்கிறது. ஆனால் ஒலி அல்லது சொற்பொருள் இரண்டில் ஒன்றையே நாம் தேர்வு செய்யும் படி பலசமயம் நம்மை மொழியாக்க வேலை கோருகிறது.

அமைதி என்பது
மரணத்தறுவாயோ
வந்தமரும் பறவையினால்
அசையும் கிளையோ? (தேவதேவன்)

சாந்தத எந்நது
மரண முஹூர்த்தமோ
வந்நிரிக்கும் பக்ஷியால்
ஆடுந்த கொம்போ?

என்ற மலையாள மொழியாக்கம் சம்பந்தமாக நானும் ஆற்றூர் ரவிவர்மாவும் பேசிக் கொண்டோம். இருவருமே அக்கவிதையை மொழியாக்கம் செய்திருந்தோம். அசையும் என்ற சொல்லை ஆற்றூர் சலிக்குந்த என்று மொழியாக்கம் செய்தார். அது சொற் பொருள். ஆனால் அசைவு என்பதும் சலனம் என்பதும் வேறு வேறு. ஒலியும் வேறு. ஆடுதல் என்பதில் ஒலி இருக்கிறது. ஆனால் மூலப் பொருள் குறைகிறது. அவர் அதையும் நான் இதையும் வைத்துக் கொண்டோம்.

ஆனாலும் கவிதையை மொழிபெயர்ப்பது ஆர்வமூட்டுகிறது. எந்தப் புராணிகனுக்கும் ஒன்று தெரியும், அலகிலா பரம் பொருளை அவனுடைய கதைகளாலும் வர்ணனைகளாலும் அவன் சொல்லிவிட முடியாது. ஆனால் அந்த எத்தனம் இல்லையேல் புராணங்கள் உருவாக முடியாதே.

- தமிழ் – ஆங்கில கணணித் தட்டச்சுப் பதிவுகள்
- CD, DVD Writing
- ஓவ் (!) செற் பிறின்டிங்
- போட்டோக்கொப்பி, மைமனேற்றிங் (கிளீன்கட்)
- புத்தகம் கட்டுதல் என்பன செய்து கொடுக்கப்படும்.

Local T.P - 0217429155, 0215100013
Fax - 0212240871

IDD T.P - 0094217429155
- 0094215100013
Fax - 0094212240871

e.mail - raamnet@yahoo.com
- raamnet@hotmail.com
- raamnet@gmail.com

தொலைத் தொடர்பு நிலையமும் கணணி திருத்தகமும்

ராம்நெற் கொம் RAAMNET.COM

காங்கேசன்துறை வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.

அரசியல் கைதி

ஆங்கில மூலம் – ஜீன் அரசநாயகம்

தமிழில் – சங்கரசெல்வி

ஒரு சிறைக்கூடத்துள்
அவன் இறந்து கிடக்கிறான்
இது எப்போது நிகழ்ந்தது
நாமெல்லோரும் நித்திரையில் ஆழ்ந்திருந்தோம்

அதிகாலையை நோக்கி
காலம் நகர்ந்த போது
அவனது அமைதியான அறையிலோ
கரகரத்த முனகலையோ
நாங்கள் கேட்கவில்லை

அவன் தனியே இறந்தான்
யார் இரங்கல் தெரிவித்தார்கள்
அது ஒரு ஆளா
அல்லதொரு தேசமா

ஒரு சிறைக் கூடத்துள் அவன் இறந்து கிடந்தான்
அவனது மூச்சு
சிறைக்கம்பிகளை வளைத்துச் சென்றது
யாரும் அருகில் இருக்கவில்லை
ஆனாலும் ஒரு பெருங் கூட்டம் வெளியே நின்றது.

ஒரு சிறைக் கூடத்துள் அவன் இறந்து கிடந்தான்
மறுநாட் காலையில்
பத்திரிகையில் மரணம் உறைந்த அச்சில் பார்த்தோம்

நீ சிலவேளை
இவ்வழியே கடந்து போயிருக்கலாம்
அவன் தனியே இறந்து கிடந்தான்
மிகவும் தனியே
அவனது சிறைக்கூடத்துள்
நான்கு சுவர்கள் ஒரு கதவு
மூடிய கதவுகள்
மற்றும் சிறியதாக ஏதாவது
நீ அங்கும் இருந்திருக்கலாம்
ஆனால் நீ முகமூடிகள் அணிபவனாயிற்றே

மாறுவேடம் புனைவதில் நீ கெட்டிக்காரன்
நீ அப்படியாக இருக்கக் கூடாது

பாதுகாப்புக்காக வேணும்
உனது சிந்தனைகளை உரத்துச் சொல்
குண்டுகள் உனது விலாவெலும்புகளை
விலத்திச் செல்லவோ
உனது நுரையீரல்களை வெடிக்க வைக்கவோ
நீ விரும்பமாட்டாய்

மற்றவர்கள் தம் இரத்தத்தைக் கொட்டட்டும்
சதைகளை வேகவைத்துத்தரட்டும்
உனது இதழ்கள் மௌனத்தில்
இறுக மூடிக் கொள்ளட்டும்
துப்பாக்கிகள் தொடர்ந்து அதிரட்டும்
குண்டுகள் பாயட்டும்
காட்டிலிருந்து நீ விதிக்கு வந்தால்
இரத்த வெள்ளத்தில் வழுக்கி விழலாம்

ஆனால் பார் அங்கே
தூக்கிலிடுபவனின் சுருக்குக் கயிறு
கீழே இறங்குகிறது
அது ஒரு கயிற்று வளையம்
அது மெதுவாக
உனது கழுத்தை இறுக்குகிறது
எலும்பை உடைக்கிறது
நன்றாகப் பார்
அது ஆடி ஆடி அருகே வருகிறது

அந்த முகத்தை அடையாளம் காண முடிகிறதா
அடையாளம் கண்டவுடன்
அழ முடிகிறதா
அவன் உன்னுள் ஒருவன்
அவன் உனது நண்பனா அல்லது
நீ அவனது எதிரியா?

பாலை

அடோனிஸ் கவிதைகள் குறித்த மனப்பதிவு

– கருணாகரன் –

மொழிபெயர்ப்புகளின் வழியாக அறியப்பட்ட கவிதைகளில் என்னை அதிகம் பாதித்தவையும் அதிகமாகக் கவர்ந்தவையும் சி.சிவசேகரம் மொழி பெயர்ந்திருந்த 'பாலை'(அடோனிஸ் கவிதைகள்), சுகுமாரன் தொகுத்திருந்த 'வெட்டவெளி வார்த்தைகள்' (கன்னட வீர சைவக் கவிதைகள்) மலையாளக் கவிஞர் 'சச்சிதானந்தனின் கவிதைகள்', எம்.கே.ஷரீப் மொழி பெயர்த்திருந்த நிஸார் கப்பானியின் 'ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள்', 'ஒரு பின்னடைவு நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை', 'அன்னா அக்மத்தேவாவின் கவிதைகள்', எம்.யுவன் மொழி பெயர்ப்பில் வெளிவந்திருந்த 'ஸென் கவிதைகள்' ஆகிய வையே. இவற்றைத் தாண்டியும் வேறு சில மொழிபெயர்ப்புக் கவிதைகள் பிடித்திருந்தாலும் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் கவிதைகளே முன்னிலை வகிக்கின்றன. அதிலும் அடோனிஸின் பாலை நிஸார் கப்பானியின் ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள் ஒரு பின்னடைவு நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை போன்ற கவிதைகள் பெறுகின்ற கவனம் விசேடமானது.

இந்தத் தேர்வை எப்படி என்னுடைய மனம் செய்து கொண்டது என்பது ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதே. அரசியல் ரீதியான ஈடுபாட்டின் விளைவாக எதையும் அணுக முற்பட்டதே இதற்குக் காரணம் என்று ஒரு தடவை நண்பர் ஒருவர் குறிப்பிட்டதை இங்கே நினைவுகூரலாம்.

ஆனால், அரசியல் அணுகுமுறை மூலம் ஒரு படைப்பை, ஒரு கவிஞனை அணுக முடியாது என்பதையும் புரிந்து கொள்கிறேன். அதே வேளை அரசியலைப் புறக்கணித்து விட்டு ஒரு படைப்பாளியால் ஒரு படைப்பினால் இயங்கவும் முடியாது. இது ஒரு முக்கியமான விசித்திர நிலையே. படைப்பு முக்கியம் பெறுவது இந்த விசித்திரத்தில் தான் எங்கேயோ, எப்படியோ ஒரு மெல்லிய பிரிகோடும், நுண் இழைகளும் நல்ல தொரு படைப்பிலிருந்தும் அரசியலைப் பிரித்தும் சேர்த்தும் விடுகிறது. இந்த நுட்பத்தை, இந்த வித்தையை, இந்தக் கலையை தேர்ந்த படைப்பாளிகள், கவிஞர்கள் செய்து விடுகிறார்கள். என்பதாலேயே அவர்கள் வெற்றியடைகின்றனர். காலம் அவர்களையும் அவர்களுடைய படைப்புக்களையும் தன்னுடன் இணைத்துத் தன்னுடைய விசித்திரங்களினதும் நுட்பங்களினதும் அம்சமாக்கி விடுகிறது.

'பாலை'யும் அடோனிஸும் கொந்தளிக்கும் வாழ்க்கையின் அவ்வளவு தகிப்புகளையும் வெளிப்படுத்திக் காலத்துடன் ஒன்றித்து விடுவது இந்த வகையில் தான். வன்னியில் ஈழப்போரின் மூன்றாம் கட்டம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்த சூழல். அப்போது 'காலச்சுவடு' இதழில் அடோனிஸின் சில கவிதைகளும் அவரைப் பற்றிய சிறுகுறிப்பு ஒன்றும் சிவசேகரத்தால் அறிமுகம் செய்யப் பட்டிருந்தன. என்னவோ தெரியவில்லை, அடோனிஸின் கவிதை வரிகள் சட்டெனப் பற்றிக்கொண்டன.

அப்போது நாம், வன்னியிலும் வன்னிக்கு வெளியிலும் எதிர்கொள்ள நேரிட்ட நிலைமைகள் அடோனிஸ் குறிப்பிடும் அல்லது அவர் வெளிப்படுத்தும் கொதி நிலைக்கு ஒப்பானதாக இருந்திருக்கலாம். பலஸ்தீனக் கவிதைகளை 1980களில் நுஃமான் அறிமுகம் செய்தபோதும் ஏறக்குறைய அந்தக் கவிதைகள் வெளிப்படுத்தும் அரசியற் சூழலும் உணர்நிலையும் ஈழத்திலும் இருந்தமையே அதிக அறிமுகத்தையும் எல்லோரிடமும் அவை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததையும் இங்கே நாம் இணைத்துப் பார்க்கலாம்.

ஆனால், அடோனிஸின் கவிதைகள், அவர் எதிர்கொள்ளும் சூழல், அவர் முன்னே நிகழும் நிகழ்ச்சிகள் என ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும், விதம் மிகவும் தாக்கத்திற் குரியவை. கனதியான, ஆழமான, கூர்மையான சொற்களைக் கையாண்டு இதை அவர் செய்துள்ளார்.

அடோனிஸின் கவிதைகளில் உள்ள முக்கிய அம்சம் அவருடைய சமூக நோக்கும் – அக்கறையும் ஒடுக்குமுறைக்கு எதிரான மனப்பாங்குமே. அதேவேளை அவர் ஜனநாயகத்தையும் அறத்தையும் வலியுறுத்துகின்றமையும் முக்கியமானது.

கொலையும் வன்முறையும் பெருக்கெடுத்த சூழலில் மனிதர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை, வாழ்க்கை அடையும் நிலையை, நிச்சயமின்மையின் வளர்ச்சியை, அதன் தீவிரத்தை என எல்லாவற்றையும் அடோனிஸ் மிகச் சாதாரணமாக – ஆனால் மிகக் கனதியாகவும் நுட்பமாகவும் வெளிப்படுத்தி விடுகிறார்.

சூழலை விபரிப்பது போல ஒரு அடி. சட்டென அந்தச் சூழலின் தீவிரத்தை – அங்கேயுள்ள நிலைமையை – அங்கே நடக்கும் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவதாக அடுத்த அடி எனக் கவிதை பாய்ச்சலெடுக்கும் முறை கவனத்திற்குரியது. (இவ்வளவுக்கும் அடோனிஸின் கதைகள் எனக்குத் தமிழின் வழியாகவே அறிமுகம்.)

அடோனிஸின் கவிதைகளில் 1986க்கு முற்பட்ட கவிதைகளைக் கொண்ட 'பாலையில் முற்றுகையிடப்பட்ட பெய்ரூத்தின் நாட் குறிப்பு 1982' முக்கியமானது. இஸ்ரேலியப் படைகள் லெபனானுக்குள் புகுந்த காலம் தொடர்பானது என இதை சிவசேகரம் அறிமுகம் செய்கிறார். ஆனால் எதன் பொருட்டு இக்கவிதை மூலமாக முற்றுகையிடப்பட்ட வாழ்க்கையை அடோனிஸ் வெளிப்படுத்துகிறார்.

ஒரு காவியத் தோற்றத்தை கவிதைகள் வழியாக முழுச் சித்திரத்தை அளிக்கும் வடிவத்தில் எழுதப்பட்டிருக்கும் 'பாலை' ஏமாற்றத்தின் குரலாகவும் நம்பிக்கையின் வேராகவும் எதிர்ப்புணர்வினதும் கோபத்தினதும் குறியீடாகவும் இருக்கிறது. இதே நிலை தான் இன்று எமக்கும் ஏற்பட்டுள்ளது. ஆனால் அடோனிஸிடம் இருக்கின்ற தெரிவும் அனுபவ நிலையைக் கண்டடையும் நுட்பமும் பக்குவமும் நமக்கு உண்டோ என்பது கேள்வியே!

பாலையில் வேறு கவிதைகளுமுண்டு. அவற்றில் இன்னொன்று முக்கியமானது – நியூயோர்க்கிற்கு ஒரு சவக்குழி.

அடோனிஸின் பாலையை சிவசேகரம் தமிழுக்குக் கொண்டு வந்திருப்பது ஒரு முக்கியமான பங்களிப்பே. ஆனால் இந்தப் பங்களிப்பை இந்தப் பங்களிப்பின் பெறுபேற்றை இதுவரையில் தமிழ்ப்பரப்பு அறிந்ததாக இல்லை. ஏறக்குறைய பத்தாண்டுகளாகி விட்டபோதும் 'பாலை' இன்று சரியான அறிமுகத்துக்குச் செல்லவில்லை. இந்தப் புரிதல் சிலவேளை சிவசேகரத்துக்கும் வெளியீட்டாளர்களுக்கும் கூட இருக்கக்கூடும்.

ஆனால் பாலை அறிமுகமானபோது நானடைந்த மகிழ்ச்சியும் அதை வாசித்த போது ஏற்பட்ட மனவுணர்வுகளும் சொல்ல முடியாதளவுக்குரியவை. எதையும் சொல்ல முடியாதளவுக்குத் தினறிக் கொண்டிருந்த சொல்லத் தேவையானவற்றை சொல்ல வேண்டிய சூழலிலிருந்த நமக்கு அடோனிஸ் ஒரு வழிகாட்டியாகவுள்ளார்.

அடோனிஸ் எழுதுகிறார்:

'நகரங்கள் சிதறுகின்றன
இத்தரை ஒரு புழுதிமண்டலம்
கவிதையால் மட்டுமே
இவ்வெளியை மணக்க முடியும்...'

இது தானே நமது அனுபவமும், நமது சூழலும், நமது காலமும் மிகச் சில சொற்களில் போரின் முழுத் தீவிரத்தையும் கொண்டு வந்து நம் கண்முன்னே நிறுத்தும் அடோனிஸின் ஆற்றல் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. ஆனால் அதே வேளை அடோனிஸும் கவிதையும் மிக நெருக்கமாகி விடுகின்ற ஒரு நிலையேற்படுகிறது.

மேலும் அடோனிஸ் எழுதுகிறார்:

'எனது யுகம் பச்சையாகவே
எனக்குச் சொல்கிறது
நீ இவ்விடத்துக்கு உரியவனல்ல
நானும் பச்சையாகவே பதிலளிக்கிறேன்
நான் இவ்விடத்துக்குரியவனல்ல
உன்னை விளங்கிக் கொள்ளவே
முயல்கிறேன்

நான் இப்பொழுது
பாலையில் தொலைந்து போய்
ஒரு மண்டையோட்டின் கூடாரத்துள்
பாதுகாப்புத் தேடும் நிழல்.'

அசாத்தியமான உணர்வுப் பகிர்வை ஏற்படுத்தும் இந்த மாதிரி இடங்கள் பாலையில் நிறையவேயுண்டு. இது தான் உண்மை சொல்லும் கவிஞனின் மொழி. அவரது மனம் அந்த மனதில் இப்படித்தான் வெளிப்பாடுகள் நிகழும்.

எங்களுடைய ஈழச் சூழலிலும் இதே போன்ற அனுபவங்களோடும் நிலைமைகளோடும் வாழுகின்ற வாழ்க்கையே இன்றும் நமக்குண்டு. நம்முடைய வாழ்க்கையை அனுபவத்தைப் பேசுகின்ற படைப்புகள் எப்போதும் அதிக ஈர்ப்பைக் கொடுக்கின்றன.

'நான் முரண்பாடுகள் நிறைந்தவனா?
அது சரியே!
இப்போது நானொரு செடி
நேற்று நெருப்பிற்கும் நீருக்குமிடையே
இருந்த வேளை
நானொரு அறுவடை
இப்போது நானொரு ரோதாவும்
எரியும் நிலக்கரியும்
இப்போது நான் சூரியனும் நிழலும்
நான் இறைவனல்ல
நான் முரண்பாடுகள் நிறைந்தவனா?
அது சரியே!'

இதே நிலைதான் இப்போது ஏறக்குறைய என்னுடையதும் எனலாம். முரண்பாடுகளின் மையமாகத் தெரியும் தோற்றம். ஆனால் ஆழமாகப் பார்த்தால் எல்லா முரண்பாடுகளுக்கும் அப்பால் நிச்சலன மற்ற ஒரு தெளிந்த மெல்லிய கோட்டில் அனுபவங்களை உள்வாங்கியபடி நிகழும் பயணமாகத் தெரியும்.

பாலைத் தொகுதி அறிமுகமானபோது உண்மையில் நான் கலவரப்பட்டேன். போரும், படையளிக்கும் ஒடுக்குமுறையும் மக்களின் அவலமும் போர் உருவாக்கும் சூழலும் எங்கும் – எவருக்கும் ஒரே மாதிரியானவை, பொதுவானவை என்பதை அடோனிஸ் மிகச் சாதாரணமாகவே உணர்த்தினார்.

பாலையின் முதற் சில பக்கங்களில் நுழையும் போதே யுத்தத்தின் அத்தனை தீவிர நிலைகளையும் ஒரு வாசகர் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

'அவனுடைய வீட்டுக்கு வழியில்லை
-முற்றுகை
தெருக்கள் அனைத்தும் மயானங்கள்
தூரத்தே அதிர்வுண்ட நிலவொன்று
அவனது வீட்டுக்கு மேலாகத்
தூசி இழைகளிற் தொங்குகிறது'

'நான் சொன்னேன் இத்தெரு
எம் வீட்டுக்குக் கொண்டு செல்லும்
அவன் சொன்னான்: இல்லை,
நீ போக முடியாது
தன் குண்டுகளை என்னை
நோக்கி நீட்டினான்.'

'சாக்குகளில் மனிதரைக் கண்டனர்
தலையில்லாமல் ஒருவர்
நாவும் கைகளுமில்லாமல் ஒருவர்
நசுக்கப்பட்டு ஒருவர்
பேர்களின்றி மற்றையோர்
உனக்கென்ன பைத்தியமா?
தயவுசெய்து
இதைப் பற்றி எழுதாதே!'

'நீ செவிடாயும் ஊமையாயும் வாழ்வது
ஏற்கப்படும் காலம் வரக்கூடும்
ஒரு வேளை
அவர்கள் உன்னை முணுமுணுக்க
அனுமதிக்கக்கூடும்
மரணம், வாழ்க்கை, மறுஜென்மம்
உனக்குச் சாந்தி கிடைக்கட்டும்.'

இப்படியே அடோனிஸின் கவிதைகள் கொந்தளிப்பை வீசிச்செல்கின்றன. நுட்பமான விவரிப்பு ஆச்சரியமான வடிவங்கள் கவனமான சொல்லமைப்புடன் உலகம் முழுவதுக்குமான கவிதையை உருவாக்கி விடுகிறார் அடோனிஸ். சிவசேகரமே சொல்வதைப் போல அடோனிஸின் கவிதைகள் நவீனத்துவம், அழகியல், சமுதாய உணர்வு என்ற மூன்று தளங்களிலும் வெற்றிபெற்றவை. முன்னுதாரணமானவை.

ஒவ்வொரு வரியிலிருந்து அடுத்த வரிக்கு நம்மை அடோனிஸ் அழைத்துச் செல்லும்போது போர்ப் பிரதேசத்தில் நாம் அடைந்திருக்கும் திகிலோடும் கலவரத்தோடும் அமைப்பற்ற நிலையில் பயணிப்பதைப் போல - அது பயணமல்ல ஓட்டம் – நாம் செல்கின்றோம்.

'கொலைச் சம்பவம் நகரின் வடிவத்தை
மாற்றிவிட்டது
இந்தப் பாறை, எலும்பு
இந்தப் புகை, மக்களின் சுவாசம்'

இதே மாதிரித் தானே எங்களின் சூழல் இருந்தது; எங்களின் நகரம் இருந்தது; எங்களின் நாட்கள் இருந்தன;

பாலையை நான் திரும்பத் திரும்ப வாசித்தேன். ஒவ்வொரு தடவை வாசிக்கும்போது என்னுடைய அனுபவத்தையும் என்னுடைய காலத்தையும் என்னுடைய வாழ்க்கையையும் என்னுடைய பிரச்சினைகளைப் பற்றியும் நான் அறிவதாகவும் உணர்வதாகவும் இருந்தது.

பல நண்பர்களுக்கும் அடோனிஸையும் பாலையையும் அறிமுகப்படுத்தினேன். இப்போதும் அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கிறேன்.

எப்படியோ

அடோனிஸிற்கும் சிவசேகரத்திற்கும் நன்றி. ●

தீச்சுடர்த் திருடன்

தொகுப்பாசிரியர்:-
ஜெராட் றொபுஷோன்

வெளியீடு :-
யாழ். பிரெஞ்சு நடபுறவுக் கழகம்
61, கச்சேரி – நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

சில சமயங்களில்
நான் இருகண்களையும் முடி அமர்கின்றேன்
நான் அவர்கள் சொல்லக் கேட்டதெல்லாம்
'இந்தக் கிளி பேசாது,
அது ஒரு சிந்திக்கும் பறவை'
நான் ஒலிவ் இலை நிறத்துப் பச்சை,
கொஞ்சம் கோபக்காரன்,
அந்தக் குடும்பம் சொல்லுகிறது
'இந்தப் பறவை அமைதியாக இருக்கிறது
எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டபடி'
அது, தான் சொல்வதைக் காட்டிலும்
அதிகம் யோசிக்கிறது,
அது, தான் கேட்கின்ற விடயங்கள் குறித்துப்
பேசுவதைக் காட்டிலும்,
ஆழ்ந்து யோசிப்பது மேலெனக் கருதுகிறது.
ஆம் அது உண்மை தான்,
ஆனால் அது ஏன் உண்மை என்பது வேறு விடயம்,
நான் அதிர்ச்சியூட்டும் சிலவிடயம் குறித்து யோசிக்கிறேன்,
அவர்களை ஆச்சரியப்பட வைப்பதற்காக.
என் கருத்துக்கள் தயாரான பிறகு.
அவர்களை நிச்சயம் நான் ஏமாற்றப் போவதில்லை,
பொருத்தமான ஒரு நேரத்துக்காகக் காத்திருப்பேன்.
அவர்கள் அனைவருமே பிரசன்னமாக
இருக்கும் ஒரு நேரத்தில்,
நான் என் தொண்டையைச் சீர் செய்துகொண்டு
எனது வாயைத் திறப்பேன்.
ஒரு ஒலி எழுப்பிப் பேச ஆரம்பிப்பேன்.
ஒரு வாரத்திற்குத் தொடர்வேன்,
அது அவ்வளவு சந்தோசமாக இராது.

சல்வடோர் டாலி

கிளி

ஆங்கில மூலம்: அலன் பிறவுண் ஜோண்
தமிழில்: சத்தியதாசன்



போல் வெக்டர்

அகதியின் புலம்பல்

இப்பெருநகரில் இருக்கலாம் ஒருகோடி உயிர்கள்
சில சுவரங்களில் வாழ்வைக் கடத்துவன, சில கூடுகளில்:
எனினும், அன்பரே அதுவேனும் எமக்கில்லை. அதுவேனும் எமக்கில்லை

நமக்கென்றொரு நாடிருந்தது. அது போதுமென்றிருந்தோம் அன்று:
தேடிப்பாரும் தேசப்படத்தில் அங்குதான் அமைந்திருந்தது:
அங்கே நாம், அன்பரே, போகவியலாது. அங்கே நாம் போகவியலாதிப்போது.

எங்கள் ஊர்க் கோவிலின் பழைய மல்லிகைப் பந்தல்
ஒவ்வொரு பருவத்திலும் புதிதாய்ப் பூத்துச் சொரியும்
கடவுச் சீட்டால் அவ்வாறு செய்ய முடியாதே அன்பரே
கடவுச்சீட்டு அவ்வாறு செய்யாதே.

அடித்துச் சொன்னார் தூதுவர் தன் மேசையில்:
உயிரோடில்லை நீர் உத்தியோகபூர்வத்தில் கடவுச்சீட்டு இல்லையெனில் :
ஆனால் அன்பரே உயிரோடுள்ளோமே நாமின்னும், உயிரோடுள்ளோமே நாமின்னும்.

ஒரு குழுவின் முன்பிரசன்னமானோம், இருக்கைகள் தந்தனர்:
அடுத்த ஆண்டு வருமாறு பணித்தனர் பக்குவமாய்
ஆனால் அன்பரே, எங்கே போவோம் நாமின்று? எங்கே போவோம் நாமின்று?

மேடைகள் பேசின, பேச்சாளர் எழுந்து பொரிந்து தள்ளினார்:
எங்கள் உழைப்பை உறுஞ்சிக் கொள்வர், அவர்களை உள்ளே விட்டால்
பேச்சின் பொருள் அன்பரே, நீரும் நானும் தான், பேச்சின் பொருள் நீரும் நானும் தான்.

அடிவானில் உருளும் இடி கேட்டாய் நினைவு:
ஐரோப்பா பற்றி கர்ச்சித்தது ஹிட்லர்: இறக்கவே வேண்டும் அவர்கள்
நாச யோசனையுள் அன்பரே, நாங்கள் தான், நாச யோசனையுள் நாங்கள் தான்.

மல்லின நாய் சங்கிலி நுனியில் சட்டையுடன்,
முகவு திறந்தபோதுள்ளே ஒரு பூனை கூட அனுமதிக்கப்பட்டது:
ஆனால் அன்பரே, அவை ஜேர்மானிய யூதர்களில்லையே, அவை ஜேர்மானிய யூதர்களில்லையே.
இறங்கு துறையில் ஏறிநின்றோம் துறைமுகம்வரை சென்று,
மீன்கள் சுழன்று திரிந்தன மிகச் சுதந்திரமாய்:
அன்பரே, ஒரு பத்தே அடிகளுக்கப்பால், ஒரு பத்தே அடிகளுக்கப்பால்.

தோப்பில் நடக்கையில் பறவை பட்சிகள் மரங்களில் கண்டோம்,
அரசியலாளர் இல்லை அவற்றிடை, ஆனந்தம் பாடின:
அவை, அன்பரே, மனித இனம்கூட இல்லையே, அவை மனித இனம்கூட இல்லையே.

ஆயிரம் தளத்து அகன்ற கட்டம் கனவில் கண்டேன்,
ஆயிரம் வாசலும் ஆயிரம் சாளரமும்:
அவற்றில் ஒன்றுகூட எமதில்லை அன்பரே, அவற்றில் ஒன்றுகூட எமதில்லை.

பனிபடர் பெருவெளியில் நின்றோம் நாங்கள்,
பதினாயிரம் படையினர் அணிநடந்தனர் அங்குமிங்கும்:
அன்பரே, உம்மையும் என்னையும் தேடுகின்றான், உம்மையும் என்னையும் தேடுகின்றான்.

ஆங்கில மூலம்: டபிள்யூ. எச். ஓடன்

தமிழில்: இ. ரமணன்

அழகியல்

சீன நிலவுரு ஓவியம்

தேடினேன் எல்லா இடத்திலும்
எங்கே உள்ளது அழகியல்
ஹோர்ஷ் கீர்வின் ஓர் ஓவியத்தில்
அமரதேவனின் ஒரு பாட்டில்
திஸ்ஸவின் சிவ சிற்பமொன்றில்
அனுராதபுரத்து அஷ்கனை எச்சங்களில்
வானத்து நிறத்தைத் திடமாகக் கொண்டு தோன்றியுள்ள
தூரத்துப் பச்சையான மலை வரிசைகளில்
நிற நிறமான மாலை நேரத்து முகில்களுக்குள்
தூங்கிந்த நீர் வீழ்ச்சில்
தேடினேன் எல்லா இடத்திலும்
எங்கே உள்ளது அழகியல்
இறுதியில் கிடைத்தது அது எனக்கு
மனிதனின் இதயத்தில் இருந்து
எவ்வளவு கொடுமையான இதயமாக இருந்தாலும்
ஒரு நாள்
கருணையால் ஈரமாக்கப்பட்டு
கண்ணீர் விடும்
பனிந்து மாணிக்கமொன்று போல
ஒளிக்கும் அந்த இதயத்தை
உற்றுநோக்குங்கள்
இவ்வுலகத்து எந்தொரு பொருளும்
அந்தளவு அழகியலைக் கொண்டதாக இல்லை.

சிங்கள மூலம் - மஹாகம சேகர
தமிழில் - சுவாமிநாதன் விமல்

சிங்கள மூலம் – நந்தன வீரசிங்ஹ
தமிழில் – சுவாமிநாதன் விமல்

அமைய மூலதன
கழிவுக்குவியலின் மேல் எழும்பி
தொழிற்சாலையால் உரிஞ்சிக் கொள்ளப்பட்ட
மனித உழைப்பின் வாசனையை
புகையால் மாசடைந்த வானத்தில்
பரப்புகின்றது
கடவுள் உலகத்து வாசனையாக.
கைத்தொழில் வர்த்தகப் பட்டுத்துணிகள்
அணிந்துகொள்ள விருந்து விழாக் கும்மாளங்கள்
நகரத்தின் ஆடம்பரங்கள்
இனிமையான கன்கட்டிவித்தைகள்
இயலாத இல்லாத நுகர்வோர்களின்
மனம் உள்ளங்களை வசியப்படுத்துகின்றன.
இறுதிக் காசையும்
மகரனின் வாய்க்குள் விடும்படி தூண்டும்
சூதாட்டங்களும் மதுபான விடுதிகளும்
கண்ணாடிப் பெட்டிகளில் உள்ள பொருட்களை
தொட்டுப் பார்க்கும்
இளம் வாழ்க்கையின் ஆதங்கங்கள்
தூசுக் காற்றுடன் அலைகின்றன.



நகரத்துச் சமாச்சாரம்

நல்லி நியோவானி

எம்.ஏ.நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகள்

ந.சத்தியபாலன்

கவிதை என்பது ஒரு மொழியில் வழங்கி வரும் சொற்களையும் தொடர்களையும் கொண்டே உருவாக்கப்படுகிறபொழுதும் கவிதையெனும் வடிவத்தில் வருகிற பொழுது பிறிதொரு மொழியாய் ஆகிவிடுகின்ற ஒரு கலை.

ஒரு கவிதையின் உருவாக்கத்தில் ஆத்மார்த்தமாக ஈடுபடும் ஒரு கவிஞனும் அவனுடைய படைப்பாக்கத் தளத்தை அடையாளம் கண்டு குறித்த கவிதையில் அவன் நிலை கொண்டுள்ள மையத்தைப் புலனுறுகின்ற வாசகனும் இக்கருத்தை நிச்சயம் ஒப்புக் கொள்வார்கள்.

கவிதையைப் படைப்பதென்பது வேறு, ஒருவர் ஒரு மொழியில் படைத்த கவிதையைப் பிறிதொரு மொழியில் தருவதென்பது வேறு.

கவிதை படைக்கப்படும்போது ஒருவன் தனது உள்ளுணர்வு, தனது பாடு பொருளுக்கும் தனக்கும் இடையிலான தொடர்பின் தூரம் அதனை முன்வைக்கும் மொழி என் பவற்றைத் தானே தீர்மானித்து அதனைப் படைக்கிறான்.

அவ்வாறு ஒருவன் தனது மொழியில் படைத்ததை வேறு ஒருவர் தனது மொழியில் தருவதற்கு முன்வருதல் என்பது மிகவும் சிரமமான மிகவும் பொறுப்பான காரியம். வெறுமே அந்த மொழியில் இருப்பதை இந்த மொழியில் தருகின்ற உயர்ந்த செயற் பாடல்ல அது படைப்பாளியின் உள்ளுணர்வு, படைக்கப்படும். சூழல் இதையெல்லாம் சரிவர இனம் கண்டு, மூலத்தின் உள்ளுயிர் சிதையாமல் தன்மொழியில் மீளத் தருதல் என்பது சாதாரண காரியம் அல்ல.

அரபு மொழியிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெயர்க்கப்பட்ட பலஸ்தீனக் கவிதைகளைத் தமிழ்மொழியில் தந்துள்ள நுஃமான் அவர்களின் பணி இந்த இடத்தில் குறிப்பிட்டுப் பாராட்ட வேண்டிய பெருமிதம் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக அமைகிறது. உயிரற்ற மொழிபெயர்ப்பாய் இல்லாது மிகப் பெரும்பாலான கவிதைகள் தமக்கான உள்ளுணர்வுத் தேட்டத்தைத் தாங்கி விளங்குகின்றன.

எம்.ஏ.நுஃமான்அவர்களுடன்இணைந்து கவிஞர் இ.முருகையன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளும் தமது பங்கில் கவிதையின் மூலத்துக்கு ஊறு செய்யாத வகையில் அமைந்துள்ளமையையும் குறிப்பிட வேண்டும்.

பலஸ்தீனக் கவிதைகளின் இரண்டாம் பதிப்புக்கான முன்னுரையில் நுஃமான் அவர்கள் தருகின்ற அறிமுகக் கருத்துக்க

ளோடு இக்கட்டுரையைத் தொடர்வது பொருத்தமாக அமையுமெனக் கருதுகிறேன்.

பலஸ்தீனக் கவிதைகள் வெளிப்படையான அரசியல் சார்புடையவை. இது பலஸ்தீனப் படைப்பாளிகளின் வாழ்நிலை அனுபவத்தின் அடிப்படையில் அமைவது. அவர்களின் ஒவ்வொரு உயிர்க்கணுவும் அன்றாட அரசியல் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. அவர்களால் அதிலிருந்து தப்ப முடியாது. பலஸ்தீனக் கவிதைகளை ஒருமித்துப் படிக்கும்போது அவை எல்லாமே ஒரே பொருளை வெவ்வேறு குரலில் பேசுவது போல நமக்குத் தோன்றக்கூடும் அடக்குமுறைக்கு அடி பணிய மறுக்கும் நாடற்று அகதியாக்கப்பட்டவர்களின் அவலமும், ஆவேசமும் அவ்வாறு தான் ஒலிக்கும் போலும்.

மேற் சொல்லப்பட்ட கருத்தின் பின்னணியில் பலஸ்தீனக் கவிதைகளை-அவற்றின் தமிழ் மொழியாக்கத்தை நோக்கலாம்.

ஆக்கிரமிப்பாளர்களின் கொடூர மனப்பான்மை பலஸ்தீனியர்களுக்கு இழைத்த துன்பங்கள் வார்த்தைகளில் எடுத்துரைக்க முடியாதவை. வன்முறையின் ஈவிரக்கமற்ற கரங்களில் சிக்கி அழிந்த அந்த மக்களின் வேதனைகளை எடுத்துரைக்கும் சான்றுகளாய் பலஸ்தீனக் கவிதைகள் திகழ்கின்றன.

மஹ்மூட் தர்வீஷ் எழுதிய 'எதிர்ப்பு' என்னும் கவிதை,

கவிதை
என் துடிக்கும் இதயத்தின் குருதி
என்றொட்டியின் உப்பு
கண்ணின் திரவம்
நகங்களால்
கண் இமைகளால்
கத்தி முனையால்
நான் அதை எழுதுவேன்,
கை விலங்கின் வேதனையிடையிலும்
நானதைப் பாடுவேன்
போரிடும் என் பாடலைப் பாட
என்னுள் ஒரு கோடி
வானம் பாடிகள் உள்ளன.

என அமைகிறது. எளிமையான சொல்லமைப்பிலும் உள்ளார்ந்த வேகம் புலப்படும் படியாக மொழிபெயர்ப்பு அமைந்துள்ளமை கவனிக்கப்பட வேண்டியது.

அதே கவிஞரின் இன்னோர் கவிதை

எம்மால் இயலும் போதெல்லாம் 'நாம் வாழ்வை நேசிக்கிறோம்' நடனம் செய்கிறோம்/ஒரு மினராவைக் கட்டியெழுப்புகிறோம்/அல்லது இரண்டு உயிர்த் தியாகிகள் மத்தியில்/வளரும் ஊதாச் செடிகளுக்காக ஈத்த மரங்களை வளர்க்கிறோம்/எம்மால் இயலும் போதெல்லாம் வாழ்வை நேசிக்கிறோம் என அமைகிறது.

ஆக்கிரமிப்பு, யுத்தம் என்பவற்றால் சிதையும் நிலையிலும் வாழ்க்கையின் பாலுள்ள மனிதனின் நேசிப்பை இவ்வரிகள் நிரூபிக்கின்றன.

போராட்டமே வாழ்வாகிப்போன பலஸ்தீனர்களின் வாழ்க்கையின் யதார்த்த நிலையைச் சுட்டுவதாக அமைந்த சமீஹ் - அல் - காசிமின் கவிதை ஒன்று இப்படி அமைகிறது. 'பல கடல்கள்/ஆனால் ஒரே ஒரு படகோட்டி/தாயே என்னை ஆசீர்வதி/ஒரே ஒரு பதாகை/அதற்கெதிராகப் பல காற்றுகள்/என் சகோதரி எனக்காக அழு /ஒரே ஒரு உயிர்/ஆனால் பல மரணங்கள்/என் அன்பே/என்னை மறந்துவிடு.'

பாசம், பிரியம், காதல் என்னும் மனிதனின் இயல்பான நல்லுணர்வுகளைப் பேணும் ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ள முடியாத மனிதனின் தூற்பாக்கிய நிலையை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

ஒரு சாதாரண மனிதனாக, ஒரு கலைஞனாக வாழும் ஒருவனின் மனித நேயம், கலையுணர்வு, தேசபக்தி என்பன எப்படியிருக்கின்றன என்பதைக் காட்டுகின்ற ஒரு கவிதையாக 'தௌபீக் சையத்'தின் என்னிடம் இருப்பதெல்லாம் என்ற கவிதை அமைகிறது. ஆக்கிரமிப்புக்குள்ளான ஒரு பிரதேசத்துக் கலைஞனின் குரலாக எழும் அது. 'என் தோளில் ஒருபோதும்/நான் துப்பாக்கி சுமந்ததில்லை... எனத் தொடக்கி என்னிடம் இருப்பதெல்லாம்/அசைக்க முடியாத நம்பிக்கை தான் துன்புற்ற என் மக்கள் மீதான/முடிவற்ற காதல் தான்' என முடிகிறது.

எத்தனை அழுத்தங்கள் நேர்ந்தாலும் ஒரு கலைஞனின் இதயத் தாகமும் தேசப் பற்றும் உயிர்ப்போடு விளங்கும் என்பதை இக் கவிதை எடுத்துரைக்கிறது.

யுத்தத்தின் கொடூரமான யதார்த்தம் மனிதனின் இயல்பான வாழ்க்கை மீது விளைவிக்கும் தாக்கம் எத்தனை துயரமானது என்னும் உண்மையைச் சொல்ல வரும் சமீஹ் - அல் - காசிம்,

'அவனது திருமண இரவில் / அவர்கள் அவனை / போருக்கு இட்டுச் சென்றனர் / கடினமான ஐந்து வருடங்கள் /சிகப்புத் தள்ளு வண்டியொன்றில் படுத்தவாறு / ஒரு நாள் அவன் நாடு திரும்பினான் /அவனது மூன்று புதல்வர்கள் / அவனைத் துறைமுகத்தில் சந்தித்தனர்.' என்ற கவிதை மூலம் எடுத்துச் சொல்கிறார்.

காலதேச வர்த்தமானங்களைக் கடந்து யுத்தமும் அடக்குமுறையும் மனித வாழ்க்கையை எத்தனை குரூரமாய்ச் சிதைக்கின்றன என்பதைப் பலஸ்தீனக் கவிதைகள் உயிர்ப்போடு எடுத்துரைக்கின்றன. இத்தகைய துன்பியல்கள் எங்கே எப்போது நிகழும் போதும், மனிதப் பெறுமதி எத்துணை அற்பமாக்கப்படுகிறது என்பதைப் பல கவிதைகள் சொல்லுகின்றன. அது போலவே இத்தகைய ஒடுக்குமுறைகள் அடிப்படையான மனித மனத்தின் தாகத்தை ஒரு சுதந்திர வாழ்வை அவாவி நிற்கும் உள நிலையை எவ்விதத்திலும் மாற்றிவிடமாட்டா என்பதையும் பல கவிதைகள் சொல்லுகின்றன.

அராபிய மக்களின் மீது கவிந்த அடக்குமுறைகள், நீதியான சமாதானத்தின் மீதான அவர்களது காதலை, மக்கள் மீதான நேசத்தை, ஆன்மாவை விற்கக் கோரும் அடக்குமுறையாளரின் அதிகாரத்துக்குப் பணியாத தன்மானத்தைப் பல கவிதைகள் சொல்லி நிற்கின்றன.

ஹனான் மிக்காயில் அஷ்றாவியின் 'கிட்டத்தட்ட நான்கு வயதுச் சிறுமி ஒருத்தியின் நாட் குறிப்பிலிருந்து' என்னும் கவிதை ஈவிரக்கமற்ற அடக்குமுறையாளரின் அதிகாரக் குருட்டுத்தனத்தை எடுத்துக் கூறுகிறது.

கவிதையின் மூல உயிர் எதனைச் சுமந்துள்ளதோ அதனை ஆங்கில மொழிபெயர்ப்பினூடாக அடையாளம் கண்டு, தமிழில் அதே உயிர்ப்போடு தர முனைந்துள்ள நுஃமான் அவர்கள் கையாளும் மொழி இந்நூலின் தனித் தன்மைக்கு ஒரு பலமாக அமைகிறது.

மொழி பெயர்ப்பாளர் குறிப்பிடுவதுபோல அரபு மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளைத் தமிழில் தருகின்ற காரியத்தில் அவர் எதிர்ப்பட்டிருக்கக் கூடிய சங்கடங்களையும் இக்கவிதைகளுக்கூடாக உணர முடிவதும் சில கவிதைகளில் அந்தந்தக் கலாசார வாழ் முறைகள் சார்ந்த நிலைமைகள் சித்திரிக்கப்படும்போது சில குறைபாடுகள் தென்படுவதும் தவிர்க்க இயலாததுதான். எனினும், முழு மொத்தக் கவிதைகளையும் படிக்கின்ற அனுபவத்தில் ஏற்படும் ஒரு நிறைவினையும் நாம் மறுக்க இயலாது.

முடிவாக, மொழிபெயர்ப்புக் கவிதையுலகில் நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகளுக்கான ஒரு இடம் எக்காலத்திலும் மறுக்கப்பட முடியாத ஒன்று என்பது அக் கவிதைகளில் பாடுபொருள் - பின்னணி மற்றும் மொழிக் கையாளுகை என்பவற்றினூடாக நிரூபிக்கப்படுவதை இத்தொகுப்பினூடாக யாவரும் உணர முடியும். ●

ஆங்கில மூலம்
வெனொனா காடினர்
தமிழில்
சி. ஜெயசங்கர்

டாடாங் கிறிஸ்ரியானோ

விழியின் பெண்

என் குடும்பத்தின் இதயம் நான்
என் சமூகத்தின் மையம் நான்
தேசத்தைச் சுமக்கின்றேன் என் முதுகில்
நாளைய வாழ்க்கையைச் சுமக்கிறேன் என் ஆத்மாவில்.

வன்முறைக்கு மேலாக எழுந்தேன் நான்
என்புகள் குணமாகின சிராய்ப்புகள் மறைந்தன
என் அச்சத்தை எதிர்கொண்டேன் நான்

ஆத்திரத்தை நான் ஆற்றுப்படுத்தினேன்
என்னைப் பாதுகாக்க
என் குழந்தைகளைப் பாதுகாக்க
மேலான படைப்பாளர் என் பக்கம் துணை நிற்க
அழிபாடுகளை விட்டு விலகி நடந்தேன் நான்

பேரலைகளை மாற்றும் வல்லமை கொண்டவள் நான்
இதற்குமேல் வேண்டாம் இனியொரு பொழுதும்
நிறுத்து! என்று சொல்ல வல்லவள் நான்

அதிர்வான விடியலின் பெண் நான்
காலைச் சூரியனுடன் எழுபவள் நான்
மிகப் பிரகாசமான வெளிச்சத்துடன்
அன்புடன், நம்பிக்கையுடன்
எதிர்காலத்தை என்னுள் பத்திரப் படுத்திருப்பவள் நான்.

குடும்ப வன்முறைக்கு எதிரான அபோரிஜினல் வட்டத்தினரால் மக்களை விழிப்பூணர்வூட்டும் கலைச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படுகின்ற கவிதையின் தமிழாக்கமே மேற்படி கவிதை.

U.S.C

17 வருட
சேவையில்...

உதயதாரகை கல்விக் கழகம்
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

- தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புகள்
- A/L கலை வர்த்தக வகுப்புகள்
- புலமைப்பரிசில் வகுப்புகள்
- விசேட ஆங்கில வகுப்புகள்
- மாதாந்தப் பரீட்சைகள்

NAT

NEW ASIANS TEXTILE

No: 285, Galle Road, Wellawatte, Colombo 06.

Tel: 011 2361158, 011 4988195

E-mail: newasianstex@gmail.com